Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 311 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 18, வெள்ளி 04.10.2013



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C


## 24,000 பேரால் வாக்காளர்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஒக். 04.
2013ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் எண்ணிக்கை 24 ஆயிரம் பேரால் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. புதிய வாக்களர் பட்டியலின் பிரகாரம் 50 ஆயிரத்து 500 பேர் வாக்காளராகப் பதிவதற்கு விண்ணப்பித்துள்ளனர். இதேவேளை கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இருந்தவர்களில் 26ஆயிரம் பேர்வரை நீக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த யூன் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன. இதன் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டவர்கள் கடந்த ஆண்டு

# தலைவர் பிரபாவின் வீடு நேற்று தகர்ப்பு

## வேணாவிலில் மக்களை வெளியேற்றிவிட்டு குண்டு வைத்து நிர்மூலமாக்கினர் படையினர்


முல்லைத்தீவு, ஒக்ரோபர் 04
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தியதாக நம்பப்படும் புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியிலுள்ள நிலக்கீழ் மாடிகளைக் கொண்ட வீடு நேற்று மாலை படையினரால் தகர்க்கப்பட்டுள்ளது.
அந்த பதுங்குழி வீட்டை தகர்ப்பதற்கு முன்னர் அதனைச் சுற்றியிருந்த மக்களை படையினர் வெளியேற்றியதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
பொதுமக்களுக்கு தகவல் வழங்கி அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி விட்டு புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதுங்குகுழி தகர்க்கப்பட்டது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.
எனினும் இது குறித்து தமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.
சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:
புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னி இருந்த போது புலிகளின் தலைவர் பிரபாகரனின் இருப்பிடமாக இந்த வீடே பயன்படுத்தப்பட்டது என்று படையினர் கூறிவந்தனர். இந்த வீடு நிலத்துக்குக்



## பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் 150 பவுண் தங்க நகைகள், பொருள்கள் சூறை

### புதன்கிழமை இரவு திருட்டுக் கும்பலின் துணிகரம்

யாழ்ப்பாணம், ஒக்.04
யாழ்.மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான பொன்னாலை வரதரா ஜப் பெருமாள் ஆலயத்தில் 150 பவுண் தங்க நகை, பணம், ஆலயப் பொருள்கள் என பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இந்த துனிகரச் சூறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
நன்கு திட்டமிட்டு ஆலயத்துக்குள் புகுந்த திருட்டுக் கும்பல் நீண்ட நேரம் அங்கு நின்று



இந்தத் துணிகரத் திருட்டை மேற்கொண்டுள்ளது.
அதே தினத்தில் பிரசித்தி பெற்ற மற்றொரு ஆலயமான மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத்திலும் உண்டியல் களவாடப்பட்டுள்ளது.
பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் மடப்பள்ளிக் கூரை வழியாக உள் நுழைந்த திருடர்கள், அறையின் கதவுகளை உடைத்து ஆலயத்துக்குள் புகுந்துள்ளனர்.
பின்னர் களஞ்சியத்தின் கதவுகளை உடைத்து உட்சென்று, அந்த அறையிலிருந்து மண்வெட்டி அலவாங்கு என்பவற்றை எடுத்து மூலஸ்தானத்துக்குச் செல்லும் கதவை உடைத்துள்ளனர். அங்கு எழுந்தருளி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த

## பொலிஸாருக்கு இரவு வாள் வெட்டு

### ஆனைக்கோட்டைச் சந்தியில் இனந்தெரியதாதோர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக்.04
ஆனைக் கோட்டையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஆரியரத்ன (வயது -37) என்ற பொலிஸாரே இவ்வாறு வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.
ஆனைக்கோட்டை - மானிப்பாய் வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 10 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
மேற்படி வீதியில் மோட்டார் சைக்கிளில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் இருவர் சென்று கொண்டிருந்த போது, திடீரென வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் பொலிஸாரில் ஒருவரை வாளால் வெட்டி விட்டு அங்கிருந்து

## முஸ்லிம்கள் கையிலும் ஆயுதம் அதற்கே மு.காவினர் ஆயத்தம்

### ஆபத்தானது என்கிறது தேசப்பற்று இயக்கம்

கொழும்பு, ஒக்.04
"வடக்கையும் - கிழக்கையும் இணைத்து தனி ஈழத்தை உருவாக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளமையானது, முஸ்லிம் மக்களும் ஆயுதம் ஏந்தக்கூடிய அபாயகரமான நிலைமைக்கு வழிவகுத்துள்ளது" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார நேற்று எச்சரிக்கை விடுத்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டிற்கு தற்போது சர்வதேசத்திலிருந்து அழுத்தங்களுக்கு மேல் அழுத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்கா முதல் ஐக்கிய நாடுகள்வரை தொடர்ந்தும் அழுத்தங்கள் வருகின்றமையினால் நாட்டின் சுய தன்மை இன்று பாதிப்படைந்துள்ளது.

## ஜனாதிபதி மஹிந்தவை சந்திக்க நேரம் கோருகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.04
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.
எனினும் நேற்றிரவு வரை நேரம் ஒதுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.
இருப்பினும் ஜனாதிபதி, நேரம் ஒதுக்கினால் இன்றைய தினமே சந்திப்பு இடம்பெறலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இன்னமும் பதவியேற்கவில்லை. அத்துடன் முதலமைச்சர் தவிர்ந்த ஏனைய அமைச்சுப் பதவிகளுக்கும் யாரும் நேற்றுவரை நியமிக்கப்படவுமில்லை.
மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் யார் முன்னிலையில் பதவியேற்பது என்பது தொடர்பிலும் இன்னமும் தீர்மானிக்கப்படாமலேயே உள்ளது.
இந்த நிலையில் அமைச்சுப் பதவிகளைத் தீர்மானிப்பதற்கும், யார் முன்னிலையில் பதவியேற்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி தலைவர்களிடையே

## ரணிலுக்கு எதிராக கையெழுத்து

கொழும்பு, ஒக்.04
ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலகவேண்டும் என வலியுறுத்தி தெய்வேந்திர முனையிலிருந்து நாளை 5ஆம் திகதி ஆரம்பமாகி 7 நாள்களுக்குத் தொடரும்எதிர்ப்புப்பேரணியின் போது ரணிலுக்கு எதிராக கையெழுத்து வேட்டையும் நடத்தப்படவுள்

## கூட்டமைப்பில் முஸ்லிம்கள் இன ஒற்றுமைக்கான வழி

### ரைம்ஸ் ஒவ் இந்தியா வரவேற்பு

புதுடில்லி,ஒக். 04
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேலதிக ஆசனம் ஒன்று மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை, இந்தியாவின் தி ரைம்ஸ் ஒவ் இந்தியா நாளிதழ் வரவேற்றுள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு மேலதிக ஆசனங்களில் ஒன்றை முஸ்லிம் வேட்பாளர் ஒருவருக்கும், மற்றுமொரு ஆசனத்தை வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுமாவட்டங்களுக்கு இடையில் சுழற்சிமுறையில் பகிரவும் தீர்மானிக்கப்பட்டது.
இவ்வாறு முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டமை

## இத்தாலி படகு விபத்தில் 82 பேர் சாவு

கொழும்பு, ஒக்.04
இத்தாலிக் கடலில் நேற்று படகு ஒன்று மூழ்கியதில் குறைந்த பட்சம் 82 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தென் இத்தாலி தீவானலம் பெடுஸாவுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச்சென்று கொண்டிருந்த படகே [illegible] செய்திகள் தெரிவித்

## கூட்டமைப்பை ஆதரித்ததால் இலங்கையில் உயிர் ஆபத்து

### ஈழத்தமிழர் தமிழகத்தில் பரபரப்புத் தகவல்

சென்னை, ஒக்.04
வடக்கு மாகாணசபைத்தேர்தலில் தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துச் செயற்பட்டமையால் சிங்களக் கட்சிகள் என்னை அச்சுறுத்தியதாலேயே நான் இலங்கையை விட்டுத் தமிழகத்துக்குத் தப்பி வந்தேன் என்று ஈழத்தமிழரான எம். செல்வராஜா தெரிவித்துள்ளார். அதிவேகப்படகில் இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு சென்று இறங்கிப் பரபரப்பை ஏற்படுத்தியவரே செல்வராஜா.
அதிவேகப் படகு மூலம் நேற்று முன்தினம் காலை தனுஸ்கோடி - முனைப்பகுதியைச் சென்றடைந்த இவர் தனுஸ்கோடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரிடம் மேற்கொள்ளப்பட்ட முதல்கட்ட விசாரணைகளில் தான் 10ஆயிரம் ரூபா செலுத்தியே படகில் வந்ததாக கூறியுள்ளார். அத்துடன் நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தான் தமிழ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்திரக் கொள்ளையரிடம் ஏமாந்தார் பிரபல வர்த்தகர்

### 4 லட்சம் ரூபா பறிபோனது

யாழ்ப்பாணம், ஒக்.04
மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் தீர்ந்துவிட்டது என தந்திரமாக நடித்து ஓட்டோவை வழிமறித்த இரு கொள்ளையர்கள் அதில் பயணம் செய்த வர்த்தகரிடம் இருந்த 4 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் தென்மராட்சி தெற்கு, மறவன்புலோவில் கடை நடத்தும் வர்த்தகர் ஒருவரே பணத்தைப் பறிகொடுத்துள்ளார்.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
வர்த்தக நடவடிக்கைகளுக்காக வங்கி ஒன்றில் பெற்ற மேலதிகப் பற்று பணத்தை செலுத்துவதற்காக அயலவர்கள் சிலரிடம் கடன் பெற்றுள்ளார். அவ்வாறு சேகரிக்கப்பட்ட 4 இலட்சம் ரூபாவை தனது ஓட்டோவில் கொண்டு சென்றுள்ளார்.
இதன்போது தனங்கிளப்பு வீதியில் ஆள்கள் அற்ற பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருவர் நின்றுள்ளனர்.
ஓட்டோவை வழிமறித்த இவர்கள் தமது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் தீர்ந்துவிட்டதாகவும் சாவகச்சேரி வரை செல்வதற்கு பெற்றோல் தருமாறு கூறியுள்ளனர்.
தன்னிடம் இருந்த பெற்றோலை கொடுக்க முற்பட்டு கீழே இறங்கிய கடைக்காரரை தாக்கிய இருவரும் அவரிடம் இருந்த பணத்தை பறித்துக்கொண்டு தலைமறைவாகினர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஜ-9)

# கூட்டமைப்பு வென்றாலும் அபிவிருத்தி தடைப்படாது

### நோர்வே தூதுவரிடம் கூறினார் சிறிபால டி சில்வா



கொழும்பு, ஒக்.04
ஐக்கிய நாட்டுக்குள் இலங்கையின் சகல பிரதேசங்களும் ஒரே விதமாக அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அரசு வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்த சகல அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்தாமல் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிரேட் லோசன் நேற்றுமுன்தினம் அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
வடக்கில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்தல் என்பதைச் சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளதால், அரசு அங்கு மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்திவிடும் என்று பரவிவரும் வதந்தி குறித்த நோர்வே தூதுவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நிமால் சிறிபால,
ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு மாகாணத்தை அரசு இலங்கையின் ஒரு மாகாணமாகவே கருதுகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென் பகுதிகளைப் போன்று வடக்குக்கும் அபிவிருத்தியின் நியாயத்தை நிறைவேற்றி வருகிறார். வடக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அந்த மாகாண சபை மத்திய அரசுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படவேண்டும்.
வடக்கு மாகாண மக்களுக்கு மிகவும் உயர்ந்த வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நோர்வே அரசு வழங்கிய அபிவிருத்தி ஒத்துழைப்புகள் மற்றும் உதவிகளை இலங்கை அரசு தொடர்ந்தும் எதிர்பார்த்துள்ளது என்றார்.
இங்கு கருத்து வெளியிட்ட நோர்வே தூதுவர், இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளமை நோர்வே அரசுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வடபகுதியின் அபிவிருத்திக்கு நோர்வே வழங்கி வரும் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் எனக் கூறினார். (த)

## திஸ்ஸவின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ள ரணில் மறுப்பு

கொழும்பு, ஒக்.04
ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மஹநுவர, குண்டசாலை தொகுதியின் ஐ.தே.க அமைப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ளதாகக் கட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க ஏற்க மறுத்துவிட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
மத்திய மாகாண சபைத் தேர்தலில் குண்டசாலை தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்தமைக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டே திஸ்ஸ அத்தநாயக்க அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## கண்டிக்கிறார் தவிசாளர்

வலி.தென்மேற்கு, ஒக்.4
வரலாற்று சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் திருடப்பட்டமை தொடர்பில் வன்மையான கண்டனத்தை தெரிவித்திருக்கிறார் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஜங்கரன்.
அண்மைக் காலமாக இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான சம்பவங்கள் மத ரீதியான முரண்பாட்டினை ஏற்படுத்தும்.
ஏற்கனவே மேற்படி ஆலயங்கள் தாக்கப்படும் விடயம் தொடர்பில் இந்த நாட்டின் ஜனாதிபதி அதற்குரிய பாதுகாப்பையும் தக்க ஒழுங்கையும் மேற்கொள்ள வேண்டும் எனக் கடிதம் அனுப்பியிருந்தேன். இருந்தும் திட்டமிட்ட முறையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கொள்ளை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு திருடர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் - என்று அவர் தனது கண்டனக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (ஓ-115)

## 8 ஆயிரத்து 505 வீடுகள் பொது மக்களிடம் கையளிப்பு

### இன்னும் 2 ஆயிரம் வீடுகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.4
யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த 8 ஆயிரத்து 505 வீடுகள் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், 26 ஆயிரத்து 720 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்,
இருப்பினும் இன்னமும் 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணி மற்றும் 2 ஆயிரம் வீடுகள்வரை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.
யாழ். மாவட்டத்தை 1996 ஆம் ஆண்டு இராணுவத்தினர் கைப்பற்றியதிலிருந்து, பொதுமக்களின் வீடுகள், காணிகளில் முகாம்கள் அமைத்திருந்தனர். இவற்றைப் படிப்படியாக இராணுவத்தினர் விடுவித்திருந்தனர். வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்பாக அதிகளவான வீடுகள் இராணுவப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டன.

**6 ஆயிரத்து 500 ஏக்கர் காணி மற்றும் 2 ஆயிரம் வீடுகள் வரை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.**

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தது முதல் இன்று வரை இராணுவப் பிடியிலிருந்து 8 ஆயிரத்து 505 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 26 ஆயிரத்து 720 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.
தற்போது 52ஆவது படைப் பிரிவின் பாவனையிலுள்ள 58 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-5)

## பெண்ணின் கைப்பை அபேஸ்

தென்மராட்சி, ஒக்.04
உசனில் இருந்து சாவகச்சேரிக்கு சைக்கிளில் வந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த நபர்கள் சன நடமாட்டமில்லாத பகுதியில் சைக்கிள் கூடைக்குள் வைக்கப்பட்டிருந்த கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 11 மணியளவில் கச்சாய் வீதி இரண்டாம் கட்டையடியில் இடம்பெற்றது. (ஓ-9)

## விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஒக்.04
அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த தங்கவடி வேலு உதய சங்கர் (வயது -24) என்பவரே நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தவராவார். (ஜ-86)

## கசிப்புக்குச் சட்ட ரீதியாக அனுமதி கோரும் அமுனுகம

கொழும்பு.ஒக் 04
இலங்கையில் கசிப்பு உற்பத்திக்குச் சட்டரீதியான அனுமதி வழங்கப்படவேண்டும் எனச் சர்வதேச நிதி விவகாரங்கள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சரும் பிரதிநிதியமைச்சருமான சரத் அமுனுகம தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைக் கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கசிப்பு உற்பத்திக்குச் சட்டரீதியான அனுமதி வழங்கப்படுவதன் மூலம் அரசின் நிதி வருவாய் இலக்கை அடைய முடியும்.
காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும் கசிப்பு உற்பத்திக்குச் சட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருந்தார்.
இலங்கையில் மது அருந்துவது அதிகரித்துள்ளது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழியாக நிதி திரட்டுவதற்காக இதனைப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (த)

# வடமேல், மத்திய முதலமைச்சர்கள் ஜனாதிபதி முன்பாகப் பதவியேற்பு



கொழும்பு.ஒக் 04
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சராக தயாசிறி ஜயசேகரவும், மத்திய மாகாண சபையின் முதலமைச்சராக சரத் ஏக்கநாயக்கவும் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். நேற்று முற்பகல் சுபவேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையிலேயே இவர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.
இந்த இரு மாகாண சபைகளுக்கான அமைச்சர்களும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.
ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதமர் டி.எம்.ஜயரத்ன மற்றும் மகாநாயக்க தேரர்கள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
கடந்த மாகாண சபைத் தேர்தலில் வடமேல் மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற தயாசிறி ஜயசேகர அந்த மாகாணத்தின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்ற உறுதிமொழி காரணமாகவே தயாசிறி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து அரசுடன் இணைந்துகொண்டார்.
மத்திய மாகாணத்தில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பின்னுக்கு தள்ளப்பட்டிருந்த சரத் ஏக்கநாயக்க மீண்டும் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அந்த மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.
மத்திய மாகாணத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பிரதமர் டி.எம். ஜயரத்னவின் மகன் அனுராத ஜயரத்னவே பெற்றிருந்தார். எனினும் அவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. அரசியல் அனுபவம் இன்மை இதற்குக் காரணமாகக் கூறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
எவ்வாறாயினும் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதல் முறையாக போட்டியிட்ட ஜனாதிபதியின் மூத்த சகோதரரும் சபாநாயகருமான ஷமல் ராஜபக்ஷவின் மகன் ஷசிந்திர ராஜபக்ச அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றதால் ஊவா மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மோசமான பயணக் கட்டுப்பாடு கொண்ட நாடுகளுடன் இலங்கை

கொழும்பு.ஒக் 04
உலகில் மிகவும் மோசமான பயண கட்டுப்பாடுகளை கொண்ட நாடுகள் வரிசையில் இலங்கை 88 ஆவது இடத்தில் உள்ளது.
ஹென்லி அன்ட் பார்ட்னர் நிறுவனம் 2013 ஆம் ஆண்டுக்கான விசா கட்டுப்பாட்டு குறியீட்டெண் என்ற இந்தத் தரப்படுத்தலை மேற்கொண்டுள்ளது.
இலங்கை தவிர ஆப்கானிஸ்தான், சூடான், ஈராக் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் உலகில் மோசமான பயணக் கட்டுப்பாடுகளை கொண்ட நாடுகள் வரிசையில் இடம்பெற்றுள்ளன.
ஹென்லி அன்ட் பார்ட்னர் நிறுவனம் தமது குடிமக்கள் சுதந்திரமான பயணம் செய்யக்கூடிய உலக நாடுகள் வரிசையை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரப்படுத்தலை மேற்கொண்டுள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக சாராயம் விற்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.4

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின் போது எதிரிக்கு குறித்த நீதிமன்றில் ஏற்கனவே இவ்வாறான இரு வழக்குகள் இடம்பெற்றதை பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதனையடுத்து எதிரிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## உப தபாலக கட்டடம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

புங்குடுதீவு, இறுப்பிட்டி உப தபாலகக் கட்டடம் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக சேதமடைந்திருந்த தபாலகத்தின் கட்டடம் தற்போது திருத்தியமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளது.


உபதபாலதிபர் திருமதி சுமித்திராதேவி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா, பேராசிரியர் கா.குகபாலன், எஸ்.இரட்ணசிங்கம், யாழ். தபாலதிபர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-7)

## வேலணையில் 6 வீதிகளுக்கு விமோசனம்

யாழ்ப்பாணம், ஒக்.4

வேலணை பிரதேச சபைப் பிரிவில் 'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் ஆறு வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் ஜே/21 இல் நவாலி வீதி, வர்த்தனவீதி ஆகியவையும் இல. ஜே/ 19 இல் கந்தசாமி வீதி, முருகேசு வீதி, அம்மன் வீதி, வேனல் குளம் வீதி ஆகியவையும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா தெரிவித்தார். (வ-7)



நல்லூர் சங்கிலியன் ஒழுங்கையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் செல்லும் வாய்க்காலின் மேல்மூடிகளில் ஒன்று உடைந்த நிலையில் காணப்படுகின்றது. மூடிகள் அண்மையிலேயே புதிதாக அமைக்கப்பட்டன. இந்தச் சிறிய உடைவு மேலும் பெரிதாகாமல் இதனைக் கூடிய விரைவில் சீர்செய்யவேண்டுமென இந்த வீதியூடாகப் பயணிப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## நயினாதீவுக்கு வழங்கப்பட்ட பஸ் அங்கு கொண்டு செல்ல நடவடிக்கை

### வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு



பஸ்ஸை எடுத்துச் செல்லக்கூடியதான 'பாஜ்' பழுதடைந்துள்ளதால் பஸ்ஸை அங்கு கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஒக். 4

நயினாதீவில் உள்ளூர் போக்குவரத்துக்கென புதிதாக வழங்கப்பட்ட பஸ்ஸை விரைவில் அங்கு எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா தெரிவித்தார்.

தற்போது அங்கு சேவையில் உள்ள பஸ் அடிக்கடி பழுதடைவதால் உள்ளூர் சேவை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு புதிய பஸ் ஒன்றை நயினாதீவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் அதனை எடுத்துச் செல்லக்கூடியதான 'பாஜ்' பழுதடைந்துள்ளதால் பஸ்ஸைக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் விரைவில் புதிய பஸ் நயினாதீவுக்கு எடுத்துச்செய்யபடும் எனவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-7)

# கைதடி இல்லத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின நிகழ்வு







குருநகர்,ஒக்.4

சர்வதேச முதியோர் வாரத்தின் முதல்நாள் நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்தில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான முதல்நாள் நிகழ்வின் காலை நிகழ்வுகளை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். காலை நிகழ்வாக கண்காட்சி இடம்பெற்றது. கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோரால் செய்யப் பட்ட உற்பத்திப் பொருள்கள், யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்பத்திப் பொருள்கள், கைதடி ஆயுள்வேத பல்கலைக்கழக மாணவர்களின் மூலிகைக் கண்காட்சி ஆகியவை இடம் பெற்றன.

பி.ப. 2 மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகளில் சொற்பொழிவுகளும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெற்றன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் பிரதம விருந்தினராகவும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மாலை நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். தேசியக்கொடியை வடமாகாண சபை பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸும், வடமாகாணக் கொடியை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரனும், முதியோர் இல்லத்தின் கொடியை முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரனும் ஏற்றி வைத்தார்கள்.

மாலை நிகழ்வின் கலை நிகழ்வுகளில் கைதடி முத்துக்குமாரசுமி வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் கைதடி செவிப்புலன் கட்புலனற்றோர் பாடசாலை மாணவர்களின் நடனமும் இடம்பெற்றன. (வ-51)

## 'கடேற்' பிரிவு அதிகாரிகள் தரத்துக்கு அதிபர்கள் 4 பேர்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் நான்கு அதிபர்கள் கடேற் பிரிவின் அதிகாரிகள் தரத்துக்கு நியமிக்கப்பட்டு நாளை நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிபர்களுக்குக் கடந்த ஜூன், ஜூலை (32 நாள்கள்) மாதங்களில் ரன்தென்ன தேசிய பயிர் இளவல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

குறித்த பயிற்சி வகுப்பில் ஆறு தமிழ் அதிபர்கள் உட்பட பல கல்லூரி அதிபர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியைநிறைவு செய்தவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறுமென அறிவிக்கப்பட்டு அதற்கான சீருடைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் தெய்வேந்திரராஜா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராசா, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகியோர் தெரிவாகினர். (வ-9)

# சிறுவர், முதியோருக்கு ஏற்படும் பாதிப்பு சமூகத்தையே இல்லாமல் செய்து விடும்

### இந்த நிலையே எமக்கு ஏற்பட்டுள்ளது என்கிறார் ஆறு.திருமுருகன்

அச்சுவேலி,ஒக்.4

"சிறுவர்களும் முதியோரும் சமூகத்தின் உயிர்நாடிகள். அவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள், குறித்த சமூகத்தையே இல்லாமல் செய்துவிடும். இந்த நிலை தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த கால போர்ச் சூழலும்- ஏழ்மையும் முதியோர்- சிறார்களின் வாழ்க்கையில் எதிர்பாராத பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன. இவற்றில் இருந்து மீண்டு அவர்கள் வாழ்வில் சிறப்புறுவதற்கு சகல தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்".

-இவ்வாறு கூறினார் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றும் போது கூறியதாவது:-

செல்வங்களில் மேலான செல்வம் குழந்தைச் செல்வம். தமிழ்ச் சமூகத்தில் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவடைந்து வருகின்றது. இந்த நிலை பற்றி உரிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். குழந்தைகள் கடவுளுக்கு சமமானவர்கள். இருக்கின்ற குழந்தைகளும் பல்வேறு சமூகத் தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதே போன்று முதியவர்களும் பாதிப்புக்களுக்கு உள்ளாகி உள்ளனர். உரிய பாதுகாப்பு, பராமரிப்பு இன்றி முதியவர்கள் அல்லற்படுகின்றனர்.

முதியவர்களும்-சிறுவர்களும் சமூக உயிர் நாடிகள். அவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்த சமூகத்தின் இருப்பையே இல்லாமல் செய்து விடும். போர்ச் சூழலும் வறுமை யும் சிறுவர் கள் முதியோரின் வாழ்க்கை யில் எதிர்பாராத பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இதில் இருந்து இரண்டு தரப்பினரையும் விடுவித்து ஆரோக்கியமான சூழலில் பேணி தமிழ் சமூகத்தின் இருப்பைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இதனை ஒவ்வொருவரும் தமது முதற் கடமையாகக் கொள்ள வேண்டும்.

**முதியவர்களின் வாழ்வில் பெரும் தாக்கம்**

முதியோரின் அனுபவம் ஆற்றல்களை இளைய தலைமுறையினர் உரியமுறையில் பயன்படுத்தி தங்களையும் சமூகத்தையும் வழிநடத்த வேண்டும். கூட்டுக் குடும்ப அமைப்பு குழம்பிவிட்டது. புலம் பெயர்வு வறுமை என்பன முதியவர்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. முதுமை எல்லோருக்கும் வரும். முதுமையை ரசிக்க வேண்டும். வெறுக்கக் கூடாது. முதியவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமது சொந்த இடத்தை, தமது காணி நிலத்தை எண்ணி ஏங்கிய வண்ணம் உள்ளனர். இதனை எனது வெளிநாட்டுப் பயணங்களின் போது அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் உள்ளூரில் வாழும் முதியவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

மூத்தோர் வார்த்தை தர்ம நியாயங்களையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. அதற்கு உரிய முறையில் மதிப்புக் கொடுத்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை உரிய முறையில் சகல நிலையிலும் பாதுகாப்பதன் மூலம் எமது எதிர்காலத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

**சிறுவர்களின் கைகளில் எமது எதிர்காலம்**


சிறுவர்கள் கள்ளம் கபடம் அற்றவர்கள். அவர்களது கைகளில் தான் எமது எதிர்காலம் தங்கியுள்ளது. சிறுவர்கள் சமகாலச் சூழலில் பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு, பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இது எமது பாரம்பரியத்தையே கேள்விக்குறியாக்கி உள்ளது. இதில் இருந்து சிறுவர்களை விடுவித்து உரிய முறையில் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

எனது நடைமுறை அனுபவமும் மூத்த அறிஞர்கள் வழங்கிய ஆலோசனைகளும் தான் முதியோர் இல்லம், சிறுவர் இல்லம், மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் என்பனவற்றை ஆரம்பிப்பதற்கு என்னைத் தூண்டியது. அதன் மூலம் சமூகத்துக்கு உதவ வேண்டும். சமூக வளர்ச்சிக்கு உழைப்பது மேலான பணி. அது ஆத்ம திருப்தியைத் தரும்- என்றார்.

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சற்குணராசா, அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர், எஸ்.சற்குணநாதன், கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் ப.சத்தியன் உட்படப் பலர் உரையாற்றினர். (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கில் வசதியற்ற மாணவர்களுக்கு பாதணிகள்



யாழ்ப்பாணம்.ஒக்.4

வவுனியா வடக்கு பிரதேச செயலக கல்வி அபிவிருத்தி கலாசார அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் வசதி குறைந்த மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட நெடுங்கேணி கோட்ட பாடசலை மாணவர்களுக்கு முதற்கட்டமாக 300 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக சின்னடம்பன் பாரதி வித்தியாலயம், மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி, நெடுங்கேணி மகா வித்தியாலயம், ஆகிய பாடாசலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த வாரம் பாதணிகள் வழங்கப்பட்டன.

அடுத்த கட்டமாக ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு நிதியம் ஊடாக பாதணிகள் வழங்கப்படவுள்ளன. (வ-14)

### நெடுந்தீவு, நயினாதீவு பகுதி முன்பள்ளிகளுக்கு

## போதிய வசதிகள் இல்லாததால் பசும்பால் வழங்க முடியாநிலை

### யாழ்கோ முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.4

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) போதிய வசதி இன்மையால் நெடுந்தீவு. நயினாதீவு பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கு கோரப்படும் அளவு பசும்பாலை வழங்க முடியாதுள்ளதாக சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த சங்கத்தால் யாழ். மாவட்டத்திலுள்ள எட்டுப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 150 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளுக்கு பசும்பால் விநியோகிக்கப் படுகிறது.



இந்த நிலையில் நெடுந்தீவு. நயினாதீவு பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கு 1,938 லீற்றர் பால் விநியோகிக்குமாறு குறித்த சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் போதிய வசதிகள் இன்மையால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளதாக சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார். (வ-7)

## சர்வதேச கூட்டுறவுத் தின விழாப் போட்டிகள்

வரணி, ஒக். 4

பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்படவிருந்த 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறும் என யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே இந்தப் போட்டிகளை 5.10.2013 அன்று கூட்டுறவான வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினம் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக பாடசாலைகளால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து விழா நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் ந.ப 12 மணி வரை வினாடி வினா போட்டியும், பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நாடகப் போட்டியும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் என கூட்டுறவுச் சபைஅறிவித்துள்ளது. (வ-122)

## சிறுவர் அரங்க போட்டியின் உப மாகாண போட்டி

மாங்குளம், ஒக்.4

வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் சிறுவர் அரங்கப் போட்டியின் உபமாகாண மட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை யில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராசா அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கே இந்த உப மாகாணப் போட்டி நடைபெறவுள்ளது.

வலய மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களே இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளதுடன் மாணவர்களை உரிய நேரத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்தார். (வ-422)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி கனகசபை

ஏழாலை மேற்கைப்பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கனகசபை நேற்று (03.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கணேசலிங்கம் (மகன்)
0213008357,
07891 32927

## ஹம்பாந்தோட்டையில் உல்லாசத் தீவு

கொழும்பு, ஒக்.4

விரிவாக்கப்பட்டு வரும் ஹம்பாந்தோட்டைத் துறைமு கத்தை அண்டி சிறப்பங்காடிக் கட்டடத் தொகுதிகள், உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கக் கூடிய இடங்களைக் கொண்டுள்ள மேலும் பல்வேறு வசதிகளை ஏற்படுத்துவதற்காக தீவு ஒன்றை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகளுக்காக அகழ்ந்தெடுத்து அகற்றப்படும் மணலைப் பயன்படுத்தி இந்தப் புதிய தீவு உருவாக்கப்படவுள்ளது.

துறைமுகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கு 808 மில்லியன் டொலர்கள் வரை முதலீடு செய்யப்படவுள்ளது.

இந்தத் தொகை சீனாவின் எக்ஸீம் வங்கியிடமிருந்தே பெறப்படவுள்ளது.

இந்தத் தீவில் தீர்வை வரிகள் அற்ற விற் பனைச் சாலைகள் மற்றும் ஓய்வு விடுதிகள் அமைப்பதற்கும் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். (ச-22)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை துரைச்சாமி

(அம்பாள் வெதுப்பக உரிமையாளர்)



ஆனைப் பந்தியைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை துரைச்சாமி நேற்று (03.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/3, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (சி12569-23)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி இராஜேஸ்வரி துரைச்சாமி



இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராஜேஸ்வரி துரைச்சாமி 01.10.2013 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி-லூர்துநாயகி தம்பதியரின் மூத்த மகளும், அன்ரனிராஜா (அமெரிக்கா), புஸ்பரட்ணம் (கனடா), அருட்சகோதரி பேர்ணிஸ் (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை - கொழும்பு), நீதிராஜா (ஆஸ்திரேலியா), நேசராஜா (கனடா), அருட்சகோதரி புவனா (திருக்குடும்ப கன்னியர் சபை -உரோமபுரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.10.2013) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, சேந்தாங்குளம், புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்சகோதரி பேர்ணிஸ் (கொழும்பு)

பத்தாவத்தை,
இளவாலை. (சி/12566) (10)

## கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய

### கந்தையா நடராசா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி/12565) (10)

தலைவர்,
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை விஜயரட்ணம்



யாழ்ப்பாணம், மயிலிட்டி, திருப்பூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-13, கல்பொத்த வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை விஜயரட்ணம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் பிரபல வர்த்தகரான வி.கே. ராசையா (வீ.கே.ஆர்), காலஞ்சென்ற தெய்வானையின் அன்பு மருமகனும் நேசக்கிளியின் (சந்திரா) அன்புக் கணவரும் விஜயராணி (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), விஜயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் சசிகரன் (பிரான்ஸ்), லோயனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அபிலாஷ், அக்ஷயா, சர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புஞ்சிபொறளை உதயனி மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (05.10.2013) சனிக்கிழமை பி.ப. 2.00மணியளவில் மாதம்பிட்டி இந்து மயானத்தில் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி12551-17-14)

24, கல்பொத்த வீதி,
கொழும்பு- 15.

தகவல்:
விஜயகுமார் ([illegible])
0112459486 - 0033-651894406

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.09.2013 புதன்கிழமை சிவபதமடைந்த

### அமரர் திருமதி புவனராணி சண்முகதாஸ் (பவி அக்கா)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.10.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி.
அத்தியடி, யாழ்ப்பாணம். 021 222 2987

(32285-23)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதுமட்டுவாழிலும் ரயில் நிலையம்

தென்மராட்சி.ஒக்.4
எழுதுமட்டுவாழில் ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் ரயில் நிலையம் அமைக்கப்படாததால் எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதையடுத்து குறித்த நிலையம் அமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முன்னர் எழுதுமட்டுவாழ் ரயில் நிலையம் இயங்கிய காலத்தில் கிளாலி, முகமாலை, எழுதுமட்டுவாழ், நாகர்கோயில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த ரயில் நிலையத்தைப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## ஒக்ரோபர் மாத ஒய்வூதியம் வழங்கல்

தென்மராட்சி.ஒக்.4
சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு ஓய்வூ தியர்களுக்கான ஒக்ரோபர் மாத ஒய்வூதியம் முன்கூட்டியே வழங்கப்படவுள்ளது.
திறைசேரியால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் ஒக்ரோபர் மாத ஓய்வூதியம் எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
முதியோர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒக்ரோபர் மாத ஓய்வூதியத்தை முன் கூட்டியே வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து எதிர்வரும் 7 ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்படுமென ஒக்ரோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் மூலம் ஓய்வூதியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மதுவரித் திணைக்களத்தால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்


யாழ்ப்பாணம். ஒக்.4
சர்வதேச மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சகல மதுவரித் திணைக்களத்தாலும் நேற்று விழிப்புணர்வுச் செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
அதிகரித்து வரும் மது பாவனை மற்றும் குற்றச் செயல்களால் பிரதேசத்தில் ஏற்படும் கலாசார சீரழிவுகள், குடும்ப விரிசல்கள் தொடர்பாக கிராம மட்டத்தில் மக்களை ஒன்றிணைத்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. குறிப்பாக இளம் சமுதாயத்தினர் மதுபாவனைக்கு அடிமையாவதால் உண்டாகும் தீங்கு தொடர்பிலும் சுகாதார ரீதியாக உடலில் ஏற்படக்கூடிய நோய்த்தாக்கங்கள் தொடர்பாகவும் விளக்கம் அளித்தனர்.
இதனை விட கிராம மட்டத்தில் குடும்பத் தலைவர்களாக உள்ளவர்கள் மதுப்பிரியர்களாக இருப்பதால் வீட்டில் ஏற்படும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் குடும்ப உறவுகளுக்கு இடையே ஏற்படும் விரிசல் தொடர்பாகவும் விளக்கமளித்தனர். சர்வதேச மது ஒழிப்பு தினமான நேற்று சகல மது பான விற்பனை நிலையங்களும் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

## மருந்துப் பொருள் கொள்வனவுக்கான மானியத்தை அதிகரிக்கக் கோரிக்கை

**புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலையில்**

வலி.தென்மேற்கு. ஒக். 4
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்கு அரசால் வழங்கப்படும் மானியம் போதுமானதாக இல்லாததால் நோயாளர்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.
எனவே வசதியீனங்கள் மத்தியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி மருந்துப் பொருள்கள் கொள்முதல் செய்ய வழங்கப்படும் மானியத்தின் தொகையை அதிகரிக்குமாறு மக்கள் கோரியுள்ளனர்.
புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இரு பிரதேசங்களும் 46 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசமாகும். குறித்த பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்காக ஒரே ஒரு ஆயுள்வேத வைத்தியசாலை மட்டும் ஒட்டுசுட்டானிலுள்ள புதுக்குடியிருப்பு உப அலுவலகத்தில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகிறது.
ஒலுமடுவிலுள்ள உப அலுவலகத்தில் இயங்கி வந்த ஆயுள்வேத வைத்தியசாலை அங்கு இராணுவம் நிலை கொண்டுள்ளதால் மூடப்பட்டுள்ளது. உப அலுவலகம் மட்டும் திருமுறிகண்டியில் இயங்கி வருகிறது.
மருந்துப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளதாலும் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும் மக்களுக்குத் திருப்திகரமான சேவையைச் செய்ய முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.
எனவே மருந்துப் பொருள்கள் வாங்குவதற்கான மானியத்தின் தொகையை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை மக்கள் கோரியுள்ளனர். (வ-115)

# கிளாலி வயல் நிலங்களுக்கு அணை அமைக்க அனுமதி



கொடிகாமம், ஒக்.4
கிளாலிப் பகுதியில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இறங்குதுறைக்குச் செல்லும் பாதையை மீனவர்கள் நிரந்தரமாகப் பயன்படுத்துவதற்கும் வயல் நிலங்களுக்குள் கடல் நீர் உட்செல்லாமல் தடுப்பணை அமைப்பதற்கும் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.
அதையடுத்து கடற்படையினரால் அமைக்கப்பட்டிருந்த தடுப்பு வேலியை உடனடியாக அகற்றிய கடற்றொழிலாளர்கள் அன்றைய தினமே குறித்த பாதையைப் பயன்படுத்தியுள்ளனர்.
இராணுவ நடவடிக்கை காரணமாக கிளாலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்கள் 17 வருடங்களுக்குப் பின் 2010ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்டனர்.
கடற்றொழிலாளர்கள் காலம் காலமாகப் பயன்படுத்தி வந்த இறங்கு துறையையும் அதற்குரிய பாதையையும் பயன்படுத்துவதற்கு அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினர் அனுமதி வழங்காததால் அந்தப் பகுதியில் தற்காலிக இறங்கு துறையை அமைத்து கடற்றொழிலாளர் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.
கடற்படையினரின் இந்தச் செயல் குறித்து மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து கடந்த மாதம் 19ஆம் திகதி இறங்குதுறையையும் அதற்குரிய பாதையையும் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கிய கடற்படையினர் மறுநாள் 20ஆம் திகதி பாதையைப் பயன்படுத்தத் தடை விதித் திருந்தனர். கடற்படையினரின் செயற்பாடு குறித்து கடற்றொழி லாளர்கள் மீண்டும் சம்பந்தப்பட்ட வர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
இந்த நிலையில் பத்துத் தினங்களுக்குப் பின் நேற்று முன் தினம் புதன்கிழமை இறங்கு துறைக்குச் செல்லும் பாதையை கடற்றொழிலாளர்களிடம் நிரந்தரமாக வழங்க முன்வந்துள்ள கடற்படையினர் மாலை 4 மணியளவில் பாதையைத் திறந்து விட்டனர்.
கிராம உத்தியோகத்தர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் பிரதிநிதி ஆகியோர் முன்னிலையில் பாதை திறந்து விடப்பட்டதையடுத்து அங்கு நின்ற கடற்றொழிலாளர்கள் அமைக்கப்பட்டிருந்த தடுப்புவேலியை அகற்றி உடனடியாகவே பாதையைப் பயன்படுத்தினர்.
இதேவேளை கிளாலிப் பகுதியிலுள்ள நெல் வயல் நிலங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கடல்நீர் உட்செல்லாதவாறு ஐ.ஓ.எம். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வந்த தடுப்பணையையும் அமைக்க விடாமல் தடுத்து நிறுத்திய கடற்படையினர் தற்போது மேற்படி அணையைக் கட்டுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.
இதையடுத்து தடுப்பணை அமைக்கும் பணிகள் குறித்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ளன. (வ-115)

## வீட்டுக்குரிய ஆவணங்கள் பயனாளிகளிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.4
யாழ்.மாவட்டத்தில் வீடமைப்பு அதிகார சபையால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டவர்களில் 38 பயனாளிகளுக்கு அதற்குரிய உறுதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் வைத்து வழங்கப்பட்டன.
கடந்த 30 வருடங்களுக்கு முன்பு யாழ்.மாவட்டத்தில் வீட்டு வசதிகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வந்துள்ளதையடுத்து அரச காணிகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்ட பயனாளிகள் வீட்டுக்குரிய வாடகைப் பணத்தைச் செலுத்தி வந்தனர். வாடகைப் பணத்தை முற்றாகச் செலுத்தியவர்கள் தங்கள் வீட்டுக்குரிய உறுதிப் பத்திரத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரி வந்தனர்.

> வாடகைப் பணத்தை முற்றாகச் செலுத்தியவர்கள் தங்கள் வீட்டுக்குரிய உறுதிப் பத்திரத்தை வழங்குமாறு சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் கோரி வந்தனர்.

இந்த நிலையில் உலக வதிவிட தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் வைத்து 38 வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-115)

## மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணல்

வலி.வடக்கு. ஒக். 4
யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒன்பது மாத காலத்தில் கடந்த மாதம் மட்டும் மலேரியா நோயாளி இனம் காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மலேரியா திணைக்கள பொறுப்பு வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரன் தெரிவித்தார்.
இந்தியாவில் இருந்து வருகை தந்த அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் சேர்க்கப்பட்டார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையின் போது மலேரியா தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
குறித்த நோயாளி மீண்டும் இந்தியா சென்றுவிட்ட தாகவும் இத்தகைய இடங்களில் இருந்து வருவோர் கட்டாயமாகத் தொற்று நோய்க்கான மருத்துவப் பரிசோதனையை மேற் கொண்டு உரிய தடுப்பூசிகளை ஏற்ற வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-86)

**தேர்தல் தினத்தன்று வரணியில் தாக்குதல் சம்பவம்:**

## சாவகச்சேரி பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

> இந்தச் செயலை கண்டிப்பதுடன் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

யாழ்ப்பாணம்.ஒக்.4
தேர்தல் தினத்தன்று வரணி வாக்களிப்பு நிலையத்துக்கு சமீபமாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்கு சாவகச்சேரி பிரதேச சபை கடந்த மாதம் 27 ஆம் திகதி சபைக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
கடந்த மாகாண சபைத் தேர்தல் அன்று வரணி தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த முகவருக்கு மதிய உணவு கொடுக்கச் சென்ற உப தவிசாளர் க.யோகராசா சிவில் உடை தரித்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அவரை விடுதலை செய்வதற்காகச் சென்ற மாகாண சபை வேட்பாளர் கேசவன் சயந்தன், உறுப்பினர் ஸ்ரீ. ஸ்ரீரஞ்சன் ஆகியோரது வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.
இந்தச் செயலை கண்டிப்பதுடன் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## பொருளாதார புள்ளி விவரம் திரட்டும் பணி அடுத்த மாதம்

வலி.வடக்கு. ஒக்.4
இலங்கை புள்ளி விவரத் திணைக்களத்தால் பொருளாதார புள்ளி விவரங்கள் திரட்டும் பணிகள் அடுத்த மாதம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. ஏற்கனவே நடந்து முடிந்த குடிசன மதிப்பீட்டைத் தொடர்ந்து பொருளாதார புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவது வழமையாகும்.
முதற்கட்டமாக இலங்கை புள்ளிவிவரத் திணைக் களத்தால் மாவட்ட மட்டத்தில் புள்ளி விவரப் பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கொழும்பில் நடைபெற்று முடிவடைந்துள்ள நிலையில் மாவட்டங்களில் புள்ளி விவரங்களை சேகரிக் கும் பணிகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவது குறித்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.
குறிப்பாக கைத்தொழில்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்களை ஒன்றிணைத்து கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் சிறுநீரகக் கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 4
சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ஐநூறு ரூபா வழங்க வேலணை பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.
வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் அதற்கான ஆவணங்களுடன் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும். நோயாளியின் வாழ்வுக் காலம் வரை குறித்த கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.
கிராம அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதேச அல்லது உதவிப் பிரதேச செயலாளரால் ஒப்பமிடப்பட்ட விண்ணப்பதாரியின் உதவி கோரல் கடிதம், விண்ணப்பதாரியின் தேசிய அடை யாள அட்டையின் பிரதி (18 வயதுக்கு மேற்பட்ட வர்களுக்கு மட்டும்) வைத்திய நிபுணரின் மருத்துவச் சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட்ட திகதி என்பன சமர்ப்பித்தல் வேண்டும்.
குறித்த நோய்க்கான கொடுப்பனவை வழங்குவதற்கு சமூக சேவைத் திணைக்களத்தால் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகள் தடையாக அமையாது.
மாதாந்தம் ரூபா 4,000 க்கு குறைந்த வருமானம் பெறுபவர் என்பது கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் பிரதேச செயலர் குறிப்பிட்டார். (வ-7)

## பரீட்சை நிலையத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.4
நாளைய தினம் 5 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவிருந்த இரண்டாம் தேசிய மொழிப் பரீட்சை நிலையம் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கிராமத்தை ஆக்கிரமித்தது பாக்.

## 9 நாள்களாக நடைபெறும் மோதல் வெளிச்சத்துக்கு வந்தது இப்போது



ஸ்ரீநகர், ஒக்.4
இந்தியாவின் காஷ்மீர் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்துள்ள தீவிரவாதிகள் அங்குள்ள கிராமம் ஒன்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
ஊடுருவியுள்ள தீவிரவாதிகளுடன் பாகிஸ்தானின் சிறப்பு அதிரடிப்படையினரும்இணைந்துள்ளனர் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்கள் கடந்த 9 நாள்களாக இடம்பெற்று வருகின்றபோதும் தற்போதே இதுகுறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்து இந்திய இராணுவத் தரப்பு தகவல் வெளியிடுகையில்.
"குறித்த பகுதியில் 40க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என்று நம்புகின்றோம். தீவிரவாதிகள் ஊடுருவிய விதத்தையும், இடத்தையும் பார்க்கும்போது பாகிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் அதில் இடம் பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள் ளது. பாகிஸ்தான் ராணுவத்தின் தொடர்பு பற்றி இப்போதே திட்டவட்டமாக கூறுவது சரியாக இருக்காது. தீவிரவாதிகள் கடந்த காலங்களில் நடத்திய ஊடுருவல் முயற்சிகளில் இருந்து. இது முற்றிலும் மாறுபட்டுள்ளது. சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே. நேற்றிரவு 10 முதல் 12 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து ஊடுருவ முயன்றனர். அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. தற்போது இதுகுறித்து உறுதியாக எதுவும் கூறமுடியாது. தாக்குதல்கள் முடிவடைந்த பின்னரே கூறமுடியும். இது வரை இந்திய வீரர்கள் 5 பேர் காயம் அடைந்துள்ளனர்." என்று கூறியுள்ளன.
தற்போது அந்தக் கிராமம் இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. தற்போது வெளியாகியுள்ள இந்தத் தகவலால் இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் கொந்தளிப்பான நிலை தோன்றியுள்ளது. (ற)

## நீதிமன்றம் வரவேண்டும் ஜெயலலிதா

### சொத்துக் குவிப்பு வழக்கில் உத்தரவு

சென்னை, ஒக்.4
வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவித்தார் என்று கூறித் தொடரப்பட்டுள்ள வழக்கில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்வரும் 30 ஆம் திகதி நேரில் முன்னிலையாக வேண்டும் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
குறித்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோரும் நேரில் முன்னிலையாக வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நேற்று விசாரணைக்கு வந்த வழக்கை சிறப்பு நீதிமன்றத் தற்காலிக நீதிபதி முடிகவுடர் விசாரித்தார். அதன்போது ஜெயலலிதா முதலமைச்சராக இருப்பதால் பணி நிமித்தமாக நேரில் முன்னிலையாவதற்கு விலக்கு அளிக்குமாறு ஜெயலலிதா தரப்பால் வாதிடப்பட்டது.
எனினும் இம்முறை மட்டும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்த நீதிபதி, இனிவரும் விசாரணைகளின் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவரும் கண்டிப்பாக நேரில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிட்டார். (ற)

## கோயில்களை விடவும் கழிவறைகளே முக்கியம்

### குஜராத் முதலமைச்சர் மோடி கூறுகிறார்


புதுடில்லி, ஒக்.4
கோயில்களை விடவும் கழிவறைகளே முக்கியமானவை. அவற்றையே முன்னுரிமை கொடுத்துக் கட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
புதுடில்லியில் இளைஞர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
"ஹிந்துத்துவா தலைவராக நான் அறியப்படுகிறேன். எனது இந்தத் தோற்றம் இவ்வாறு சொல்வதற்கு அனுமதிக்காவிட்டாலும், என்னுடைய உண்மையான எண்ணத்தை தைரியமாகச் சொல்கிறேன். முதலில் கழிவறைகளைக் கட்டிவிட்டு பின்னர் கோவில்களை கட்டுவோம். கிராமங்களில் கோவில்களை கட்டுவதற்கு பல லட்சம் ரூபா செலவழிக்கப்படுகிறது. ஆனால் அங்கு போதிய கழிவறை வசதிகள் இல்லாததால் பெண்கள் திறந்த வெளிகளைக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்தும் அவலம் நீடிக்கிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## லாலுவுக்கு 5 ஆண்டுகள் சிறை பறிபோகின்றது அவரது பதவி

ராஞ்சி, ஒக்.4
மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் குற்றவாளியென அறிவிக்கப்பட்ட பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 25 லட்சம் ரூபா அபராதமும் விதித்து ராஞ்சி சி.பி.ஐ. நீதிமன்றம் பரபரப்பான தீர்ப்பளித்துள்ளது.
பீகார் மாநிலத்தில் 950 கோடி ரூபா மாட்டுத் தீவன ஊழல் வழக்கு கடந்த 17 வருடங்களாக நடைபெற்று வந்தது. இந்த வழக்கில், அம்மாநில முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவை குற்றவாளி என கடந்த 30 ஆம் திகதி ராஞ்சி சிறப்பு சி.பி.ஐ. நீதிமன்றம் அறிவித்தது. அத்துடன் அந்த வழக்கில் லாலு பிரசாத், ஜெகன்நாத் மிஸ்ரா மற்றும் ஜெகதீஷ் சர்மா உள்பட 45 பேர் குற்றவாளிகள் என்று நீதிபதி தீர்ப்பு அளித்தார்.
அவர்களுக்கான தண்டனை விவரத்தை நேற்று வெளியிட்டது நீதிமன்றம். அதன்படி, லாலுவுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். மேலும் இவ்வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட மற்றொரு முன்னாள் முதல்வர் ஜெகன்நாத் மிஸ்ராவுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறை தண்டனை பெற்றால் பதவியை இழக்க நேரிடும் என்பதால் அவர்கள் தங்களது பதவிகளை இழக்கிறார்கள்.(ற)

## முதலிடம் பிடிக்கும் இந்தியா

பரிஸ், ஒக்.4
2050ஆம் ஆண்டுக்குள் 160 கோடி மக்கள் தொகையுடன் சீனாவைப் பின்னுக்கு தள்ளி இந்தியா சனத் தொகையில் முதலிடம் பிடிக்கும் என பிரான்ஸின் ஆய்வறிக்கைஒன்றுகூறுகின்றது.
அதேசமயம் 130 கோடி மக்கள் தொகையுடன் சீனா இரண்டாம் இடத்துக்கு தள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை அப்போது உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 970கோடியாக உயரும்எனவும் கூறுப்படுகின்றது.
கடந்த 200 ஆண்டுகளில் உலக மக்கள்தொகை 7 மடங்கு அதிகரித்து தற்போது 710 கோடியாக உள்ளது.
இதில் 130 கோடி பேர் சீனாவிலும், 120 கோடி பேர் இந்தியாவிலும் உள்ளனர். அதாவது ஒட்டுமொத்த உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியா மற்றும் சீனாவில் உள்ளவர்கள் என்பது இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. (ற)



நேற்றுமுன்தினம் இந்தியாவில் மகாத்மா காந்தியின் பிறந்த தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மகாத்மா காந்தி போன்று வேடமணிந்து கலைநிகழ்ச்சியில் பங்கேற்கும் சிறார்கள்.

## விரைவில் ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல்

புதுடில்லி, செப்.4
ராஜஸ்தான், மத்திய பிரதேஷ், சட்டீஸ்கர் மற்றும் மிஷோரம் புதுடில்லி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சட்டசபை தேர்தல் தீபாவளிக்குப் பின்னர் நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
சட்டசபை தேர்தல் இந்த ஐந்து மாநிலங்களுக்கும் 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் கூட்டியே திட்டமிட்டபடியே நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையர் தெரிவித் துள்ளார்.
அதையடுத்து தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.(ற)


## தெலுங்கானா தலைநகர் ஐதராபாத்

புதுடில்லி, ஒக்.4
தெலுங்கானா மாநிலத்தின் தலைநகராக ஐதராபாத்தை அறிவிக்கமத்திய அமைச்சரவை முடிவுசெய்திருப்பதாகத்தெரிகிறது.
நடைபெற இருக்கும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. அப்போது அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஐதராபாத்தை தெலுங்கானா மாநிலத் தலைநகராக அறிவிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.
அமைச்சர்கள் குழு ஒன்றை அமைத்து, புதிய தலைநகர் முடிவு குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.(ற)

# "என் குளத்தைக் கண்டுபிடித்துத் தாருங்கள்"

## காந்தியிடம் மனுக் கொடுத்தவரால் பரபரப்பு

சென்னை, ஒக்.4
'நான் ஏலம் எடுத்த குளத்தை காணவில்லை' என்று மகாத்மா காந்தி சிலையிடம் ஒருவர் மனுக் கொடுத்துப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் திருவாரூரைச் சேர்ந்த நிஜாமுதீன்.
அவர் தமது அந்த மனுவில்,
"பேரூராட்சிக்குச் சொந்தமான ஜானகி குட்டை என்ற குளத்தை ஏலத்தொகையும், வரியும் கட்டி 2012 ஆம் ஆண்டு ஏலம் எடுத்தேன். குளத்தில் மீன்குஞ்சுகள் விட குளத்தை போய் பார்த்த போது இருந்த இடத்தில் அந்தக் குளத்தை காணவில்லை.
இதுகுறித்து பேரூராட்சி நிர்வாகம், பொலிஸ் நிலையம், தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து அதிகாரிகளிடமும் குளத்தை கண்டுபிடித்து தர கோரிக்கை விடுத்தேன்.
இதுவரை பயன் இல்லை. எனக்கு வேறு வழியும் தெரியவில்லை.
எனவே வெள்ளைக்காரனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த நீங்கள் காணாமல் போன நான் ஏலம் எடுத்த குளத்தையும் கண்டுபிடித்துத் தாருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.
மனுவைக் கொடுத்து விட்டு [illegible] முன்னால் நின்று [illegible] எழுப்பினார்.



**வெள்ளைக்காரனிடமிருந்து சுதந்திரத்தை பெற்றுத்தந்த நீங்கள் காணாமல் போன, நான் ஏலம் எடுத்த குளத்தையும் கண்டுபிடித்து கொடுங்கள்**

அவரின் இந்த விநோதப் போராட்டத்தால் பெருந்திரளான மக்கள் அந்தப் பகுதியில் கூடினர். அதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 நாள்களில் 23 பேருக்கு தூக்கு

தெஹரான், ஒக்.4
ஈராக்கில் இருநாள்களில் 23 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதுகுறித்து ஈராக் நீதித்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள தகவலில், "ஈராக்கில் கடந்த ஆண்டு மட்டும் 90 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. கடந்த மாதம் 22 மற்றும் 26 ஆம் திகதிகளில் 23 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
அவர்களில் 20 பேர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து தண்டனை வழங்கப்பட்டது. மற்றைய மூவரும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தமையால் தண்டனை விதிக்கப்பட்டது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



மத்திய வியட்நாமில் சூறாவளி மற்றும் வெள்ளத்தால் சிறுவனொருவன் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். 26க்கும் அதிகமானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கடலுக்குச் சென்ற 70க்கும் அதிகமான மீனவர்கள் காணாமற் போயுள்ளனர். மணிக்கு 103 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளியால் 2.5 இலட்சம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. சூறாவளி காரணமாக குறித்த பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

## ஸ்நோடன், மலாலாவுக்கு விருது

லண்டன், ஒக்.4
அமெரிக்காவின் இரகசிய உளவு நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடன் மற்றும் பாகிஸ்தானின் பெண் குழந்தைகளின் கல்விக்காகப் போராடிய சிறுமி மலாலா ஆகியோர் ஐரோப்பிய நாடாளுமன்றில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உயரிய விருதான 'சஹாரோவ்' விருதுக்கே அவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களைத் தவிர 2010ஆம் ஆண்டு பெலாரஸ் நாட்டு ஜனாதிபதியாக அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவானதை எதிர்த்து மினஸ் நகரில் பெரும் போராட்டம் நடத்திய அலீஸ் பைலட்சகி, எட்வேர்ட் லோபா மற்றும் மிகோலா ஸ்டாட்கேவிச் ஆகியோரும் இந்த விருதுக்குத் தெரிவாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## நாளிதழ்களுக்கு தடை விதித்தது தான்சானியா

லண்டன், ஒக்.4
தான்சானியாவில், தேசத்துரோக கருத்துக்களைப் பரப்புவதாகக் கூறி ஸ்வாஹிலி மொழியில் வெளியாகும் இரண்டு முக்கிய நாளிதழ்களுக்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள தான்சானிய அரசு, "எம்வனாஞ்சி மற்றும் எம் தான்சானியா ஆகிய நாளிதழ்கள் காழ்ப்புணர்ச்சியுடன் கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. அதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அரசின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை குலைக்கும் வகையில் அவை தொடர்ந்து கருத்துகளை வெளியிட்டு வந்ததால் அந்த நாளிதழ்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளது. (ற)

## அழிக்கும் பணி ஆரம்பம்
### சிரியா சென்றனர் நிபுணர்கள்

டமாஸ்கஸ், ஒக்.4
சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொள்வதற்காக சர்வதேச நிபுணர்கள் குழு சிரியத் தலைநகர் டமாஸ்கஸ் சென்றுள்ளது.
19 பேர் அடங்கிய இந்தக் குழு சிரியாவில் அழிக்கப்படவேண்டிய இரசாயன ஆயுதங்கள் குறித்த பணிகளை நேற்று ஆரம்பித்துள்ளது. அவர்களுடன் 14 ஐ.நா. பணியாளர்களும் டமாஸ்கஸ் சென்றுள்ளனர்.



நிபுணர் குழுவின் முதற்கட்ட நடவடிக்கையாக சிரிய அதிகாரிகள் கொடுத்த தகவல்கள் சரியானவைதானா என்பது குறித்துத் உறுதிப்படுத்தும். அதனைத் தொடர்ந்து இரசாயன ஆயுதங்களை அழிக்கும் வழிமுறைகள் குறித்து திட்டங்கள் வகுக்கப்படும்.
மதிப்பீட்டுப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் முடிப்பதற்குத் திட்டமிட்டுள்ள இந்த நிபுணர் குழு, 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் மத்திக்குள் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணிகளை நிறைவு செய்யமுடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
சிரியாவில் 45 இடங்களில் வைக்கப்பட்டுள்ள 1,000 தொன்களுக்கும் மேற்பட்ட சரீன், மஸ்டர்ட் வாயு மற்றும் இதர தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை அழிப்பது மிகவும் கடுமையான பணியாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. (ற)

## பேச்சுக்கள் இனி இல்லை
### அமெரிக்காவின் தற்போதைய நெருக்கடி குறித்து ஒபாமா திட்டவட்டம்

வொஷிங்டன், ஒக்.4
அமெரிக்க நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக எதிர்க்கட்சியினருடன் பேச்சு நடத்த அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா மறுத்துள்ளார்.
தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேர்காணல் அளித்த ஒபாமா,
"அமெரிக்க அரசின் செலவினம் மற்றும் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பது நாடாளுமன்றத்தின் கடமை. அதனைக் காலதாமதப்படுத்துவதன் மூலம் அமெரிக்கப் பொருளாதாரம் அதிக இழப்பைச் சந்திக்க நேரிடும். பேச்சு நடத்துவதன் மூலம் இனி வரும் ஜனாதிபதிகளுக்கு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. சமாதான முயற்சி ஜனாதிபதியின் சுதந்திரமான நிர்வாகத்தைச் சீர்குலைத்துவிடும்" என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த குடியரசு, ஜனநாயகக் கட்சித் தலைவர்களுடன் பேசுவதற்குத் திட்டமிட்டிருந்த ஒபாமா பின்னர் அந்தச் சந்திப்புகளை இரத்துச் செய்துவிட்டார் என்று கூறப்படுகின்றது.
அமெரிக்காவில் அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு அளிக்க வகை செய்யும் ஒபாமா கெயர் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சியினருக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம். (ற)

## தலிபான்களுக்கு அலுவலகம் தேவை - இம்ரான்கான்

இஸ்லாமபாத், ஒக்.4
பாகிஸ்தானில் தலிபான்களுக்கு அலுவலகம் அமைக்க அனுமதிவழங்க வேண்டுமென தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.
"பாகிஸ்தானில் அமைதி நிலவ வேண்டுமானால் தலிபான்கள் பாகிஸ்தானில் அலுவலகம் அமைத்துச் செயற்படுவதை அனுமதிக்க வேண்டும். அவர்களுடன் நிபந்தனைகள் அற்ற பேச்சு நடத்த வேண்டும். இந்த விவகாரத்தில் இராணுவமும், அரசியல் கட்சிகளும் பாரபட்சமாக நடந்து கொள்ளக் கூடாது" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

## பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகவே இயங்குகின்றன உளவு அமைப்புகள்
### விளக்கமளிக்கின்றது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக்.4
பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறாமல் தடுப்பதற்காக மட்டுமே அமெரிக்க உளவுப் பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று விளக்கமளித்துள்ளது வெள்ளை மாளிகை.
அமெரிக்காவில் வெளியாகும் நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ், "2010ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் முக்கிய பிரமுகர்கள் செல்லும் இடங்களைக் கண்காணிக்க உளவுப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன" என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடனை மேற்கோள் காட்டித் தகவல் வெளியிட்டிருந்தது.
அதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜேகேர்னே அந்தத் தகவலை முற்றாக மறுத்துள்ளார்.
"பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் நிகழாமல் தடுக்கவும், அவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும் மட்டுமே அமெரிக்க உளவுப்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் செயற்பாட்டைத்தான் உலகின் பல்வேறு நாடுகளும் பின்பற்றி வருகின்றன." என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## புடினுக்கு நோபல் பரிசு?

நியூயோர்க், ஒக்.4
2014ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
சிரியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்று தெரிவித்து அமெரிக்கா தாக்குதல் நடத்தத் தயாரானது. அப்போது சிரியா மீதான தாக்குதலை ரஷ்யா தடுத்து நிறுத்தி பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தது.
அரசியல் ரீதியாகவும், ரஷ்ய தூதரகம் மூலமும் உரிய நடவடிக்கை எடுத்து போர் பதற்றத்தை தணித்தார் விளாடிமிர் புடின்.
அதனைப் பாராட்டி உலக நாடுகளிடையேயான ஆன்மிக ஒருமைப்பாடு மற்றும் ஒத்துழைப்புக்கான சர்வதேச அக்கடமி என்ற அமைப்பு, 2014 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை புடினுக்கு வழங்க பரிந்துரை செய்துள்ளது.
1990ஆம் ஆண்டு முன்னாள் சோவியத் யூனியன் ஜனாதிபதி மிகைல் கோர்பசேவுக்கும், 2009 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கும் அமைதிக்கான நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன. (ற)

## 2 ஆவது குழந்தைகளால் பணம் சம்பாதிக்கும் சீனா

பீஜிங், ஒக்.4
சீனாவில் பிறக்கும் இரண்டாவது குழந்தைகளால் பெருந்தொகைப் பணத்தைச் சம்பாதித்து வருகின்றது சீன அரசு.
இதுவரை இரண்டாவது குழந்தை பெற்றவர்களிடம் இருந்து 2.7 பில்லியன் டொலர் அபராதமாகப் பெறப்பட்டுள்ளது என்ற தகவலை வெளியிட்டுள்ளார் சட்டத்தரணியான வூ யூசூ.
சீனாவில் ஒரு குழந்தைத் திட்டம் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றது. அதை மீறுபவர்களுக்கே அபராதம் விதிக்கப்படுகின்றது என்று கூறுகின்றனர் பொலிஸார். எனினும் அதைப் பலரும் எதிர்க்கின்றனர்.
"சீனாவின் பின்தங்கிய மாகாணங்கள் இதனை ஒரு வருமானம் ஈட்டும் செயற்பாடாகப் பார்க்கின்றன. இவ்வாறு அபராதமாகப் பெறப்படும் பணத்தைத் தமது செலவினங்களுக்கு நம்பியுள்ளன" என்று குற்றஞ்சாட்டுகின்றார் வூ யூசூ.
சீன அரசின் இந்தச் செயற்பாடு ஓர் எல்லை மீறிய செயற்பாடு என்று தெரிவித்து சீனாவில் ஒவ்வொரு மாகாண அரசிடமும், கடந்த ஆண்டு குடும்பக் கட்டுப்பாட்டை மீறியதற்காக பொதுமக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட அபராத தொகை குறித்த விவரங்களைத் தருமாறு கோரியிருந்தார் வூ யூசூ. அவருக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் 19 மாகாண அரசுகள் கடந்த ஆண்டில் மொத்தமாக 2.7 பில்லியன் டொலரை அபராதமாக வசூலித்துள்ளன. 12 மாகாண அரசுகளிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை எனத் தெரியவந்துள்ளது.
இதுகுறித்துக் கூறிய வூ யூசூ, "இந்த அபராதத் தொகை தேசிய அளவில் வசூலிக்கப்படுவதால் எம்மிடம் புள்ளி விவரங்கள் இல்லை. அபராத வசூலிப்பில் ஜியாங்ஷி மாகாணம்தான் முதலிடத்தில் உள்ளது. இந்த மாகாணத்தில் மட்டும் 554 மில்லியன் டொலர் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது." என்று கூறுகின்றார்.
அதேவேளை, சீனாவில் ஒரு குழந்தைக்கு மேல் மீண்டும் கர்ப்பமாக இருக்கும் பெண்களை வலுக்கட்டாயமாக அழைத்து சென்று கருக்கலைப்பு செய்யப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இரண்டாவது குழந்தையைப் பெற்றோர்களின் அனுமதியின்றி அதிகாரிகளே எடுத்துச் சென்று அநாதை விடுதிகளில் சேர்த்து விடுகின்றனர். அவ்வாறு அநாதை விடுதிகளில் சேர்க்கப்படும் குழந்தைகள் வெளிநாட்டு தம்பதிகளுக்கு பெரும் விலைக்கு விற்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.
"பெற்றோர்தான் தாங்கள் எத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறித்து முடிவு செய்ய வேண்டும். அவ்வாறின்றி மற்றவர்கள் அதை நிர்ணயம் செய்யக் கூடாது. இந்தநிலை சீனாவில் மாற்றப்படவேண்டும்" என்று கூறுகின்றார் வூ யூசூ. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொன்விழா ஆண்டில்
சிறந்த அதிபருக்கான
"பிரதீபா பிரபா" விருது
பெறும் எமது பாடசாலையின்
அதிபர்
கு.ரவீந்திரன்
அவர்களை
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம்,
யா/ புத்தூர் மடிஹே பஞ்சசீஹ
வித்தியாலயம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன்
பாடசாலை மாணவனும்
வரதராசன்-ரஞ்சினிதேவி
தம்பதியரின் புதல்வனுமான
செல்வன் வ. நிறோஜன்
2013இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில்
161 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில்
முதலாம் இடத்தில் சித்தியடைந்ததையிட்டு
அவரையும் அவரை வழிநடத்தி ஊக்குவித்த
புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி
சி.பிரபாகரன், அதிபர். N.வசந்தரூபன்,
முன்னாள் பாடசாலை அதிபர் ஆ.விமலேந்திரன்
வகுப்பாசிரியர் கமலேஸ்வரி மற்றும் ஏனைய
ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் நிறோஜன்
மேன்மேலும் கல்வியில் உயர்ந்திட
வாழ்த்துகின்றோம்.
வரணி வடக்கு.
வரணி.
வாழ்த்துபவர்:
வ. ரஞ்சி (அம்மா)
(C/12557)(7.6.3)

பாராட்டி வாழ்த்துகிறோம்



முல்லை/ விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவி
செல்வி கந்தசாமி கர்ணிகா
2013-தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 164
புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமையைப் பாராட்டு
வதுடன் அவருக்குக் கற்பித்த ஆசிரியர் ப.சுதர்சன்
அவர்களையும் பாராட்டி கல்லூரி சமூகத்தையும்
பாராட்டுகிறோம். செல்வியைப் பல கலைகளும்
பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவன்
துணை கொண்டு வாழ்த்துகின்றோம்.
அரசடி வீதி,
K.K.S றோட,
யாழ்ப்பாணம். (32264) (3.6.11)
வாழ்த்துவோர்:
அத்தான் (கோகுலன்), அக்கா (யுசானி),
பெறாமகன் (மேருஷன்), பெறாமகள் (விதுசா)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வவேந்தன்ஐயா ரிஷிகேசன் (ரிஷி)
யா/ இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி
கற்று ஐந்தாம் தரப் புலமைப் பரிசில்
பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த திரு.திருமதி
செல்வவேந்தன் ஐயா தம்பதியரின்
செல்வப்புதல்வன் ரிஷிகேசன் மேலும்
கல்வியில் சிறந்து விளங்கி உயர்வடைய
எல்லாம் வல்ல கற்பக விநாயகரை
வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
கோகுலன் லக்கி
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் தெற்கு.
(32267)(6.3.11)

பாராட்டி வாழ்த்துகிறோம்



மீசாலையைச் சேர்ந்த
செல்வி கணேசலிங்கம் சாம்பவி
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை 2013 இல் நடந்து
முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 184 புள்ளிகளைப்
பெற்று விசேட சித்தியடைந்தமையால்
அவரை அவருடைய அம்மம்மா, மாமா (லண்டன்), பாட்டி
அப்பப்பா (லண்டன்) ஆகியோர் பாராட்டி வாழ்த்துகின்றனர்.
(34136) (11.3.6)

# சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி. வடக்கு ஒக். 4

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இளவாலைப் பொலிஸாரினால் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டபாடசாலைகளுக்கு இடையே இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்று வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு.

**தரம் 1 - 5 வரை**

1 ஆம் இடம்- ம.விதுஷன் (மாதகல் விக்கினேஸ்வரா வித்தி.), 2ஆம் இடம்-ஜெ.துவாரகன் (மாதகல் விக்கினேஸ்வரா வித்தி), 3 ஆம் இடம் - ஜெ.ஜெபானுஜன் (மாதகல் சென் தோமஸ் வித்தி.), 4 ஆம் இடம் - தி.வரோணியா (இளவாலை கன்னியர் மடம் ம.வி.), 5 ஆம் இடம் - ச.வருண்றாஜ் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), 6 ஆம் இடம் - அ.ஸ்ரனிஸ்லாஸ் அன்குயின்சியா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்திம.வி.), 7 ஆம் இடம்-ஜோ.மஜீன்பராஜ் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத் தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), 8 ஆம் இடம் - மோ.தனுசியா (பண்டத்தரிப்பு வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தி). 9 ஆம் இடம்- ப.டிசாந்தன் (இளவாலை மாரிசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை). 10 ஆம் இடம் வி.வாஷா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**தரம் 6 – 11 வரை.**

1ஆம் இடம் - சி.துஷிந்தன் (பண்டத்தரிப்புஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), 2 ஆம் இடம்- அ.திவ்வியா (இளவாலை கன்னியர் மடம் ம.வி.), 3ஆம் இடம்- அ.கிஷோவஸ்தன் (இள வாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி), 4 ஆம் இடம்- ப.ஜோர்ஜ் அலெக்ஸ் (இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), 5 ஆம் இடம்-கி.ஜெரோசன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), 6 ஆம் இடம்- எஸ்.ஏசான் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), 7 ஆம் இடம் - இ.விவிதா (பண்டத் தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட சாலை), 8 ஆம் இடம் (அ.ஜெயக்குமார் (இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி), 9ஆம் இடம் - ஆர்.சசிரேகா (இளவாலை கன்னியர் மடம்மவி), 10ஆம்இடம்-யுகிஷாந்தனன் (இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி). (நு-86)

## ஆன்மிகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.4

வண்ணை ஸ்ரீ வேங் கடேசவரதராஜப்பெரு மாள் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு முதலாம் திருவிழாவான இன்று "அறம் கூறும் இராமாயணம்" என்னும் தலைப்பில் கலாநிதி ஆறு.திருமுருகனின் சொற்பொழிவு இடம் பெறும் (நு)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.4

நவாலி வடக்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலி மகாவித் தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி க.சிவனேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சி.நாகையாவும், கௌரவ விருந்தினர்களாக நவாலி மகா வித்தியாலய அதிபர் இ.வசந்தகுமாரும், விவேகானந்தா வித்தியாசாலை அதிபர் க.சரவணபவனும் கலந்து கொள்வர். (நு)

## ஆசிரியர் தினம்

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி யாலய ஆசிரியர் தினவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய முன்றில் செல்வன் த.சுஜீகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. மாணவர்களின்கலைநிகழ்ச்சிகளும், ஆசிரியர்களின் பட்டி மன்றமும் இடம் பெறும். (ஓ-28)

## பரிசில்களைப் பெறலாம்

குருநகர், ஒக்.4

கைதடி அரச முதியோர் இல் லத்தில் நடைபெற்று வரும் முதியோர் வாரத்தின் இறுதி நாளான எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை இந்த இல்லத்தினால் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்படும் என அத்தியட் சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார். இந்தப் போட்டியில் வயது வேறுபாடின்றி பலர் ஆக்கங்களை அனுப்பி வைத்துள்ளார்கள் எனவும் கட்டுரை அனுப்பி வைத்தவர்களில் ஒருவர் தனது விலாசத் தைக் குறிப் பிட வில் லை எனவும் அவரும் இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து தமது பரிசைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (நு-51)



பேருரை ஆற்றுபவர்: கலாநிதி ஆறு.திருமுருகன்
விளம்பர அனுசரணை:
(சி/10973) (45.6.3)
அம்பாள்
Nal/DS/842 மரக்காலை
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோவிலடி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4921012, 0777111147



Congratulations பாராட்டி
வாழ்த்துகின்றோம்



மண்டைதீவு
3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
றொபேட் கிளைவ் லூர்த் மரியநாயகி
தம்பதியரின் செல்வப் புதல்வனும்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியா
லயத்தில் தரம் 5 Bயில் கல்வி கற்பவருமான
செல்வன் பெர்னான்டின் எறிக்
2013 புலமைப் பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று
யாழ் மாவட்டத்தில் 4ஆம் இடத்தினையும் பாடசாலையில்
முதலாம் இடத்தினையும் பெற்று விசேட சித்தி அடைந்ததையிட்டு
மகிழ்ச்சியும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். மேலும்
அவர் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து சாதனைகள் பல
புரிந்து வெற்றி காண வாழ்த்துகின்றோம். அவருக்கு ஊக்கமூட்டி
கல்வி கற்பித்த வகுப்பாசிரியரையும் பாடசாலையின் அதிபர்
ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.
அத்துடன் தனியார் கல்வி நிறுவனமான "மார்ஷல் அக்கடமி"
ஆசிரியரான கீதபொன்கலன் ஆசிரியரையும்
அவருடன் இணைந்த மற்றும் ஆசிரியர்களையும்
பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா,
பெரிய மாமா குடும்பம், மாமன்மார்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் முகுந்தன் சவின்ஷன்
160 புள்ளிகள்
யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
இவரை இந்நிலைக்கு உயர்த்திய வகுப்பாசிரியர் திருமதி ந. நாகநந்தினி
அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். தலைமை ஆசிரியர் கிருபா
அவர்களுக்கும் எமது பாடசாலையின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கும்
உமாதவா கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் தவயோகராஜா அவர்களுக்கும் சக
ஆசிரியர்களுக்கும் மற்றும் பகுதி நேர ஆசிரியர்களான கிருபா, ஸ்ரீ
அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.
பாராட்டி வாழ்த்துவோர்: அப்பா முகுந்தன், அம்மா தனுஜா,
அண்ணா கவின்ஷன், தம்பி அபின்ஷன்,
தாத்தா, அம்மம்மா, மாமா, சித்தா.
(C/12555)(10.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
2013ஆம் ஆண்டு நடைபெற்ற
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில் தோற்றி 186 புள்ளிகளைப்
பெற்றுக் கொண்ட அளவெட்டி
அருணோதயக் கல்லூரி மாணவன்
செல்வன் மதிவதனன் லட்சிகன்
அவர்களைப் பாராட்டி மகிழ்வதோடு
அவர் மேன்மேலும் கல்வியில் பல
தடங்கள் பதித்து நீடூழி
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



CONGRATULATION
வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார்,
தம்பிமார், தங்கச்சிமார், மாமா, அத்தை, ஸரப்பிரியன்
(C/12524) (7.6.3)

யா/ புலோலி மெ.மி.த.க.பாடசாலை
2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு
பாராட்டுத் தெரிவிக்கின்றோம்



160 புள்ளிகள் செ.விதுர்சியன் - 171 புள்ளிகள் ஜோ.ஜெரோமி - 165 புள்ளிகள்
கற்பித்த ஆசிரியர் திருமதி ப.ஜெசிலன் அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து
மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்.
(29540)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி அதிபர்கள் மூவருக்கு பிரதீபா விருது



தென்மராட்சி, ஒக்.4
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மூன்று அதிபர்களுக்கு கல்வி அமைச்சின் சிறந்த நல்லாசிரியருக்கான 'பிரதீபா பிரபா' விருது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுகள் நாளை மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் பிரதமர் டி.எம்.ஜயரத்னவால் வழங்கப்படவுள்ளன.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, வரணி ம.வி. அதிபர் க.மங்களேஸ்வரன், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் ஆகியோரே 'பிரதீபா பிரபா' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கல்வியில் மிகச்சிறந்த கவனம் நல்ல பெறுபேற்றைத் தரும்

### முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 4
மாதிரி வினாத்தாள்களைச் செய்து பயிற்சி பெற்றதால் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெறக்கூடியதாக இருந்தது. கற்றலில் அவதானமாக இருந்ததனால் சித்தியடைந்தேன் என்று தெரிவித்தார் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி இ.விதுர்ஷியா.
விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவியான அவர் தனது வெற்றி குறித்து தெரிவித்ததாவது:
பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிப்பதை அவதானமாகக் கேட்டும், அவற்றை வீட்டில் வந்து மீட்டல் செய்தும் படித்து வந்ததாலேயே இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தேன்.



நான் சித்தியடைவேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்றமையால் மிகவும் சந்தோசமாக இருக்கிறது. பாடசாலையில் மாதிரி வினாத்தாள்கள் பலவற்றை எனது ஆசிரியர் பயிற்சிகளுக்காகத் தருவார். எப்படிக் கேள்வி வரும் என்பது பற்றியும் அவற்றைப் பயமில்லாது செய்ய வேண்டும் என்றும் நம்பிக்கை ஊட்டினார். அந்த நம்பிக்கை தான் நான் வெற்றியடைய ஒரு காரணமாக இருந்தது.
எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. பாடசாலையில் ஒரு சில விளையாட்டுக்களில் பங்குபற்றி பரிசில்களும் பெற்றிருக்கிறேன். எனது வெற்றிக்கு எனது பெற்றோரும் உந்துதல் அளித்து வந்தனர். இவற்றுக்கு மேலாக வகுப்பாசிரியருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்று தெரிவித்தார்.
(வ-4)

# சாவகச்சேரி மாணவனுக்கு 190 புள்ளிகள்

**தென்மராட்சியில் 90 பேர் சித்தி**

தென்மராட்சி, ஒக். 4
ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் 90 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக தென்மராட்சி வலயம் தெரிவித்துள்ளது.
வலய மட்டத்தில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ரவிக்குமார் தவினுகன் 190 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும் (மாவட்ட மட்டத்தில் நான்காமிடம்) கைதடி குருசாமி வித்தியாலய மாணவன் 186 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும், அல்லாரை அ.த.க.பாடசாலை, கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் 182 புள்ளிகளைப் பெற்றுமூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் 31 மாணவர்களும், மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் 9 மாணவர்களும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் என்பவற்றில் தலா 4 பேரும் கைதடி குருசாமி வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நாவற்குழி மகா வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் என்பவற்றில் தலா 3 பேரும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கைதடி முத்துக் குமாரசாமி ம.வி, மட்டுவில் தெற்கு சரஸ் வதி வித்தியாலயம் தலா 2 பேரும்,
மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி, வரணி ம.வி, மீசாலை விக்னேஸ்வரா ம.வி, அல்லாரை அ.த.க.பாடசாலை, கச்சாய் அ.த.க. பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை, வரணி வடக்கு அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை தலா ஒருவரும் சித்தி பெற்றுள்ளனர். (வ-9)

> வலய மட்டத்தில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ரவிக்குமார் தவினுகன் 190 புள்ளிகள் பெற்று முதலிடத்தை (மாவட்ட மட்டத்தில் நான்காமிடம்) பெற்றுள்ளார்

# மருத்துவராகி சேவை வழுங்குவதே எதிர்கால இலட்சியமாகும்

### கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற மாணவி

கிளிநொச்சி, ஒக். 4
பாடசாலையில் ஆசிரியர்கள் வழங்கிய பயிற்சிகளை ஒழுங்காகச் செய்து வந்தேன். எனது முயற்சி அதிகமாக இருந்ததோடு கற்பிக்கும் பாடங்களையும் மீட்டல் செய்து வந்ததால் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றேன். எதிர்காலத்தில் மருத்துவராகிச் சேவையாற்றுவதே எனது நோக்கம் எனத் தெரிவிக்கிறார் யோ.கோபிகா.
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பயிலும் மாணவியான இவர் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றார். உதயன் வாசகர்களுக்கு அவர் தெரிவித்ததாவது:-
ஆசிரியர்கள் தரும் பயிற்சிகளை இயன்றளவு அன்றன்றே செய்துவிடுவேன். அவற்றை ஒழுங்காகச் செய்து வந்தேன். படித்தவற்றை மறக்காதிருக்க தேவைப்படும்பேதாதெல்லாம் மீட்டல் செய்வேன். பரீட்சை நாள் நெருங்கிவந்தபோதும் பதற்றப்படவில்லை. எனது முயற்சியையும்கைவிடவில்லை. மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறுவேன் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. எதிர்காலத்தில் மருத்துவராக ஆக வேண்டும் என்பது எனது இலட்சியம் என்றார் கோபிகா.



இதேவேளை, அவரது வகுப்பாசிரியரான சிவகரன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்:-
கோபிகா தானாகவே எதையும் படிக்கக்கூடிய ஆற்றலுடையவர். இக்கட்டான அவரது குடும்பச் சூழ்நிலைக்கு மத்தியிலும் உறுதியோடு தனது கற்றலைத் தொடர்கிறார். அவர் சித்தியடைந்ததில் ஒரு பங்கு மாத்திரமே எமக்கு உண்டு. மிகவும் அமைதியான சுபாவமுடைய அவரது இலட்சியம் நிறைவேற வேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம் -என்கிறார். (வ-4)

# சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டு படித்ததால் சிறந்த பெறுபேறு கிடைத்தது

### மன்னாரில் முதலிடம் பெற்ற மாணவன் கருத்து

ஆசிரியர்களின் அறிவுரையின் படி செயற்பட்டு சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டுத் தெரிந்து படித்ததால் பரீட்சையில் சித்தியடைந்தேன். இது எனக்கு வெற்றியாக இருக்கிறது. மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது என்கிறார் புலமைப்பரிசில் பரீட்சையில் 185புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மன்னார் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமாணவன்ந.அருண்.
மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசியப் பாடசாலை மாணவனான அருண் உதயன் வாசகர்களுக்குத் தமது வெற்றி குறித்து தெரிவித்ததாவது:-
பாடசாலையில் மட்டுமே நான் படித்தேன். தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லவில்லை. படிக்க வேண்டும் என்ற விருப்பம், பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.
பாடசாலை ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களின் படி செயற்பட்டேன். அவ்வாறு நடந்து கொண்டதால் தகுந்த முறையில் கற்கவும், மீட்டல் செய்யவும் முடிந்தது.



எனது வகுப்பில் 74 மாணவர்கள் பரீட்சை எழுதினர். 29பேர் சித்தியடைந்தனர். பாடசாலையில் ஆசிரியர்கள் கூறுவதில், கற்பிப்பதில் கவனம் செலுத்தாததனால் ஏனையவர்கள் சித்தியடையத் தவறியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.
எதிர்காலத்தில் வைத்தியராக ஆக வேண்டும் என்பது எனது ஆசை. பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று பெற்றோர் உந்துதல் அளித்தனர். ஆனால் அதனையும் தாண்டி மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளேன் என்றார்- அருண். (வ-4)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் பரீட்சைத் திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன. அதனடிப் படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சை பெறுகளின் விவரம் வருமாறு:-

**விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்**
சுந்தரலிங்கம் கஸ்தூரியா-168, சிவகுமார் ஜனகன்-163, இராஜகுமார் செருஜா-156. (வ-9)

**வவுனியா இந்துக் கல்லூரி**
வ.தயரதன்-191-மாவட்டநிலை-2, ரொ.தர்ணிகன்-177, ஜீ. டென்சிகா-176, வி.ஸோபனா-168, நா.சன்சிகா-165, கி.தர்சனா-163, கோ.கோபிகா-163, க.சாரணி -161, ஜெ.தனுஷ்-157. (வ-421)

**மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**
மு.சுஜானி-180, இ.தீபிகா -178, பு.லக்ஷன்-172, ஜெ.சோபிகா -162, க.பிரியங்கன்- 160, கு.திவியா-155.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
க.ஜானுகா-180, ஸ்ரீ.அனோசிகன்-180, ஜெ.திலக்ஷி-169, க.கனெக்ஸ்-161, சி.குகப்பிரியன்-155, சோ.பவித்ரன்-154, கெ.டிசாந்-154.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**
கே.ஸ்ரீநாராயணி-186, ப,யதுசுதன்-186, அ.மற்றில்டா-181, மு.திபிஜா-175, மு.பவனுஜா -174, ந.கேசிகா-174, வி.கவீனா -172, பு.தனுசன்-172, பே.டிலக்சனா-171, ய.நிதோசன்-169, பா.மதுசாயினி- 169, ம.அபிசாளினி-167, செ.சாகித்தியா -166, நி.பபிஷிகன்-165, செ.ஜனனி-162, தி.கிருஷ்சாந்தி -157, க.விசாளினி-157, இ.பவனிதரன்- 156, பி.வைஸ்ணவி-156, நி.தருண்-156, ஜெ.கோகுலன்-156, ஜெ.துர்சிகா-156, ஜெ.அபிசனா-155, ர.வைஷ்ணவி-155, சு.குகசாம்பவி- 155. (வ)

**வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்**
மகேஸ்வரன் கோசியா- 177, சிவகுமார் டினுசா- 175, திருலங்கேஸ்வரன் தருண்- 168, தனபாலசிங்கம் தினேஸ்வரன்- 168, தர்மசீலன் தர்மிளா- 168, சந்திரகுமார் சங்கவி- 164, உதயகாந் தேவசூரியா- 162, சதீஸ்குமார் சாயிசன்- 162, சாந்தகுமார் தரணிகா- 155, தர்மசீலன் தர்மினா- 154.

**வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி**
ஸ்ரீரங்கன் சஜீந்தன்- 190, கண்ணன் பவித்திரன்- 183, வில்வராசா இமையான் - 178, நாகசேனன் சாரங்கன்- 175, கண்ணதாசன் சந்திரராஜ்- 174, சந்திரகுமார் வைஷ்ணவன்- 173, பாஸ்கரன் பத்மஜன்- 171, மதிமுருகன் கீர்த்திகன்- 170, சுவேந்திரன் அகிஷன்- 170, அனந்தவாசன் திஷாங்கன்- 168, சுரேஸ்குமார் வேதவித்தகி- 167, மலர்வண்ணன் கரிஷாந்- 166, சிவகுமார் செல்வகுமார்- 166, சந்திரமௌலி வர்ணதீபா- 164, ஏ.கௌசிகன்- 162, இளமுருகன் கிருஷணா- 161, சௌந்தரராஜா திவியா- 160, சயந்தவன் சஜீவன்- 159, ஐங்கரன் நிகரிலன்- 159, நிமலன் விஷ்ணுகா- 158, கணேசராஜா தாரணி- 158, சனாநந்தர் சிவதர்ஷினி- 158, அன்டர்ஷன் கிறிஸ்ரீன் செரீனா- 158, அசோக்குமார் அனுஜா பெய்த்- 158, சிவகுமார் சுருதிகன்- 157, சற்குணராஜா சிறிமீரா- 155, சந்தானபவன் பவதாரணி- 154, பாஸ்கரன் பத்மஜா- 154.

**புனித ஜோன் பொஸ்கோ**
சி.மதுமிதா- 190, அ.பெர்னான் எறிக்- 190, சா.அபிசனா- 189, ஸ்.தேவந்தி- 188, கு.தக்ஷி- 187, ச.அபிசேகன்- 187, ந.விபூசணன்- 186, பே.யுதிஸ்திரன்- 186, ஹ.அபிராமி- 186, வே.சேந்தன்- 185, கே.ஹரீசன்- 185, மோ.சுலக்சன்- 184, செ.கேஷிகன்- 183, செ.பிரவீனன்-183, பு.கோபிகா- 181, செ.சதுர்த்திகா- 180, கு.கீர்த்தனன்- 180, சூ.காயத்திரி- 180, கி.அனுசாகர்- 179, சு.சுவஸ்திகன்- 179, க.மதுமதி- 178, ஜெ.தட்சிகன்- 177, தே.தனுஜன்-177, ஜெ.செயோஸ் டைனீசியஸ்- 177, சு.பிரசாந்தன்- 177, சி.சுவேத்தா- 176, சி.சனூஜன்- 176, ர.தனுஜன்- 176, பி.ஆன் ஷரோனி- 176, க.பவனுஷா- 176, பா.கபிஷன்- 175, உ.கேதா- 175, சி.துவாரன்- 175, நி.அபிசன்- 174, ட.ஹரிஷன்- 174, ற.ஹர்ஷன்- 174, ம.யாதவன்- 174, சி.தமிழாயினி- 174, பு.கஸ்தூரி- 174, நொ.சாருனீ- 174, செ.வினுஷன்- 173, வி.வித்தியாயினி- 173, இ.பிரியங்கா- 173, றெ.ஜெனுஷா கிஷாந்தி- 173, ஞான.நாகநந்தினி- 172, எ.கெ.றமீனா- 172, தி.சபீனா- 172, செ.பரத்கிருஷ்ணா- 172, கு.தர்சன்- 172, கி.நியான்சி- 171, றா.ஜோணகான்- 171, ம.கோபிசாந்- 171, ரா.பவித்திரா- 171, கோ.ஹம்சாயினி- 171, ம.கிஷோத்தனா- 171, ரா.தீபிகன்- 171, த.மிதுர்ணா- 170, அ.மொபிசன்- 169, தே.மாதங்கி- 169, ஞா.கிருஷிகா- 169, யூ.யூடிற் ஏஞ்சலின்- 169, ஜெ.கௌசிகன்- 167, வி.லிபர்ணன்- 167, சி.கேசாயினி- 167, ஜெ.கோஷிகன்- 167, செ.மேரி பெறீனா- 165, ச.சங்கவி- 165, லி.அபிநயா- 165, வ.சிவாணிகா- 165, ந.சுபஆர்த்திகன்- 165, வி.சஞ்சிதா- 164, சு.சங்கவி- 164, ச.பாமினி- 164, ப.ஆரணி- 163, வி.கஸ்தூரி- 163, சீ.மரியஸ்ரெபானி- 162, எ.இ.அபிசனா- 162, ச.யனுஷன்- 162, யூ.கிங்ஸ்ரன்- 162, சி.பூர்வஜா- 161, த.ஆதித்யன்- 161, த.கஜநாத்- 160, ஐ.கீர்த்திகன்- 160, பி.வின்சிகா- 160, வி.கஜானன்- 160, ஜெ.பிரணவி- 160, ஜெ.கிறிஸ்ரீனா சலோமி- 160, லோ.கார்த்திகா- 159, ம.அரோன்- 159, லோ.வர்ணிகா- 159, ப.தீபக்- 158, கு.சுஜானி- 158, ஞா.கிருஷன்- 158, நா.துஷாநந்தி- 158, தெ.திவாஜினி- 157, வ.அஜானா- 157, றொ. காருண்யா- 156, ச.அக்ஷயா- 156, செ.சுபலக்சன்- 156, பி.ஹர்சிகா- 156, வே.ஓவியா- 156, ஸ்ரீ.ஸ்ரீநிதா- 155, றோ. ஆன்றியா- 155, தி.சுவஸ்திகா- 154, வி.லூ.மார்ஜீலன்- 155.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களைத் தேடி மயானம் அகழ்வு



கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி- பதுளை வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகத்தின் குடும்ப மயானம் விசேட அதிரடிப்படையினரால் புதன்கிழமை தோண்டப்பட்டது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினரொருவர் வழங்கிய தகவலையடுத்தே, இந்த மயானம் தோண்டப்பட்டது என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்த மயானத்திற்குள் பெருந்தொகையான ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்தே, நீதிமன்றத்தின் உத்தரவைபெற்று குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவித்துவிட்டே மயானம் தோண்டப்பட்டது என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ச)

# ஆலய புனரமைப்பிலும் படையினர் தலையீடு

## தடுக்கக் கோருகிறார் யோகேஸ்வரன் எம்.பி.



மட்டக்களப்பு. ஓக்.4

மட்டக்களப்பு, வாகரை ஆலங்குளத்திலுள்ள இந்து ஆலய புனரமைப்பு நடவடிக்கையில் இராணுவம் தலையிடுவதை நிறுத்த உதவவேண்டும் என்று கோரி மாவட்ட அரச அதிபருக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மட்டக்களப்பு, கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்தின் ஆலங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள இந்து கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விநாயகர் ஆலயத்தை புனரமைக்கும் செயற்பாட்டை இராணுவத்தினர் தடுத்து வருகின்றனர்.

பொதுவாக ஆன்மிக நடவடிக்கை உட்பட சிவில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்காக மக்கள் மேற்கொள்ள முடியாத வகையில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருகின்றது.

> சிவில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்காக மக்கள் மேற்கொள்ள முடியாத வகையில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருகின்றது.

எனவே இந்த மாவட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் ஆலயங்களிலும், ஏனைய சிவில் நிர்வாகப் பகுதியிலும் இராணுவத்தினர் மேற்கொள்ளும் தலையீட்டை நீக்கி, ஆயை புனரமைப்பு செயற்பாட்டுக்கான அனுமதியை வழங்க முன்வர வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் வாகரை பிரதேச செயலர், வாகரை பிரதேச சபை செயலர், ஆலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச)



# சந்திரகாந்தனின் நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டு உபகரணங்கள்

மட்டக்களப்பு.ஓக்.4

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் நிதியொதுக்கீட்டின் கீழ் போரதீவுப்பற்று,கோவில்போரதீவு கிராமத்தில் அமைந்துள்ள உதயதாரகை விளையாட்டுக் கழத்துக்கு 75000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து புதன் கிழமை வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் ஜனாதிபதி ஆலோசகர் சிவனேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலர் பு.பிரசாந்தன், போரதீவுப்பற்று பிரதேச செயலர் ந.வில்வரெத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# ரெலிமெயில் சேவைகள் கிழக்கில் பெரும் வெற்றி

## பிரதித் தபால் மா அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக்.4

டெலிமெயில் சேவை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் வெற்றியளித் துள்ளது என்று கிழக்கு மாகாண பிரதித் தபால் மா அதிபர் திருமதி வாசுகி அருள்ராஜா தெரிவித்தார்.

இந்தச் சேவை ஆரம்பித்த முதல் நாளே மட்டக்களப்பு பிரதம தபால் அலுவலகத்தில் 23 ரெலிமெயில் சேவைகள் அனுப்பப்பட்டன.

மாவட்டத்தில் ஏனைய தபாலகங்களிலிருந்து 45 ரெலிமெயில்கள் மட்டக்களப்பு நகரப்பகுதியில் விநியோகம் செய்யப்பட்டன என்று அவர் கூறினார்.

தந்திச்சேவையை மக்கள் நாடவில்லை.

ஆனால் ரெலிமெயில் சேவையில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

> தந்திச்சேவையை மக்கள் நாடவில்லை. ஆனால் ரெலிமெயில் சேவையில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த முதலாம் திகதியுடன் தந்திச்சேவை நிறுத்தப்பட்டு டெலிமெயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### வரலாற்றில் முதல் தடவையாக

# 20 நாட்டுத் தலைவர்கள் மட்டக்களப்புக்கு வருகை

மட்டக்களப்பு,ஓக்.4

வரலாற்றில் முதல்தடவையாக ஒரே நேரத்தில் 20 நாடுகளின் தலைவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என்று மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தரும் உலகத்தலைவர்களில் 20 நாடுகளின் தலைவர்கள் பிரிட்டன் இளவரசர் சாள்ஸின் தலைமையில் மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளனர் என்று அவர் கூறினார்.

இந்தத் தலைவர்களின் வருகை எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



திருகோணமலை, செல்வநாயகபுரம் கிராமத்தில் உள்ள விநாயகர் வீதியை கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், பட்டதாரிபயிலுநர்கள், கிராமத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர், பொது மக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

# கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

மட்டக்களப்பு.ஓக்.4

மட்டக்களப்பு, கல்குடா பொலிஸ் பிரிவில் கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவரை மறித்து கல்குடா பிரதான வீதியில் காவல் கடமையிலிருந்த பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது அவர் கஞ்சா வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து மற்றைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர். (ச)

# இளைஞனின் சடலம் மீட்பு

திருகோணமலை , மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிக்குளம் பகுதியில் இளைஞரொருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று மொறவெவப் பொலிஸார் தெரி வித்தனர்.

சோமநாதன் சத்தியசீலன் (வயது-18) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கபட்டது. அவரது பெற்றோர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது மகன் செவ்வாய் மாலை 6.30 மணிக்கு படம் பார்ப்பதற்காக 'சீடி' வாங்கி வருவதாகச் சென்றார். ஆனால் மறுநாள் காலையாகியும் அவர் திரும்பி வராததால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம்.

அதனையடுத்து, பொலிஸாரும் மக்களும் இணைந்து தேடுதல் நடத்தியபோது நொச்சிக்குளம் பகுதியில் அவரது சடலம் மீட்கப்பட்டது.

அதனையடுத்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எஸ்.சதீஸ்தரன் சடலத்தைப் பார்வையிட்டு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தை எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் மேலதிக பரிசோதனைக்கு பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்படலாம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# கூட்டமைப்பின் பிரேரணைக்கு மு.காங்கிரஸ் ஆதரவளிக்குமா?

## கேட்கிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார்

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கக்கூடாது என்று ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வந்த பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளது. இதே போன்று எதிர்வரும் காலங் களில்கூட்டமைப்பு கொண்டுவரும் பிரேரணைகளுக்கு ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்குமா? என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிழக்கு மாகாண சபை அமர்வில் அவர் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் சுதந்திரத்தின் பின் சிறுபான்மை மக்களின் உரிமைகள் நாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த அரசுகளால் பறிக்கப்பட்டன.

அதன் காரணமாக எமது [illegible] கடந்த 60 வருட காலங்களில் 30 வருடங்கள் அஹிம்சைப் போராட்டத்திலும், 30 வருடங்கள் தமிழ் இளைஞர்கள் ஆயுத போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்தக் காலப்பகுதியில் பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்றன. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. சிங்கள பௌத்த கடும் போக்காளர்களின் எதிர்ப்புகள் காரணமாக ஒப்பந்தங்கள் செயல் வடிவம் பெறவில்லை.

[illegible] நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழர்களுக்கான தீர்வைக் கண்டிருக்கலாம்.



தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தின் மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவானது.

இலங்கை -இந்திய ஒப்பந்தத் தில் பிரசவமான குழந்தைதான் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம். அதை அந்த நேரத்தில் மக்கள், இது நிரந்தர தீர்வு அல்ல என்று ஏற்றுக் கொள்ளவில்லை.அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின் மாகாண சபையின் சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

வடக்கு மாகாண மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளனர்.

எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மனபூர்வமாக ஏற்று வாக்களித்த வட பகுதி மக்களுக்கு இந்தச் சபையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவிநெகும 5ஆம் கட்டம் 11 ஆம் திகதி ஆரம்பம்

## ஜனாதிபதி தலைமையில்

வாழ்வெழுச்சி (திவிநெகும) தேசிய திட்டத்தின் ஐந்தாவது கட்டம் எதிர் வரும் 11 ஆம் திகதி சுப வேளையான முற்பகல் 10.11 மணிக்கு நாடுமுழுவதிலும் ஆரம்ப மாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இது தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறும்.

நாடுமுழுவதிலும் 324 பிரதேச செயலாளர் பிரிவு களுக்கு உரிய 14,008 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரே நேரத்தில் இத்திட்டம் ஆரம் பித்து வைக்கப்படும் திவி நெகும திட்டம் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பமா னது.

ஜனாதிபதியின் இந்தக் கருத் திட்டம் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிநடத்தலில் முன்னெடுக்கப்பட்டு வருகின் றது. விவசாயம், கால் நடை வளம், கடற்றொழில், மனைப் பொருளாதார கைத்தொழில் என மூன்று பிரிவுகளாக இது மேற் கொள்ளப்பட்டது.

ஒரு இலட்சத்து 25 ஆயி ரம் வீட்டுத் தோட்ட வேலைத் திட்டமும் இத்திட்டத் தில் உள்ள டக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரி விக்கின்றது. 14 இலட்சம் மரக் கறி விதைத் தொகுதிகள், 23 இலட்சம் பழக்கன்றுகள், தென் னங்கன்று, பயிர்கள், மருந்து மூலிகை கன்றுகள் போன் றவை இலவசமாக வழங்கப் படும். திவிநெகும திட்டத்தில் 25 இலட்சம் பேர் பங்கு கொள் கின்றனர்.

திவிநெகும திட்டத்தின் நான் காம் கட்டம் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட் டது. திவிநெகும திட்டத்தின் வெற்றியை மல்வத்த அஸ்கிரி பீடங்களில் மகாநாயக்க தேரர் கள் உட்பட மதகுருமாரும் பாராட்டியுள்ளனர்.

இலங்கையின் தனி நபர் களின் மரக்கறி, பழ வர்க்கங் களின் பயன்பாடு இத்திட்டத் தின் மூலம் அதிகரித்ததாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. பெரும் போகத்தை இலக்காகக் கொண்டே இது ஆரம்பமா கிறது. 18 அமைச்சுக்களின் பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

# இலங்கையுடனான உறவு தொடர்ந்தும் பேணப்படும்

## ஜேர்மனி தூதுவர் தெரிவிப்பு

இலங்கைக்கும் ஜேர்மனிக் கும் இடையில் நெருங்கிய உறவு கள் காணப்படுகின்றன. இந்த உறவுகள் தொடர்ந்தும் பேணப் படும்.

இரு நாடுகளுக்கும் இடை யிலான இராஜதந்திர உறவு களுக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில், இலங் கைக்கான ஜேர்மனியத் தூது வர் ஜெர்கன் மொர்ஹார்ட் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர உறவுகளை விடவும் மக்களுக்கும் மக்களுக் கும் இடையிலான உறவுகள் அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையின் ஆணை யாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்தி ருந்தபோது அவரை அவ மானப்படுத்தியமைக்காக ஜேர்மனி அதிருப்தி வெளி யிட்டிருந்தது. எனினும், இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவுகள் காணப்படு கின்றன எனவும் இந்த உற வுகள் தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் ஜேர்மனிய தூதுவர் தெரிவித்துள்ளார்.




உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏ.ஜே.எம். முஸாமில் நிறுவனமும் பெண்கள் அணியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் 1500 சிறுவர்களுக்கான வங்கி வைப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

# நவம்பர் 21 இல் பட்ஜெட் சமர்ப்பிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செல வுத்திட்டத்தை நவம்பர் 21 திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப் பதற்கு அரசு தீர்மானித்துள் ளது எனத் தெரியவருகிறது.

வரவு - செலவுத்திட்ட விவா தம் 2013 ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. வரவு - செலவுத்திட்ட விவாதம் பற்றிய இறுதித்தீர்மானம் நாளை 1.30 மணிக்கு நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக் கப்படுமென அரச வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

# சியாம் கொலை வழக்கு சந்தேகநபர்கள் அரச தரப்புச் சாட்சியாக மாற விருப்பம்

கோஸ்வர முஸ்லிம் வர்த்த கரான மொஹமட் சியாம் கொலை வழக்கில் சந்தேகநபர் கள் மூவரை அரச தரப்பு சாட்சி யாளர்களாக மாற்றி நிபந் தனை யின் அடிப்படையில் மன்னிப்பளிக்க சட்ட மா அதிபர் தீர்மானித்துள்ளார்.

எனினும், குறித்த மூன்று சந்தேக நபர்களில் ஒருவர் அரச தரப்பு சாட்சியாக மாறு வதற்கு மறுப்புத் தெரிவித் ததை யடுத்து இந்தக் கடத்தல் மற்றும் கொலை வழக்கின் முதலாம், இரண்டாம் சந் தேக நபர்கள் சட்ட மா அதிபரின் நிபந் தனையை ஏற்றுக்கொண் டுள்ளனர்.

மொஹம்மட் சியாம் கொலை வழக்கு தொடர்பான சட்ட மா அதிபரின் அறிக்கை நேற்று முன்தினம் நண்பகல் புதுக் கடை 05 ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றின் நீதிபதி மொஹம் மட் சஹாப்தீனிடம் சமர்ப்பிக் கப்பட்டது.

அந்த அறிக்கையில், மொஹம் மட் சியாம் கொலை வழக்கில் முதல் சந்தேக நபரான கிரி ஸாந்த விஸ்வராஜ் கோரளே, இரண்டாவது சந்தேக நபரும் கொலை செய்யப்பட்ட சியா மின் நண்பருமான மொஹம் மட் பௌஸ்டீன் மற்றும் 7 ஆவது சந்தேக நபரான முன் னாள் பிரதிப் பொலிஸ் மா அதி பர் வாஸ் குணவர்தனவின் வாகனச் சாரதியான பொலிஸ் கான்ஸ்டபிள் பிரியந்த சஞ்சீவ ஆகியோர் அரசதரப்பு சாட்சி யாக மாறும் பட்சத்தில் நிபந் தனை மன்னிப்பளிப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கொலை வழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படும் போது, சியாம் கொலை தொடர் பான உண்மை தக வல்களை சாட்சியமாக குறிப்பிட வேண் டும் என்பதே சட்ட மா அதிப ரின் நிபந்தனையாக முன் வைக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளின் போதுபொலிஸாருக்கு வழங்கி யுள்ள வாக்குமூலம், சத் தியக் கடதாசியை ஆராய்ந்தே சட்ட மா அதிபரினால் நிபந்தனை மன்னிப்பளிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது.

இதனைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் மூவரும் உட னடியாக நீதிவான் மொஹம் மட் சஹாப்தீனின் உத்தரவுக் கமைய நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன்போது சந்தேக நபர்களின் குடும்பத்த வர்களும் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது சட்ட மா அதி பரின் நிபந்தனையை இந்தக் கொலை வழக் கின் 7 ஆவது சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் பிரியந்த சஞ்சீவ நிராகரித்தார். எனினும், முத லாம் இரண்டாம் சந்தேக நபர் களான விஸ்வராஜ் கோரளே மற்றும் பௌஸ்டீன் ஆகி யோர் நிபந்தனையை ஏற்றுக்கொண்டு அரச தரப்புச் சாட்சிகளாக மாறி னர். இதனையடுத்து குறித்த இரு சந்தேக நபர்களின் குடும் பஸ்தர்களும் அரச சாட்சியாக மாறும் பத்திரங்களில் கையொப்ப மிட்டனர்.

மொஹம்மட் சியாம் கொலை வழக்கில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து, குணவர்தன உள்ளிட்ட 9 பேர் சந்தேக நபர் களாக குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டு நீதிமன்ற உத்தரவுக்க மைய விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர் களில் இரு வர் தற்போது அரச தரப்புச் சாட்சியா ளர்களாக மாறியுள்ளனர். இக்கொலை தொடர்பான கடந்த தவணை வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர்கள் ஒன்பது பேரையும் எதிர்வரும் 08 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்ததுடன் அன்றைய தினம் வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுத் துக் கொள்வதாகவும் தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# எலிக்காய்ச்சலால் 55 பேர் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இதுவரை எலிக்காய்ச் சலால் பீடிக்கப்பட்டு 55 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகா தார அமைச்சு சுட்டிக் காட்டி யுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ள னர் என அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவின் பணிப் பாளர் தெரி வித்துள்ளார்.

விவசாய நடவடிக்கை களில் ஈடுபடு பவர்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட் டுள்ளது.

எலியின் சிறுநீரில் இருந்து வெளியேறும் பக்ரீரியாவுக்கு சமமான ஸ்பைரோ என்ற குடம்பியின் காரண மாகவே எலிக்காய்ச்சல் தொற்றுகிறது. எலிக்காய்ச்சல் ஏற்படும் சந் தர்ப்பங் களில் காய்ச்சல், உடல் வலி, கண் சிவத்தல், தசைப் பிடிப்பு போன்ற நோய் அறி குறிகள் தென்படும். அத்துடன் நோயின் தாக்கம் அதிகரிக்கும் போது கண் மற்றும் உடல் மஞ்சள் நிறமாகக் காணப் படும் என்றும் என்றும் அவர் கூறியுள் ளார்.

இதேவேளை, எலிக்காய்ச் சலில் இருந்து பாதுகாப்பு பெறு வதற்காக விவசாய நட வடிக்கைகளில் ஈடுபடுபவர்க ளுக்கு மீள்சக்தி வில்லைகள் வழங்கப்படவுள்ளன. விவ சாய நடவடிக்கைகளில் ஈடு படுபவர்கள் வாரத்திற்கு ஒரு முறை இந்த வில்லையை உட் கொள்ள வேண்டும். உடலில் ஏற்படும் காயங்களின் மூலம், குறித்த பக்ரீரியா உடலுக்குள் பிரவேசிப்பதன் மூலம் இந்த எலிக்காய்ச்சல் தாக்கம் ஏற்படு கிறது. எலிக்காய்ச்சலால் பீடிக் கப்பட்டவர் கள் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற வேண் டும். இதற்கான மீள்சக்தி ஊசி இல்லை என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய அமெரிக்காவின் பிரதம சங்கநாயக்கர் வல்பொல பியநந்த தேரருக்கு மியன்மார் அரசின் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. தேரரின் [illegible] ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பாமன்கடை மகாவிகாரையில் நடந்த வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கௌரவகலாநிதிப் பட்டத்தை வழங்கிய போது எடுக்கப்பட்டபடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மோதல்களைத் தூண்டும் போக்கு தெற்கில் முளைவிடும் ஆபத்து...

நாட்டில் பிரிவினை வாதத்தை வளர்த்து, இன மோதல்களைத் தூண்டுவதற்கு தெற்கின் இனவாத சக்திகள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதற்கு முனைவதாக வலி மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்திருப்பது தட்டிக்கழிக்க முடியாத ஒன்றாகும்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த மதங்களுக்கிடையில் மத வாதத்தைத் தூண்டும் வகையில் அந்தச் சக்திகள் செயற் படுவதன் உள் நோக்கம் வடக்கில் தாம் கால் ஊன்றுவதற்கு ஆகும் - என்று அவர் சுட்டிக்காட்டியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

இதேவேளை, அனைத்துலக மட்டத்தில் மதிப்புக்குரியவரான பௌத்தமத ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா விடுத்த கோரிக்கையும் ஊன்றிக் கருத்தில் கொள்ளப்படுவது பொருத்தம்.

1989ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் தலாய் லாமா. அவர் இப்போது அரசியலில் இருந்து ஓய்வுபெற்று விட்டார்.

இலங்கையிலும், மியான்மாரிலும் உள்ள பௌத்தர்கள் இனவாத வன்முறைகளை நிறுத்த வேண்டும் என அவர் கோரியிருந்தார். அத்தோடு மிக அண்மையில் அதனை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

உங்கள் மதம் மீது நம்பிக்கை வையுங்கள். அதே போன்று ஏனைய மதங்களுக்கும் மதிப்பளியுங்கள். அதனூடு பல்வேறு மதங்களுக்கு இடையே ஐக்கியத்தை உண்டாக்க முடியும் என்றும் அவர் இடித்துரைத்திருந்தார்.

"அரசியல் சீர் திருத்தங்களினாலோ, பொருளாதார அபிவிருத்திகளினாலோ இட்டு நிரப்ப முடியாத அதள பாதாளமான வேறுபாடு சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் உள்ளது" - என்று "அசயின்மென்ற் கொழும்பு" (Assignment Colombo) என்ற நூலில் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் குறிப்பிட்டது, ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.

பொருளாதார அபிவிருத்திகளால் இன நல்லுறவைச் சீர் செய்ய முடியாது என்பதை சமீபத்திய வட மாகாணத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி தென்னிலங்கைக்கு மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் மீது மட்டுமல்ல முஸ்லிம் மக்கள் மீதும் பேரினவாதிகளின் நெருக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலபொட ஞானசார தேரர், அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க ஆகியோர் சமீபத்தில் வெளியிட்டுள்ள கருத்துகள், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மிகவும் கடினமான - நெருக்கடிகள் - நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தில் உள்ளனர் என்பதை மிகவும் தெளிவாகக் காட்டுகின்றன.

"முஸ்லிம் அடிப்படைவாதத்தால் அச்சுறுத்தப்படும் பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க, அரசியல்வாதிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிடில் பௌத்தர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைமை எதிர்காலத்தில் உருவாகும். கிழக்கிலுள்ள பத்து முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் சவூதி அரேபியாவிலிருந்து உதவிகளைப் பெற்று பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன" - என்று ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"தனி ஈழப் போராட்டத்தை தென்னிலங்கை வரை விஸ்தரித்து, அடுத்த தேர்தலில் தலைநகரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்குவேட்டையை நடத்தும். வெள்ளவத்தை, மட்டக்குளி, வத்தளை முதல் வடக்கு வரையான பகுதிகளை நந்திக்கடலாக மாற்றும் அபாய கரமான நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்துள்ளது.

"கூட்டமைப்பின் இந்த அபாயகரமான பயணத்தைத் தோற்கடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்க எமது இனத்தைப் படைதிரட்டிக் களமிறக்கி மாபெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம்" - என்றும் பச்சையாக இனவா தம் கக்கியுள்ளார், அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

தமிழ் மக்கள் தமது பண்பாட்டை இழப்பதற்கு இன்று குழி பறிக்கப்படுகிறது. தமது வாழ்வியல் உரிமைகளை இழந்து வருகிறார்கள். பொருளாதார ரீதியான இருப்பை இழந்து வருகிறார்கள். இவையெல்லாம் ஓர் இனத்தை அழிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பதில் துளி அளவேனும் சந்தேகம் இல்லை. இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால் இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்சினைக்கு ஒரு சரியான, உகந்த தீர்வு காணப்பட வேண்டும்.

நாட்டின் தேசிய இனங்களில் தமிழ் மக்களும் ஒரு சாரார் என்ற அடிப்படையில் இணக்கம் காண்பதற்கு கொழும்பு அரசும் அதன் சக பாடிகளும் இடம் கொடுப்பார்களா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

# தமிழர்களின் அபிலாஷைகளை அலட்சியம் செய்யும் அரசு

## தேர்தல் முடிவு அவர்களுக்கு சாட்டையடி

கந்தவனம் கோணேஸ்வரன்

வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இலங்கை அரசுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றன. ஒப்பாரும் மிக்காரும் இல்லாததெனத் தன்னைத்தானே நினைத்துக் கொண்டிருந்த இலங்கை அரசு, இத்தேர்தலில் பலத்த அடி வாங்கியுள்ளது. ஜனநாயகத் தேர்தல் ஒன்றை நடத்திவிட்டோம். அதுவே எங்களுக்குப் பெரிய வெற்றி என்று சொல்லிக் கொண்டு தனக்குத்தானே ஆறுதல் கூறும் பரிதாப நிலையில் இருக்கிறது அரசு. ஏனைய இரண்டு மாகாணசபைகளின் வெற்றியைக் கூட கொண்டாடமுடியாத அளவுக்கு வடமாகாண வாக்காளர்கள் மஹிந்த அரசுக்குச் சரியான பாடம் கற்பித்திருக்கிறார்கள். அரசவளங்கள், அபிவிருத்திகள், ஆடம்பரங்கள் எவையும் வட பகுதி மக்களை மயக்கிவிடவில்லை என்பதனை அவர்கள் தேர்தல் முடிவுகள் மூலம் நிரூபித்திருக்கிறார்கள்.

வடபகுதியில் அரச எடுபிடிகள் அத்தனை பேரும் காணாமற் போயிருக்கிறார்கள். ஆசனங்கள் பெற்றவர்களின் விருப்பு வாக்குகள்கூட மிகமிகக் குறைந்த அளவிலேயே அமைந்துவிட்டுள்ளன.

### கிழிந்தது முகத்திரை

அரச கட்சியில் தேர்தலுக்கு நின்று தோல்வி அடைந்தாலுங்கூட, ஊரில் பெரிய மனிதர்களாக மாறிவிடலாம் எனக் கனவு கண்டவர்களின் முகத்திரைகள் மோசமாகக் கிழித்தெறியப்பட்டிருக்கின்றன. வடபகுதியின் ஒரேயொரு தமிழமைச்சர்கூட ஜனாதிபதியின் முன்னால் செல்வதற்குக் கூச்சப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். சவால் விட்டுக் கொண்டிருந்த முதன்மை வேட்பாளர் ஒருவர் காணாமற் போயிருக்கிறார்.

அபிவிருத்திகளையும், வேலைவாய்ப்புகளையும் காட்டி மக்களை அரசுக்குப் பின்னே அழைத்துவர முடியாது என்பதை வடபகுதி அரசசார்பாளர்கள் நிதர்சனமாக உணர்ந்திருக்கிறார்கள்.

### சரணாகதி அரசியல் தமிழரிடம் இல்லை

தமிழர்கள் எந்தக் காலத்திலும் இலங்கை அரசோடு சரணாகதி எண்ணத்துடன் சேர்ந்து இயங்கியவர்கள் அல்லர். டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க அரசுகளில் அவர்கள் அங்கம் வகித்த காலத்திலும்கூடத் தன்னிலை மயங்காமல் அரசியல் செய்தவர்கள். மிகப்பெரும் எண்ணிக்கையுடன் வெற்றி பெற்ற ஸ்ரீமாவோ அரசாலும், ஜே.ஆர். அரசாலும் கொண்டுவரப்பட்ட அரசமைப்புகளைத் துணிச்சலோடு நிராகரித்தவர்கள்.

தாங்கள் நிலத்தையும் தன்னாட்சியையும் அங்கீகரிக்காத அரசமைப்பை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று உலகுக்குச் சொன்னவர்கள். சுதந்திர இலங்கையின் மூன்று அரசமைப்புக்களில் ஒன்றையேனும் தமிழர்கள் ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். அவற்றைத் தலைமேற்கொண்டாடியவர்களும் அல்லர்.

### உயிரைக் காவு கொடுத்தும் தன்மானம் இழக்கவில்லை

வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகத்தில் தன்னாட்சி அலகுக்காக அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக உழைத்து வருகிறார்கள். அமைதிப் போராட்டம், ஒத்துழையாமை, ஆயுதப் போராட்டம் எனப் பலபடிகளைக் கடந்து, தினம் தினம் உயிர்களைக் காவு கொடுத்தும், தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகப் போராடி வருகிறார்கள். துன்பங்களின்போதும், பின்னடைவுகளின்போதும் அவர்கள் துவண்டு விடவில்லை. அவற்றைப் போராட்டம் தந்த விழுப்புண்களாக ஏற்றுத், தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் தமிழர்கள் போராட்டக் களத்திலிருந்து புறமுதுகிட்டு விடுவார்கள் என அரசு நினைத்தது. அபிவிருத்திகளோடும், சுக போகங்களோடும் சமரசம் செய்து கொண்டு, போராடும் எண்ணத்தைக் கைவிட்டு விடுவார்கள் என அது எதிர்பார்த்தது.

### ஆட்சியாளர்களே அழிவுக்குப் பொறுப்பு

இரு இனங்களுக்கிடையிலான அரசியல் விரிசல், இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு நிலவிவரும் ஆரோக்கியமற்றபோக்கு. பெரும்பான்மை, சிறுபான்மை, மக்கள்கருத்து, ஜனநாயகப் பண்பு என்ற போர்வைகளின் மூலம் இவ் விடயத்தை அமிழ்த்தி விடமுடியாது. இலங்கையில் ஆட்சிக்கு வந்த கட்சிகள் இதனைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் ஏற்பட்ட அழிவுகளுக்கெல்லாம் இதுவரை காலமும் ஆட்சி செலுத்துகின்ற அரச கட்சிகள்தான் பொறுப்புக் கூறவேண்டும். மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்குங்கள் என எந்தச் சிங்களமகனும் கேட்டதில்லை. ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் தான் அதனைச் செய்தனர். ஆட்சியாளர்களின் கொடூரமான போக்கினால் தான் 1971 இல் சிங்கள இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். பல்லாயிரம் இளைஞர்கள் தமது உயிர்களைத் துறந்தனர். நியாயமான காரணங்கள் இல்லாமல் சிங்கள இளைஞர்கள் ஆயுத மேந்தினார்கள் என்றுகூற முற்பட்டாலோ அல்லது பிழையாக வழிநடத்திச் சென்றவர்களின் பின்னால் எடுபட்டுச் சென்றார்கள் என்று சாதிக்க முனைந்தாலோ அது அரசியல் மடைமையாகும்.

### கல்வியில் கைவைப்பு தமிழர் கையில் ஆயுதம்

இதேபோல்தான், வலிந்த சிங்களக்குடியேற்றம், தமிழ்மொழிப்புறக்கணிப்பு, தமிழர்கள் அவமதிப்பு, தமிழ்மாணவர்கள் கல்வியில் கைவைப்பு ஆகியவற்றைப் பெரும்பான்மைப் பலம் இருக்கின்றது என்ற திமிருடன் அரசுதான் செயற் படுத்தியது. பாதிக்கப்பட்ட தமிழர்கள் குரல் கொடுத்தார்கள். அரசின் செவியில் ஏற வில்லை. ஆயுதம் ஏந்தினார்கள்: படை நடத்தினார்கள்: அரசை நடுநடுங்க வைத்தார்கள். ஆயுதம் ஏந்தாவிட்டாலும் ஆயுததாரிகளின் தேவையைத் தமிழ்மக்கள் ஏன் ஆதரித்தார்கள் என்பதை அரசு கவனத்தில் எடுத்துப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். இது சிங்களவர் பூமி. தமிழனுக்கு ஏது உரிமை என்ற பாணியில் தான் அரசு செயல்பட்டது. அரசியற் சட்டங்கள், ஜன நாயகம், பெரும்பான்மை மக்களின் விருப்பங்கள் என்றெல்லாம் கூறித் தமிழர்களின் குறைகளை அலட்சியம் செய்தது. இப்போதுள்ள அரசும் அதனைத்தான் செய்துவருகிறது.

ஒரு நாட்டின் அரசமைப்பு என்பது மாற்ற முடியாததோ அல்லது மாற்றக் கூடாததோ அல்ல. இலங்கை அரசமைப்பை இரண்டு தடவைகள் முற்று முழுதாகப் புரட்டிப் போட்டதால்தான் இன்றைய அரசமைப்பு உருவானது. இதுகூடப் பல திருத்தங்களுக்குள்ளாகி இருக்கின்றது.

### அபிலாஷைகளா? அரசமைப்பா?

ஒரு சமுதாயத்தின் அபிலாஷைகளுக்கு முன்னால் அரசமைப்பு என்பது ஒரு பொருட்டல்ல. மக்கள் அமைதியாக வாழ்வதற்காக அரசமைப்பைத் திருத்துவதும் முற்று முழுதாக மாற்றுவதும் ஜனநாயகப் பண்புகளுக்கு உட்பட்ட செயற்பாடுகள்தாம். அமைதியான இலங்கையைத் தோற்றுவிப்பதற்குச் சிங்கள மக்கள் ஒருபோதும் தடையாக இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. சிங்கள இனவாதிகள்தான் தடை போடுகிறார்கள்.

ஜனாதிபதி என்ற தனிமனிதர் தொடர்ந்தும் பதவிபெறவேண்டும் என்பதற்காகத் திருத்தத்துக்குள்ளாக்கப்பட்டதுதான் இன்றைய அரசமைப்பு. ஜனாதிபதி அரசமைப்புக்கு மேலானவர் அல்லர். ஆனால் இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு அரசமைப்பு வளைந்து கொடுப்பது ஆச்சரியமானது.

பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் இந்த வகையில்தான் தடுக்கப்பட்டு வருகின்றன. அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கும், அதனைச் சார்ந்து செயல்படுவதற்கும்தான் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இருக்கின்றார்களேயொழிய அவர்களின் அரசியல் வாழ்வுக்காக அரசமைப்பு இருப்ப தில்லை. ஆனால், இலங்கையில் அதுதான் நடக்கிறது.

### அதிகாரக்குறைப்பில் குறி தமிழர் விரோதத்தில் வெறி

தமிழர்களுக்கு நன்மை விளைந்துவிடக் கூடாது என்பதற்காகப் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை இல்லாமற் செய்ய வேண்டும், அதிகாரத்தைக் குறைத்து விட வேண்டும் என்றுதான் அமைச்சர்கள் அண்மைக் காலமாகப் பேசி வந்தார்களேயொழிய, நாட்டில் அமைதி வேண்டும்: தமிழர்களுடன் இணைந்து வாழ்வோம், அதற்கேற்ப அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவோம் என்று அதிகாரம்மிக்க எந்த அமைச்சரும் பேசவில்லை. அரசியற் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர எங்களால் முடியும்: ஆனால் அது தமிழர்களுக்குத் தீமை தருவதாக அமைய வேண்டும் என்ற கருத்துத்தான் அவர்களிடம் காணப்படுகிறது.

### தமிழரைத் தாங்கும் தமிழ்க் கூட்டமைப்பு

வடமாகாண முதலமைச்சர், காணி பொலிஸ் அதிகாரங்களை வற்புறுத்துவாரேயானால் அது அரச சட்டத்தின் பாற்பட்டதாகவே அமையும். அரசு அவற்றைத் தடுத்து நிறுத்திவிட நினைப்பதுதான் அரசசாசன விரோதமாகும்.

அமைச்சர்களின் வீண் பேச்சுகள் எவையும் இவ்விடயத்தில் இனிமேல் பயன்தரப் போவதில்லை. தமிழர்களின் எண்ணங்களையும் அபிலாஷைகளை யும் தாங்கி நிற்பது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பே தவிர அரச தரப்பல்ல.

வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அத்தனைப் பேருக்காகவும் குரல்கொடுக்கும் உரிமை இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இருக்கிறது. இரண்டு மாகாணசபைகளின் தேர்தல்களிலும் தமிழர்களால் உறுதிப்படுத்தப்பட்ட ஜனநாயக உண்மை இது. இதனைக் கபடத்தனமாக அரசு நிராகரிக்க முயலுமாயின் அது நல்ல விளைவைத் தரமாட்டாது.

தங்களுடன் தமிழ்மக்கள் நிற்கிறார்கள் என்ற தகுதியை அரசு முற்றாகவே இழந்து விட்டது. எனவே அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தமிழர் களின் அபிலாஷைகளுக்கு இசைவான நல்ல அணுகுமுறை ஒன்றைக் கைக்கொள்ள முயல வேண்டும். மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை அம்மையாரும், ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் கீ மூனும், அமெரிக்க இராஜ தந்திரிகளும் இலங்கை அரசிடம் இதனைத்தான் வற்புறுத்தி இருக்கிறர்கள். தம் வாழ்வுரிமைக்காக அரசுடன் பேசத் தயார் என்ற தமிழ்த் தரப்பின் அறிவிப்பை அரசு பற்றிப்பிடித்து காரியங்கள் ஆற்ற முன் வரவேண்டும்.

### இலங்கை பலமிழப்பு

எவ்வளவுதான் பூசி மெழுகினாலும் உலக அரங்கில் இலங்கை பலமிழந்து நிற் கிறது என்பதுதான் உண்மை. எனவே இலங்கை அரசுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாகாணசபை தமிழர்களுக்குத் திருப்தியான ஒன்றல்ல. அதன் அதிகாரங்கள் போதுமானவையுமல்ல. வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகத்தில் தன்னாட்சியை நிறுவுவதே அவர்களது குறிக்கோள். இது பிரிவினை அல்ல. பிரிவினைக்கான முதற்படியும் அல்ல. தமிழர்களின் அபிலாஷைகளைத் தொடர்ந்தும் தடுத்து விட அரசு முயலுமானால் அதுவே பிரிவினையின் ஆரம்பமாகலாம். இணைந்த இலங்கைக்குள் தமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவிச் சிங்களவருடன் இணைந்து வாழத்தான் தமிழர்கள் இப்போதும் விரும்புகிறார்கள். இதனை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியைக் கெடுக்கும் மது

ந.நந்தகுமார்,
பிரதம மதுவரிப் பரிசோதகர்,
மன்னார்.



“ ஆனால் நாகரிக மோகத்தில் இன்றைய இளைஞர்கள் தலை கீழாக நடக்கிறார்கள். மது அருந்து வது, நண்பர்களுடன் குடித்துக் கும்மாளம் போடுவது போன்றவற்றை நாகரிகமாகக் கருதுகிறார்கள்.

மது, அறிவை மயக்கும் ஒன்றாகும். அதாவது, மதுவை அருந்தும்போது மனிதர்கள் தனது இயல்பான ஆற்றலை, ஞாபக சக்தியை , உடற் பலத்தை, ஒழுக்கத்தை இழக்கிறார் கள். மேலும் உச்சப் பயனாக இது மரணத்தைக் கூட பரிசாகத் தந்து விடும்.

தனிமை, மன இறுக்கம் உடையவர் கள் போதைக்கு அடிமையாகிறார் கள். அத்துடன் மக்களை எழுச்சி யற்றவர்களாக வைத்திருக்கவும், அடிமைகளாக வைத்திருக்கவும் மது வைச் சிலபேர் பயன்படுத்துகிறார் கள்.

மதுவினால் கூடுதலாக உழைப்பா ளர் சமுதாயம் தான் பாதிக்கப்படு கிறது. சுமை தூக்குபவர்கள், சுத்தி கரிப்புத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் தமது கடும் தொழி லுக்கு ஏற்ப ஊட்டச்சத்து உணவு உண்ண முடியாது. வறுமை கார ணமாக தமது உடலை உஷாரான நிலையில் வைத்திருக்க மது அருந்துகிறார்கள்.

இளைஞர்கள் சமுதாயத்தின் முது கெலும்பு என்பார்கள். இளைஞர்கள் தமது பலத்தையும், சாதிக்கவல்ல தன்மையையும் உணர்ந்து நடக்க வேண்டும். ஆனால் நாகரிக மோகத் தில் இன்றைய இளைஞர்கள் தலை கீழாக நடக்கிறார்கள். மது அருந்து வது, நண்பர்களுடன் குடித்துக் கும் மாளம் போடுவது போன்றவற்றை நாகரிகமாகக் கருதுகிறார்கள். நண் பர்களுடன் சேர்ந்து குடிப்பதைப் பெருமையாக எண்ணுகிறார்கள்.

இளைஞர்கள், நண்பர்களின் தூண் டுதல், சமவயதுக் குழுவினர்களின் அழுத்தம் காரணமாக மது அருந்த ஆரம்பிக்கிறார்கள். மதுவினால் இளைஞர்களின் மூளையே முதலில் பாதிக்கப்படுகிறது. இதனால் தீர்மா னம் எடுக்கும் திறமை பாதிக்கப் படுகிறது. பார்வை மங்குகிறது. ஒழுங்கற்ற நித்திரை, பலத்த சத்தம் போட்டுக் கதைத்தல்,தன்னால் எல் லாம் முடியும் என்று சவால் விடுதல், உச்சரிப்பில் தெளிவின்மை,ஈரல் பாதிப்பு , உளப் பாதிப்பு போன்ற பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. ஈரல் பாதிப்படையும்போது ஈரல் சுருங்கி கடினமாகி தனது செயற்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கிறது. உளப் பாதிப்பு ஏற்பட்டு கவலை அதிகரிக்கிறது. நரம்புத் தொகுதி பாதிக்கப்பட்டுச் சோர்வு ஏற்படும்.

இதனால் சந்தேகம்,துக்கம், விரக்தி, பயம் போன்ற உணர்வுகளின் பாதிப்பு ஏற்பட்டு மன நோயாளியாகி கடைசி யில் தற்கொலை செய்யும் நிலைக்கே சென்று விடுகிறார்கள்.

சிகரெட் புகையிலையில் உள்ள நிகோடின் நஞ்சு மூளையில் நரம்பு மண்டலத்தைத் தூண்டி விடுகிறது. இதயத்தை அதிவேகமாக துடிக்க வைக்கிறது. இதனால் தற்காலிக இன்பம் ஏற்படுகின்றது. இதன் பின்பு மிகுந்த சோர்வடைகிறார்கள். இத னால் மீண்டும் புகையை நாடுவார் கள். இதனால் பண விரயம், கால விரயம், சக்தி விரயம், பற்களின் நிறம் மாறுதல், வாய்த்துர்நாற்றம், சுவாச நோய்கள்,கண் ஒளி மங்குதல், பசி யின்மை , தூக்கமின்மை, கசரோ கம், சிசுமரணம், குறைப்பிரசவம், புற்றுநோய் இப்படிப் பல நோய்க ளுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிவிடு கிறார்கள்.

சிலர் கவலையை மறக்க சீட்டாடு கிறார்கள். மதுக்கோப்பை எடுக்கிறார் கள். தண்ணீரில் மூழ்கிய பந்து, மீண்டும் மேல் நோக்கி வருகிறது. அதே போல மூளையில் பதுங்கும் கவலையும் மீண்டும் வந்து விடு கிறது.

மதுபானத்தில் உள்ள மயக்கத்தை ஏற்படுத்தும் இரசாயன பதார்த்தம் 'எதையில் அற்ககோல்' ஆகும். ஒரே தடவையில் 500 மில்லிலீற்றர் 'எதையில் அற்ககோல்' அருந்தினால் சம்பந்தப்பட்ட நபர் இறந்து விடுவார். குழந்தைக்கு 80 மில்லிலீற்றர் மர ணத்தை விளைவிக்கப் போதுமா னது ஆகும். அற்ககோலை எரி பொருளாக, தீந்தைகளை கரைப்ப தற்காக, குளிர் பிரதேசத்தில் வாகன ரேடியேற்றர்களில் நீர் உறையாமல் பாதுகாப்பதற்காக, மயக்க மருந்து களில் குளோரோபோம் தயாரிப்பதற் காக வெப்பமானியில் திரவமாக பயன் படுத்துகிறார்கள். இதைப் போதைக் காகப் பயன்படுத்தினால் எப்படி இருக்கும்?

எல்லா மனிதர்களுக்கும் மனச்சாட்சி என்ற உள்ளுணர்வு நிச்சயம் இருக் கிறது. அது எப்போதும் அவர்களைத் தீய வழிகளில் செல்லவிடாது தடுக் கிறது. ஆனால் மது என்பது அந்த மனச்சாட்சியையே அழித்துவிடுகி றது. எனவேதான் தீய வழிகளில் துணிவதற்கு மதுவைக் குடிக்கிறார் கள். நாட்டில் ஏற்படும் குழு மோதல், கொலைகள், தற்கொலைகளுக்கு மூல காரணம் மதுவே ஆகும்.

எனவே போதைக்கு அடிமையான வர்கள் இதற்குரிய உள வைத்தியர் களை உடனடியாக நாட வேண்டும். மது பற்றிய தீங்குகள் குறித்த விழிப் புணர்வுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். சமயம், ஆன்மிக வழி களில் ஈடுபடுத்த வேண்டும். மது ஒழிப்புக்கு பாடுபடும் தொண்டு நிறு வனங்களுடன் இணைத்தல் வேண் டும். கண்காட்சிகள், அறி வுரை வகுப் புக்கள் மூலம் மதுவுக்கு எதிரான விழிப்புணர்வை இத்தகையோர் மத்தியில் ஏற்படுத்தவேண்டும்.

போதைக்கு அடிமையாகி நோயாளி யானவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசு பல கோடிக் கணக்கான பணத்தை வைத்தியசாலைகளில் செலவு செய் கிறது.

எனவேதான் ஒக்ரோபர் மூன்றாம் திகதியை மது ஒழிப்புத் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

"மதுவை ஒழிப்போம் : எம் மனித குலத்தை மீட்போம்"

# முதுமையின் திறவுகோல்

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர்
இல்லம் , கைதடி.



இவர்களைச் சமூகம் காக்கின்றது; போற்றுகின்றது. இவர்கள் உள மேம் பாட்டுடன் சுகமாக முதுமையடைந்தவர்கள்; பக்குவப்பட்ட வர்கள். வாழ்க்கை யின் ஒவ்வொரு அசைவுகளையும் செப்பனிட்டுக் கொண்டவர்கள்.

முதியோர் வாரத்தின் நான்காவது நாளில் “உளமேம்பாட்டுடன் சுகமாக முதுமையடைதல்" ஏற் படாவிடில் ஏற்படப் போகும் விளை வுகள் என்னவாக இருக்கப்போ கின் றது? என்பது பற்றிய சம்ப வங் களை உற்று நோக்குவது இன்றைய தேவையாக உள்ளது. இந்த விட யத்தில் பார்வை வீச்சை விரி வாக்குவது பல விடயங்களைக் கிரகித்துச் சிந்திப்பதற்கான ஒரு மார்க்கமாகவும் இருக்கப் போகின் றது. இன்று வடுவாக இருந்து பின் னர் பெரிய மடுவாக மாறியிருக் கும் துன்பியல் காரணங்களை ஒரு படிப்பினையாக்கிக் கொள்ள வேண் டும் என்ற விருப்பில் சில கருத்து களைப் பகிர்ந்து கொள்வோம்.

"அறளை பேந்து போன மனு சனோட இருக்க ஏலாதாம்", " எதுக்கெடுத்தாலும் புறணி தான்" "கொஞ்சங்கூட சூடு சுறணை யில்லை", " எதற்கெடுத்தாலும் கெப்பர் கதைகள்.. இன்றுள்ள பல முதியவர்களைப் பற்றிய சமூகத் தின் வர்ணனை வசனங்கள் இவை. இவர்களின் வாழ்க்கைப் பக்கங் களை புரட்டிப் பார்த்தால் வேத னையின் உச்சத்தில் வாழ்ந்து மிச்சம் இல்லாத, அச்சம் இல்லாத சாம்ராஜ்ஜியத்தின் சிற்ற ரசர்க ளாக இருந்திருப்பது தெரிய வந் துள்ளது. பிள்ளைகள் சமூ கம், உறவுகள் அனைவரும் வெகு தொலைவில் நின்று எட்டிப் பார்ப் பவர்களாக இருக்கின்றார் கள்.

கோபப்படுபவர்களாகவும் தன் னையே நொந்து கொள்பவர்களா கவும் இவர்கள் இருக்கின்றார் கள். இப்படிப்பட்ட முதியவர்கள், முதியோர் இல்லங்களை நாடி வந்தும் விடுகிறார்கள். அட்டகாசமான வாழ்வி யலை இங்கும் அறிமுகப்படுத்தி குழப்பத்தின் நாயகர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட முதியவர்களைப் பராமரிப்பது என்பது கைதேர்ந்த ஒரு கலையாக அமைகின்றது. இவர்களுக்குத் தொடர்ந் தும் அடைக்கலம் கொடுப்பது யார்? பிள் ளைகளும் "ஐயோ" என அவலக் குரல் எழுப்பி இவர்களைப் பற்றிக் கதைக்க அழைத்தாலே ஓடுகிறார்கள். சுகமாக முதுமை அடையாமையால் ஏற்பட்ட விளைவைப் பாருங்கள். சமூகத்துக்கும் பாரமாகி, வீட்டுக்கும் பாரமாகி, முதி யோர் இல்லத்துக்கும் சவாலாகி தங் களை அசல் வில்லன்களாக்கிக் கொண்டு விடுகின்றார்கள். அட்டகாசத்தின் பிறப் பிடமாகவும், வசைப்பாடலின் இருப்பிட மாகவும் விளங்கி நடமாடும் சேவை யையும் நடத்திக் கொண்டிருக்கின் றார் கள். முதியவர்களைப் பெறுமதி யற்ற தாயும் சுமைகளுடனான தோரணையி லும் சமூகம் பார்க்கின்றது. இந்த விலகல் நிலைக்குக் காரணம் யார்? சாய்வு நாற் காலியில் இருந்து கொண்டு, சொந்தக் காலில் நின்றவர்கள் மகிழ்ந்து போய்க் கிடக்கின்றார்கள். இந்த முதியவர்களைச் சுற்றிப் பெரிய கூட்டமே சூழ்ந்து போயுள் ளது. இவர்களைச் சமூகம் காக்கின்றது; போற்றுகின்றது. இவர்கள் உள மேம் பாட்டுடன் சுகமாக முதுமையடைந்த வர்கள்; பக்குவப்பட்ட வர்கள். வாழ்க்கை யின் ஒவ்வொரு அசைவுகளையும் செப்பனிட்டுக் கொண்டவர்கள்.

வந்தோம், இருந்தோம், சென்றோம் என்றிராது வாழ்வதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது? எங்களால் பிறருக்கு உதவ முடியாவிட்டாலும், உபத்திரவம் ஆவது செய்யாது இருக்க வேண்டும். இப்படி யிருந்தாலே பெரிய விடயமாகி விடு கின்றது. முதியவர்கள் சமூகத்தில் நிந்திக் கப்படுவதும், தண்டிக்கப்படுவதும் பாவ மான செயல்கள்தான்.

இவையனைத்துக்கும் தவிர்க்கும் மார்க் கமும் இருக்கும் வேளையில் முயற்சிக் காதிருப்பது வேதனை தருகின்றது.

முதியவர்கள் முதுமையில் குழந்தை களைப் போல் மாறி விடுகின்றார்கள். இறப்பின்போது ஒரு கோடு போலவே ஆகி விடுகின்றார்கள். ஆனால் மனதின் வலி மைக்கு ஏற்பச் செயற்படும் சுய நினைவு வரையான செய்கைகளை மற்றவருக்கு இடைச்சலில்லாத வகையில் செய்ய முடி யும். அதைச் செய்வதற்கு “உளநல மேம் பாடு" அவசியமாகும். அதுவும் 60 வய துக்கு முன்பு பயிற்சியா ளராக மாறுவது அவசியமாகும்.

பல பட்டப் பெயர்களைச் சுமந்து கொண்டு முதுமைக்குக் கல்லெறியும் கூட்டத்தின் இலக்குக்கு உரியவர்களாக எம்மை உரு வாக்கப் போகின்றோமா? அல்லது முது மைக்கு இலக்கணமாகும் வித்தகர்களில் ஒருவராக இருக்கப் போகின்றோமா? எனக்குப் புரிந்து விட்டது. உங்களுக்கும் புரிந்திருக்கும் என நினைக்கின்றேன்.


முதுமையின் திறவுகோலாக ஆயத்தங் கள் செய்யாததால் ஏற்படப்போகும் விபரீ தங்களை இன்றும் காணமுடிகின்றது. அனுபவப் பகிர்வுக்காக நாங்கள் ஆயத் தமாகின்றோமா? எண்ணிப் பாருங்கள். பிறந்தால் என்றோ ஒருநாள் இறந்து தான் ஆகவேண்டும். பிறப்பில் 95 வீத மான வீடுகள் மகிழ்வுறுகின்றன. இறப் பிலும் இன்று 95 வீதமான வீடுகளில் மகிழ்ச்சி தாண்டவமாடுகின்றது. இறப் பின் செய்தியைக் கேட்டதும் “அப்பாடா ஒரு மாதிரிபோயாச்சு" என நிம்மதிப் பெருமூச்சை விடுகிறார்கள். முதியவர்களின் இறப்பு வீடு களில் கோலாகலமாகி விடு கின்றன. இன்று இறப்பு என்பதும் திரு விழா மாதிரி இருக்கப் பார்க்கின்றது.

எனவே நாங்களேனும் உளநல மேம் பாட்டுடன் சுகமாக முதுமையடைவோம். எங்கள் இறப்பிலும் மற்றவர் நிம்மதிப் பெருமூச்சு விடுவதை தவிர்க்கச் செய் வோம். சுமையற்ற வாழ்வை நோக்கி அணி பயில்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூச்சிகளின் தொல்லைகளுக்கு முடிவு கட்டும் கண்டுபிடிப்பு

வீடுகளிலும், ஏனைய பொது இடங்களிலும் பூச்சிகளால் ஏற்படும் தொல்லைகளுக்கு முடிவு கட்டும் முகமாக ஓர் அரிய கண்டு பிடிப்பை ஜேர்மன் விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ளனர்.
அதாவது பூச்சிகள் நடக்கும்போது அவற்றின் கால்களை வழுக்கச் செய்யும் தன்மை கொண்ட மேற்பரப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
ஜேர்மனியில் உள்ள பிறிபேக் (Freiburg) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இதனை உருவாக்கியுள்ளனர்.
இவை 15 மைக்ரோ மீற்றர் தடிப்பைக் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.




## உங்கள் மனதில் உள்ளதை வெளிப்படுத்தும் புதிய தொழில்நுட்பம்

றிஸ்பான் (Wristban) எனும் தொழில்நுட்பம் மூலம் பல்வேறு செயற்பாடுகளை செய்ய முடி யும் என்பது அண்மையில் நிரூபிக்கப்பட்டிருந் தது. இவை உயிர் தொழில்நுட்பத்தினைக் கொண்ட பிந்திய கண்டுபிடிப்பாக இருந்தது.
இந்நிலையில் தற்போது (Headbands) கெடபான்ஸ் என்ற புதிய தொழில்நுட்பம் ஒன்று அறி முகம் செய்யப்படவுள்ளது.
இதன்மூலம் மனிதனது மனதில் உள்ள வற்றினை இலகுவாக அறிந்துகொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
கனடாவை சேர்ந்த InteraXon என்ற நிறுவனத்தினால் இத்தொழில் நுட்பம் அறி முகப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.



## விரைவில் அறிமுகமாகின்றது அன்ரோயிட் ஏ.ஐ. ஸ்மார்ட் கடிகாரம்

ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தியில் பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிய தொழில்நுட்பங்க ளுடன் கூடிய புதிய கைபேசிகளை உருவாக்குவது போன்று தற்போது ஸ்மார்ட் கடிகார உற்பத்தியும் சூடு பிடித்துள்ளது.
இதன் அடிப்படையில் அப்பிள், சம் சுங், சோனி என்பவற்றினை தொடர்ந்து தற்போது அன்ரோயிட் இயங்குதளத் துடன் கூடிய ஏ.ஐ. ஸ்மார்ட் கடி காரங்கள் அறிமுகமாகவுள்ளன.
1.2GHz Processor, உட்பட 3G வலையமைப்பு போன்ற தொழில் நுட்பங்களைக் கொண்டுள்ள இதன் ஆரம்ப விலையானது 279 டொலர் களாக இருக்கும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.




## டுவிட்டர் அலர்ட் (Twitter Alert) மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வசதி அறிமுகம்




இயற்கையின் சீற்றம் போன்ற சூழ் நிலைகளில் எச்சரிக்கை தருவ தற்காக (Twitter Alert) டுவிற்றர் அலட் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
உலகளவில் பிரபலமடைந்த சமூக வலைத்தளங்களில் ஒன்று தான் டுவிட்டர்.
இது தற்போது புதுவித சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதா வது இயற்கைச் சீற்றம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் எச்ச ரிக்கை தரும் சேவையை ஆரம் பித்துள்ளது.
இதுகுறித்து தலைமை அதிகாரி ஒருவர், கடந்தாண்டு லைலைன் என்ற பெயரில் ஜப்பானில் எமர் ஜென்சி அக்கவுன்ட்ஸ் மூலம் அவ சரகால தகவல்களை பரிமாறிக் கொள்ள வழி செய்தோம்.
இதேபாணியில் இப்போது டுவிட் டர் அலர்ட் என்ற பெயரில் உலகம் முழுவதும் பயனளிக்கும் வகை யில் ஏற்படுத்தியுள்ளோம்.
சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பொலிஸ், பொதுமக்கள் பாதுகாப்பு முகவர்கள், அவசரகால சேவை அமைப்புகள், செஞ்சிலுவை போன்ற அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்றவை இவற் றைப் பயன்படுத்தி பொதுமக்க ளுக்கு, அவ்வப்போது தேவையான எச்சரிக்கைத் தகவல்களை வழங்க முடியும் என்று நம்புகிறோம்.
மேலும், டுவிட்டர் கணக்கு வைத் துள்ளவர்களுக்கு போனிலும் தக வல்களை வெளியிடத் தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரீ.வி., வானொலி போன்ற தகவல் தொடர்புச் சாத னங்கள், மின்சார துண்டிப்பு போன் றவை ஏற்படும்போது டுவிட்டர் அலர்ட் சேவை பயன்படும் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே அமெரிக்கா உட்பட சில நாடுகளில் இயற்கை சீற்றம் போன்ற சூழ்நிலைகளில் எச்சரிக்கைத் தகவல் தரும் சேவையை டுவிட்டர் மேற் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கொரில்லா கிளாஸ் (Gorilla Glass) திரைகளைப் பாதுகாக்கும் (Rhino Shiel) றினோ ஷீல்

மக்களால் அதிகளவில் பயன்படுத்தப் பட்டுவரும் ஸ்மார்ட் கைபேசிகளில் உள்ள Gorilla Glass திரைகளை பாதுகாப்பதற்கென Rhino Shiel எனும் பாதுகாப்புக் கவசம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட இது 95 சதவீதத் திற்கும் அதிகமாக ஒளியை ஊடுருவ விடக்கூடியதாக இருப்பதுடன், கைவிரல் அடையாளங்கள் மற்றும் எண்ணெய் பொருள்களிலிருந்து பாதுகாப்பு அளிக் கின்றது.
மேலும் 0.29 மில்லி மீற்றர் தடிப்பு டையதாகக் காணப்படுவதுடன், இதன் விலை 29 டொலர்கள் வரையில் இருக்குமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.





## மனிதனைப் போன்றே ரோபோவுக்கும் மூளை! இந்திய விஞ்ஞானியின் அபார கண்டுபிடிப்பு

ரோபோவும் மனிதனைப் போல தன்னிச்சையாகச் செயற் படக்கூடியவாறு அதற்கான மூளையை அமெரிக்க புகழ் பெற்ற இந்திய வம்சாவளி தமிழ் விஞ்ஞானி ஜகன்னாதன் சாரங்கபாணி கண்டுபிடித்துள்ளார். மிசோரி அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பல ஆராய்ச்சிகளை செய்து பெருமை பெற்ற ஜகன்னாதன், ரோபோக்கள் பற்றி பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகிறார். இவர் தலைமையிலான குழுவினர் பல வகையில் ரோபோ செயற்பாடுகளைக் கணக்கிட்டு அதற்கு தனிக் கட்டளைகளைப் பிறப்பித்து, தானியங்கி முறையில் மட்டுமன்றி சுயமாக சிந்தித்து குறைந்தபட்ச செயற்பாடுகளை மேற்கொள்ள வைத்தனர்.
இதில் ஜகன்னாதன் வெற்றி கண்டுள்ளார். ரோபோ சுயமாகச் சிந்தித்து செயற்படக்கூடிய அளவில் அதற்கு மனிதர்களுக்கு உள்ளதைப்போல மூளையைக் கண்டுபிடித்துள்ளார்.
சகல கட்டுப்பாடுகளையும் மூளையில் வைத்து மனிதனை போலவே சிந்திக்கும் அளவுக்கு, புரிந்து கொள்ளும்



அளவுக்கு ரோபோவின் செயற்பாட்டை மாற்றியமைத்துள்ளார். சோதனை ரீதியாக ரோபாட்டுக்கு மூளையைப் பொருத்தி செயற்படுத்தியபோது, ரோபாவுக்கு இலக்கை மட்டும் கட்டளை [illegible] போல [illegible] என்பதில் அதிகமாக வெற்றி கண்டுள்ளார்.

ரோபோவுக்கு அவர் கண்டுபிடித்த மூளையைப் பொருத்துவ தில் படிப்படியாக மேலும் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்த ஜகன்னாதன், எதிர்காலத்தில் ரோபோவால் மனிதனைப் போல சிரிக்க முடியும், கோபப்பட முடியும், ஏன் முகபாவத்தைக்கூட காட்ட முடியும் என்கிறார்.
பாலம் கட்டல், மேம்பாலம் அமைப்பது போன்ற இடங்களில் ஒரே நேரத்தில் பத்து புல்டோசர்களை இயக்க வேண்டும் என்றால் அதில் உள்ள பழுதுகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதைச் சரி செய்யவும் வேண்டும் என்றால் இந்த மூளையுள்ள ரோபாக்களை பயன்படுத்தலாம். அது தான் எனது குறிக்கோள் என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## வேண்டுகோள் விடுத்தார் கிளி. அரச அதிபர்

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்ற போது அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு சில குடும்பங்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறுகின்றன. இதனால் அவர்களது உரிமைகள் மீறப்படுகின்றன.

எனவே சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அந்த வகையில் மாவட்டத்தில் இடம்பெறக் கூடிய சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்துவதுடன் அவர்களது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்றலில் ஆரம்பமானது. சிறுவர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், அரச அதிபர், மேலதிக அரச அதிபர் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் ஆகியோர் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியாக மாவட்டச் செயலக வளாகம் வரை சென்றனர். பின்னர் அங்கு விழிப்புணர்வுக்கூட்டம்இடம்பெற்றது. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## புதிய உதவித் தேர்தல் ஆணையாளர்

வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளராக பி.குகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய ஏ.எஸ் கருணாநிதி இளைப்பாறுவதையடுத்து யாழ்ப்பாணத்தில் முன்பு உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய குகநாதன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-402)

## மாருதம் சிறப்பு மலர்

வவுனியா, ஒக்.4

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வவுனியா கலை இலக்கிய நண்பர்கள்வட்டத்தின் வெளியீடானமாருதம் சஞ்சிகையின் சிறப்பு மலர் வெளிவரவுள்ளது. (க-421)

## சிறுவர் அரங்க நிகழ்வின் முடிவுகள்

துணுக்காய்.ஒக்.4

துணுக்காய் கல்வி வலய மட்டத்தில் இடம் பெற்ற சிறுவர் அரங்க நிகழ்வுகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகளில் முதலாம் இடத்தை ஒட்டுசுட்டான் கோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை துணுக்காய்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆரம்ப வித்தியாலயமும் பெற்றுக் கொண்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (வ-422)

## விவசாயிகளிடம் கையளிக்கப்படும் டிராக்டர்கள்

அக்கராயன். ஒக்.4

கிளிநொச்சி அக்கராயன் கமநல சேவை நிலையத்தின் டிராக்டர்கள் விவசாய அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

காலபோக நெற்செய்கைக்கான உழவு வேலைகள் ஆரம்பித்துள்ள நிலையில் இந்த டராக்டர்கள் விவசாய அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வின் பின்னர் கமநல சேவை நிலையங்களுக்கு டராக்டர்கள் வழங்கப்பட்டு விவசாயிகளின் வயல் நிலங்கள் ஓரளவு குறைந்த கட்டணத்தில் உழவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மிதிவெடி ஆபத்துக்களை மக்கள் தவிர்க்க வேண்டும்

அக்கராயன், ஒக். 4

மிதிவெடிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை உணர்ந்து அதில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளாலி, முகமாலைப் பகுதிகளில் அடிக்கடி நிகழும் மிதிவெடி ஆபத்துக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மிதிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. மீள்குடியமர்வின்போது இந்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

பாடசாலைகளிலும் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் மக்கள் இதனை மறக்காமல் இருக்கும் பொருட்டு தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஊட்டப்படுகின்றனர்.

கிளிநொச்சியின் கிளாலி, முகமாலைஆகிய இடங்கள்மிதிவெடி அபாயம் மிகுந்தவை என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். சிலர் மிதிவெடி அபாயம் நிறைந்த பகுதிகளுக்குள் அனுமதி யின்றி நுழைவதன் காரணமாக உயிராபத்துக்களுக்கும் , காயங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

மிதிவெடி அபாயம் நிறைந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், அபாயம் ஏற்படுமென அறிந்திருந்தும் சிலர் அந்த இடங்களுக்குச் சென்று ஆபத்துக்களைத் தேடிக் கொள்கின்றனர்.

மிதிவெடி அபாயங்களைத் தவிர்ப்பது தொடர்பாக மக்கள் அதிகளவு கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்



மன்னார், ஒக்.4

மன்னார் வலயக்கல்வி அலுவலகமும், முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து நடத்திய கைவினைப் பொருள்களுக்கான கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மன்னார் வலயக்கல்வி பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கௌரவ விருந்தினராக மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்.ஏ.துரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சியில் கலந்து கொண்டு தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பயிற்சி பெற்றவர்களினால் உருவாக்கப்பட்ட பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இதன் போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-12)



அக்கராயன் மத்திய பகுதியிலிருந்து ஸ்கந்தபுரம் வரையான பகுதிக்கு மின்சார இணைப்பு வழங்கும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (க-18)

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை

வவுனியா .ஒக்.4

வவுனியா கல்நாட்டியகுளம் பிரதான வீதியைப் புனரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நீண்ட காலமாகவே மிகவும் மோசமான நிலையில் இந்த வீதி காணப்படுகின்றது. இதனால் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் இந்தப் பகுதி மக்கள் தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர். சைக்கிளில் கூடச் செல்ல முடியாதவாறு இந்த வீதி மேடு பள்ளங்கள் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் தொடக்கம், ஏனையவர்கள் வரை சிரமங்களின் மத்தியில் இந்த வீதியூடாகச் செல்வதைக் காண முடிகின்றது.

எனவே வேப்பங் குளம் சந்தியில் இருந்து கல் நாட்டிய குளம் சித்தி விநாயகர் ஆலயம் வரையிலான வீதியை உரியவர்கள் புனரமைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-421)

# கிரவல் மண் குவியலால் அவலப்படும் கிராம மக்கள்

கிளிநொச்சி புளியம்பொக்கணை-வட்டக்கச்சிப் பிரதான வீதியில் கிரவல் மண் பறிக்கப்பட்டுள்ளதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏ-35 வீதியின் புளியம்பொக்கணைச் சந்தியில் இருந்து வட்டக்கச்சிக் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது குறித்த வீதியின் மையப் பகுதிகளில் கிரவல் மண் குவியல் குவியல்களாகப் போடப்பட்டு மாதக் கணக்கில் காணப்படுகின்றன.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் [illegible] குளம், வட்டக்கச்சி, இராமநாதபுரம் [illegible] பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வீதியில் பயணிக்க முடியாது சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவரே இந்த வீதியைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)



# பொது மண்டபம் இல்லாததால் மக்களுக்குச் சிரமங்கள்

அக்கராயன்.ஒக்.4

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியிலுள்ள கரந்தாய்க் கிராமத்தில் பொது மண்டபம் அமைக்கப்படாததால் கிராம மக்கள் பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சுமார் 102 குடும்பங்கள் வசிக்கின்ற இந்த மீள் குடியமர்வுக் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்று இல்லாத நிலை காணப்படுவதால் இங்கு ஏற்பாடு செய்யப்படுகின்ற கூட்டங்கள் மர நிழலின் கீழ் நடத்தப்படுவதாக இங்கு இயங்கி வரும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

50 குடும்பங்களுக்கு இந்தியன் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு வசிக்கும் மக்கள் நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதில் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

தமது கிராமத்தில் அமைக்கப்படவிருந்த பொது மண்டபத்தை வேறொரு கிராமத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் இங்குள்ள மக்கள் கவலை தெரிவித்தனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிரிக்கும்.

**இடபம்:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதி காரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட் டாரின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்துச் செல்லும். தன்னம்பிக்கை குறையும். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து நடப்பது நல்லது.

**நாளை**

புரட்டாதி-19 சனிக்கிழமை 05.10.2013
திதி: அமாவாசை மு.ப.06.51
நட்சத்திரம்: அத்தம் பி.ப.05.22 வரை
சுபநேரம்: 03.02 - 04.32 வரை
இராகுகாலம்: 09.02 - 10.32 வரை

**துலாம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**தனுசு:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மகரம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அகங்காரப் பிரச்சினை வந்து நீங்கும்.

**கும்பம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | | 2 | 5 | 4 | | | |
| | 5 | | | | 9 | 1 | | |
| | | | 8 | | 1 | | | 2 |
| | | 6 | 4 | | | 2 | 1 | 9 |
| | | 9 | | | | 5 | | |
| 1 | 2 | 4 | | | 3 | 8 | | |
| 7 | | | 9 | | 6 | | | |
| | | 5 | 7 | | | | 4 | |
| | | | 1 | 2 | 5 | | 8 | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 4 | 3 | 5 | 7 | 8 | 6 |
| 7 | 6 | 3 | 8 | 9 | 2 | 4 | 5 | 1 |
| 4 | 8 | 5 | 1 | 6 | 7 | 2 | 3 | 9 |
| 5 | 3 | 4 | 7 | 2 | 6 | 1 | 9 | 8 |
| 6 | 2 | 1 | 3 | 8 | 9 | 5 | 4 | 7 |
| 8 | 7 | 9 | 5 | 4 | 1 | 3 | 6 | 2 |
| 9 | 1 | 6 | 2 | 5 | 3 | 8 | 7 | 4 |
| 3 | 4 | 7 | 6 | 1 | 8 | 9 | 2 | 5 |
| 2 | 5 | 8 | 9 | 7 | 4 | 6 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

BOC இலங்கை வங்கி

# மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏலவிற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | அடகுத் திகதி | ஏல விற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|---|
| பருத்தித்துறை கிளை(மந்திகை, மருதங்கேணி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 04.01.2013இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 04.07.2012இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | பருத்தித்துறை கிளை 2013 ஒக்ரோபர் 5ஆம், 6ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| வல்வெட்டித்துறை கிளை | 07.01.2013இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 07.07.2012இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | வல்வெட்டித்துறை கிளை 2013 ஒக்ரோபர் 8ஆம் திகதி (செவ்வாய்) காலை 9.30 மணிக்கு |
| நெல்லியடி கிளை (கரணவாய் விரிவாக்கற்கிளை உட்பட) | 11.01.2013இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 11.07.2012இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | நெல்லியடி கிளை 2013 ஒக்ரோபர் 12ஆம், 13ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| சாவகச்சேரி கிளை கைதடி கிளை கொடிகாமம் கிளை பூனகரி கிளை பளை கிளை | 18.01.2013இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 18.07.2012இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | சாவகச்சேரி கிளை 2013 ஒக்ரோபர் 19ஆம், 20ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| அச்சுவேலி | 25.01.2013இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 25.07.2012இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | அச்சுவேலி கிளை 2013 ஒக்ரோபர் 26ஆம், 27ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |


இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வட பிராந்திய காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 222 4683
021 222 3126

(ச/12545)(5.6.3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வைரவப்பிள்ளை இரத்தினசபாபதி**
(அங்களப்பாய் இணுவில் கிழக்கு.)

தோற்றம்
16.11.1956

மறைவு
05.09.2013

செல்லக்குட்டி உங்களைப் பிரிந்த சோகத்தாலே
நாங்கள் இன்று தினம் தினம் அழுகின்றோமே
செய்தியது கேட்ட போதே செயலிழந்து போனோம்
நாம் பாதி உயிர் போனது போல பாவி நாங்கள்
தவித்து நின்றோம்
சோகத்தைச் சொல்லி அழ வார்த்தையில்லை
சுமைதாங்க இதயத்தில் வலுவுமில்லை
பாவத்தை ஏது செய்தோம் புரியவில்லை
பாவிகள் எங்களைப் போல் எவருமில்லை
நன்றாகப் பார்த்தெடுத்தோம் ஓடி ஓடிக்கடமை
செய்தோம்
கூடியிருந்து குதூகலித்த காலம் இனி எப்போது
வரும் என்று ஏங்குகின்றோம்
பக்கத்தே நீங்கள் இருந்தீர்கள் என்று பயம்
ஏதும் இன்றி நாங்கள் இருந்தோம்
துன்பத்திலும் இன்பத்திலும் எம்மோடு
இருந்தீர்களே!
இன்று மட்டும் எம்மைத் தவிக்கவிட்டு எங்கு
போனீர்கள்!
அப்பா என்று சொல்லுவதற்கு எனக்கும்
என் பிள்ளைகளுக்கும் பெருமிதமே
அண்ணா என்று சொல்லுவதற்கு
உங்கள் சகோதரர்களுக்குப் பெருமிதமே
மச்சான் என்று சொல்லுவதற்கு உங்கள்
மச்சான், மச்சாள்மாருக்குப் பெருமிதமே
பெரியமாமா என்று சொல்வதற்கு
உங்கள் மருமக்களுக்குப் பெருமிதமே
பெரியப்பா என்று சொல்லுவதற்கு
உங்கள் மகள்மாருக்கு பெருமிதமே
அன்பு பாசமும் கலந்து ஆதரித்து வழங்குவீரே
பரிவுடன் பல கதைகள் வழங்கும்
பண்பு கொண்டவரே நம் வாழ்க்கை
மேலோங்கிட நல்லதெல்லாம் தந்தீரே
பார்த்த விழிமூடாது காத்து நின்றோம்
காணவில்லை என்றவுடன் தீபட்ட
புண்ணாய்த் திணறுகின்றோம்.
எங்கே நீங்கள் என்று தெரியவில்லை
திசையெல்லாம் தேடிப்பார்த்து விட்டோம்
சிலை வடித்துத் தொழுதாலும் தீராத கவலை
எமக்கு நீங்கள் காட்டிய அன்பை
இடைநிறுத்திவிட்டு இன்று எங்கே போனீர்கள்!
என்று எமக்குத் தெரியவில்லை
இருப்பினும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

உங்கள் பாசமிகு மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்,
மச்சாள்மார்கள், மச்சான்மார்கள்,
மருமக்கள், மகள்கள்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(32265) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகளில் எரிபொருள் மோசடி

## கட்டுப்படுத்த புதிய யுக்திகள் வருகின்றன

கொழும்பு.ஒக்.4

நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் இடம் பெற்று வரும் எரிபொருள் விற்பனை மோசடி குறித்த தகவல் வெளியாகியுள்ளது. சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படும்போது இந்த மோசடி இடம் பெற்றுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



இந்த மோசடி எரிபொருள் நிரப்பு நிலைய இயந்திரம் மற்றும் ஊழியர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளாந்தம் சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படும்போது போலித் தரவுகள் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

> நாளாந்தம் சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படும்போது போலித் தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ”

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு குற்றம் உறுதி செய்யப்பட்டு சிறைச்சாலை ஊழியர் ஒருவருக்கு தண்டனையும் வழங்கப் பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும்போது இனிமேல் புதிய யுக்திகள் கையாளப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# 6 வருடங்களின் பின்னர் தோண்டப்பட்டது சடலம்

கொழும்பு.ஒக்.4

2007 ஆம் ஆண்டு புதைக்கப் பட்ட சடலம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லாஹ் முன்னிலையில் மட்டக்களப்பு பொலிஸாரால் புதன் கிழமை தோண்டப்பட்டது.

வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை கிராம சேவகர் பிரிவின் நெச்சண்டகல், இத்தியடிச்சேனை புதைக் குழியில் புதைக்கப்பட்ட சடலமே இவ்வாறு தோண்டப் பட்டது.

இத்தியடிச்சேனையை சேர்ந்த பொக்கணியன் இராமக்குட்டி என்பவர் 2007.01.27 ஆம் திகதி தனது மூத்த மகளின் மகனான சீனித்தம்பி கிருஸ்ணேஸ்வரன் என்பவரால் குத்திக் கொலைசெய்யப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டி பிரேத பரிசோதனை செய்யுமாறு மட்டக்களப்பு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவிற்கமைய நீதிபதி முன்னிலையில் சடலம் புதைக்கப்பட்ட இடத்தில் அமைக்கப் பட்டிருந்த கல்லறை உடைக்கப்பட்டு தோண்டப்பட்டு எச்சங்கள் எடுக்கப்பட்டு பொலிஸாரால் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டன. (ச)






# பாராட்டுகின்றோம்

யா/ இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி

செல்வி **தரங்கினி பாலமுருகன்**

2013–தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டுவதுடன் மேலும் பல கலைகளைக் கற்று பட்டங்களைப் பெற்று உயர்வடைய நல்லூர்க் கந்தன் ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துபவர்கள்:
அப்பம்மா,
சுப்புச்சாமி பஞ்சரத்தினம்,
சித்தப்பாமார்கள், சித்திமார்கள்,
மாமாமார்கள், அத்தைமார்கள்.

நல்லூர்.

(32276) (7.6.3)


# பொது ஊழியர் சங்கக் கூட்டம் சனிக்கிழமை

அம்பாறை.ஒக்.4

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை கல்முனையில் நடைபெற வுள்ளது.

இந்தக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் கல்முனை சனச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமைத்துவ சபைக் கூட்டத்தில், வட மாகாண சபைத்தேர்தல் வெற்றி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான சங்கத்தின் மாவட்டக் கிளைகளின் அங்குரார்ப்பணம், கிழக்கு மாகாண சபையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்று சங்கப் பொதுச் செயலர் எம்.எம். ஏ.வகாப் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த வட மாகாண சபைத் தேர்தலில், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே ஆதரிப்பதென ஏற்கனவே தீர்மானம் நிறை வேற்றியிருந்தது.

சங்கத் தலைவர் எஸ்.லோக நாதன் மற்றும் முக்கியஸ்தர்கள் வடக்கில் கூட்டமைப்புக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரைகளில் பங்கு கொண்டிருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

போர் காலத்துக்கு முன்பிருந்தே வடக்கில் தமது பணிகளை முன் னெடுத்த பொது ஊழியர் சங்கம், அங்கு பிரதேச மற்றும் மாவட்டக் கிளைகளைப் புனரமைத்து வருவது டன், பெருமளவில் உறுப்பினர்க ளையும் சேர்த்து வருகின்றது.

யாழ்.மாநகர சபை ஊழியர்கள் பணிநீக்கம் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட வுள்ளது. (ச-30)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**தரம் 6 அனுமதி 2014**

2013ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது கல்லூரியில் பாடசாலை நேரத்தில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 28.10.2013 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/12560)
(7.6.3)



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

## வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2013

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆட்சிக்குழுக் கூட்டத் தீர்மானப் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.10.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்குக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

★ தேவாரம்
★ அகவணக்கம்
★ தலைமை உரை
★ அதிபர் உரை
★ சென்ற கூட்ட அறிக்கை
★ செயலாளர் செயற்பாட்டறிக்கை
★ பொருளாளர் கணக்கறிக்கை
★ விசேட கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகள்
★ புதிய ஆட்சிக் குழு தெரிவு
★ புதிய தலைவர் ஏற்புரை
★ பிறவிடயங்கள்
★ நன்றி உரை
★ கல்லூரிக்கீதம்

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சங்கத்தின் அச்சிடப்பட்ட வருடாந்த செயற்பாட்டறிக்கை, கணக்கு அறிக்கைகள் போன்ற விவரங்களைப் பெற விரும்பும் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் தமது உறுப்புரிமையை உறுதிப்படுத்த விரும்பும் அங்கத்தவர்கள் 10.10.2013க்கு பின்னர் கல்லூரியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்துடன் பாடசாலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஜ (C/12563)(10,6)

ம. அருள்குமரன்
(செயலாளர்)


# தேவரையாளியில் கல்விக் கண்காட்சி

வடமராட்சி.ஒக்.4

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஶ்ரீகரனும், சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கமும் கலந்து கொள்வார்கள். (ஓ-8)

# வேலணையில் இலவச சட்ட உதவி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.4

வேலணை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் தற்போது சட்ட உதவி ஆணைக்குழுவின் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இலவச சட்ட உதவிகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றன.

குடும்ப வன்முறை, தாபரிப்பு, விவாகரத்து, பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் காணி தொடர்பான [illegible] சட்ட ஆலோசனைகளுக்குமான கருத்துரைகள் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (வ-7)


# சேவைநலன் பாராட்டும் பிறந்ததின வாழ்த்துக்களும்

திருமதி
**இந்திராணி சிவகுமாரன்**
(விஞ்ஞான பாட ஆசிரியை)



**ஆசிரிய சேவை விவரம்**

| | |
|---|---|
| ப/ ஸ்ரிரிங்வெலி தமிழ் வித்தி. | 15.09.1976 - 08.09.1978 |
| ப/ தமிழ் மகா வித்தியாலயம் | 09.01.1978 - 11.09.1981 |
| யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 12.01.1981 - 31.06.1982 |
| ப/ அல் இர்ஷாத் முஸ்லிம் வித்தி. | 01.07.1982 - 28.10.1984 |
| ப/ வெலிமடை முஸ்லிம் வித்தி. | 29.10.1984 - 17.01.1985 |
| யா/இராமநாதன் கல்லூரி | 18.01.1985 - 12.05.1992 |
| யா/உடுவில் முருகமூர்த்தி வித்தி. | 13.05.1992 - இன்றுவரை |

எமது பாடசாலையில் கடந்த 22 வருடங்களாக ஆசிரியராகவும் உபஅதிபராகவும் கடமையாற்றி 03.10.2013 இல் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்ற எமது விஞ்ஞானபாட ஆசிரியை திருமதி இந்திராணி சிவகுமாரன் அவர்களை சகல சேம நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.

(32275)(45,6,3)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**வின்சன் பெனடிற் கிறிஸ்ரின் ஜோஜிதன்**

யா/வெற்றிலைக்கேணி
றோ.க.த.க. பாடசாலை மாணவன்
செல்வன் வின்சன் பெனடிற் கிறிஸ்ரின் ஜோஜிதன் 2013, 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு,

அவரைப் பயிற்றுவித்த அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியறிதலையும், பாராட்டுதலையும் தெரிவிக்கின்றோம். மருதங்கேணி கோட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றதையும் பாராட்டி மகிழ்கின்றோம். இவர் எதிர்காலத்தில் மேலும் பல பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்று உயர்வடைய எல்லாம் வல்ல புனித அந்தோனியார் ஆசி பெறவும் வாழ்த்துகிறோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அப்பா வின்சன் பெனடிற்,
அம்மா சத்தியபாமினி,
தம்பி கிறிஸ்ரின் சாஜிதன்,
தங்கை நல்மியா.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

(37543)(10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர் சம்மேளனக் கூட்டம்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் சம்மேளனத் தலைவரும் சிரேஷ்ட ஊடகவிய லாளருமான மீரா எஸ்.இஸடீன் தலைமையில் சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் நடைபெறும். (ச-30)

# அமைச்சர்கள் மூலம் ஊழல் தகவல் அரசின் செல்வாக்கு சடுதியாகச் சரிவு

## குற்றம் சாட்டுகிறது ஐக்கிய தேசியக் கட்சி



கொழும்பு, ஒக்.4

அரசின் ஊழல்கள் குறித்த தகவல்களை அமைச்சர்களே எமக்கு வழங்குகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் அரசுக்கு இருக்கும் செல்வாக்கு குறைந்து கொண்டு வருகின்றமையையும் எம்மால் உணர முடிகின்றது.

இவ்வாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசினால் நாட்டிற்கு நட்டம் ஏற்பட்டு வருகின்ற மையை நாம் கூறியே ஆக வேண்டும் என்கின்ற அவசியமில்லை.

இந்த நிலையில் அரசு மாத்தறை யிலிருந்து ஜனாதிபதியின் சொந்த ஊர் வரையிலான 27 கிலோ மீற்றர் தூர ரயில் பாதையைப் புனரமைக்கவுள்ளது. இதற்காக சுமார் 260 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெறவுள்ளது. இந்தத் தொகையை மக்களே ரூபாவில் கணக்குப் பார்த்துக் கொள்ளட்டும். இதுபோன்ற பல ரயில் பாதைகளையும் புனரமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இப்படியான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு 7 மில்லியன் டொலர் ஊழல் அரசுக்குள் இடம் பெறுகின்றமை முக்கிய விடயமாகும்.

இப்படியான ஊழல்களுக்கு அமைச்சர்களைக் குறை கூறமுடியாது.

காரணம் அவர்கள் இன்று, ஜனாதிபதி அலுவலகத்தால் தயாரித்து அனுப்பப்படும் பத்திரங்களுக்கு கையெழுத்தை மாத்திரமே இடும் சிற்றூழியர்களின் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு இது போன்ற செயல்களை எதிர்க்கவோ அல்லது தட்டிக் கேட்கவோ பலமில்லாமல் போயுள்ளது.

சொல்லப்போனால் அமைச்சர்களின் நிலை இன்று அரசுக்குள் இயங்கும் சமிக்ஞை விளக்குகளைப் போன்றுதான் காணப்படுகிறது. இதனால்தான் அரசின் ஊழல்கள் குறித்த தகவல் களை இவர்கள் எமக்கு வழங்குகின்றனர்.

இவ்வாறான செயல்களால் மக்கள் மத்தியில் அரசுக்கு இருக்கும் செல்வாக்கு குறைந்து கொண்டு வருகின்றமையையும் எம்மால் உணர முடிகின்றது.-என்றார். (சி)

## உலக முதியோர் சுட்டியில் 36ஆம் இடத்தில் இலங்கை

கொழும்பு, ஒக்.4

ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப் பட்ட முதியவர்களுக்கான சர்வதேச தினமான செவ்வாய்க்கிழமை, உலகளாவியரீதியில் முதியவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் - பராமரிக்கப்படுகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு "ஹெல் பேஜ்" என்னும் தொண்டு அமைப்பு நாடுகளின் வரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

முதியோருக்கான அதிசிறந்த நாடு என்பதற்கான உலக சுட்டியில் இலங்கை 36 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதில் சுவீடன் முதலாமிடத்தையும், ஆப்கானிஸ்தான் இறுதி இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

சுவீடனைதங தொடர்ந்து நோர்வே, ஜேர்மனி நெதர்லாந்து, கனடா என்பன அடுத்தடுத்து இடங்களைப் பிடித்துள்ளன.

உலகின் அதியுயர் செல்வந்த நாடான அமெரிக்கா எட்டாம் இடத்தில் உள்ளதுடன், ஐக்கிய இராச்சியத்தால் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடிக்கமுடியவில்லை.

இலங்கையிலுள்ள முதியோர் குடித் தொகை நல்ல அடிப்படைக் கல்வியிலும் சுகாதார சேவைகளிலும் நன்மை அடைந்துவருகின்றது.

எனினும் இலங்கையில் போரினால் பாதிக்கப் பட்ட பகுதிகளிலும், மலையகப் பகுதிகளிலும் முதியவர்களின் நிலைமை அவ்வளவு சிறப்பாக இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதியவர்களுக்கான வருமானம், சுகாதாரம், பராமரிப்பு, போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 91 நாடுகளை உள்ளடக்கி இந்தப் பட் டியல் தாயாரிக்கப்பட்டுள்ளது. (ச)


### கண்ணீர்அஞ்சலி



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆளுநரும், முன்னாள் நிர்வாக உத்தியோகத்தருமான

**செல்லத்துரை மகேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை,
உத்தியோகத்தர்கள்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
யாழ்ப்பாணம்.
(C/12558) (6.3.11)

### கண்ணீர்க் காணிக்கை



எமது சக உறுப்பினர் சோ.குமாரதாசன் அவர்களின் சகோதரர்

**சோமநாதர் கிருஷ்ணராஜா**
(கிராம அலுவலர்)

அவர்கள் 30.09.2013ஆம் திகதி அகால மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பருத்தித்துறை மத்தியஸ்த்தர் சபை
தவிசாளரும்/சக உறுப்பினர்களும்,
பருத்தித்துறை.
(C/12553) (7.6.3)

### கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்
வை.உதயராசா அவர்களின் தந்தையார்

**பூ.வைத்திலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க
ஊழியர் நலன்புரி சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(C/12552) (7.6.3)

### ஓராண்டு நினைவுகள்

கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது.
சங்-107-1



அமரர்
**சிதம்பரம் அருணன்**
(மேசியா நகைமாட உரிமையாளர்)

மண்ணில்
10.02.1963

விண்ணில்
04.10.2012

சகோதரிகள்.
மாதாகோயில் லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்லையா சிறிதரன்**
(சிறி)



பிறப்பு
22.01.1961

இறப்பு
24.09.2012

ஆண்டொன்று கழிந்ததையா உங்கள் நினைவுகள் அழியவில்லை
என்றும் எங்கள் நலன்நாடி வந்தீர்கள் உங்கள் நலன் காக்க எமக்கு
கொடுத்து வைக்கவில்லையே?..... பட்டென்று சென்றீர்களே!
பரிதவிக்க எம்மை விட்டு.....! மாண்டவர்களோடு நீங்கள்
விண்ணுலகில் வாழ்ந்தாலும் மனதாலும் நினைவாலும்
நித்தம்...! நித்தம்...! துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(32256) (45.6.3)

### கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
### பாதுகாவலர்கள் பதவி வெற்றிடங்கள்

பாதுகாவலர்கள் நேர்முகப் பரீட்சை கீழ்க்குறிப்பிட்ட காரியாலயத்தில் 5/10, 7/10, 8.10.2013 (சனி, திங்கள்,செவ்வாய்) ஆகிய நாள்களில் மு.ப.10.00மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை நடைபெறும்.

**கீழ் குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.**

(i) கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரம் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
(ii) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(iii) கல்வித் தாரதரப் பத்திரம்/பாடசாலை அதிபரின் நற்சான்றுப் பத்திரம்
(iv) தேசிய அடையாள அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5102, Fax: 021 222 1290
(சி/12550)(6.6.3)

### விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனப் பொருள்களை ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்வதில் ஆர்வமுள்ளவர்களை இணைக்கவுள்ளோம். மாதாந்தம் ரூபா 30,000 தொடக்கம் ரூபா 35,000 வரை சம்பாதிக்கலாம். உணவு, தங்குமிடம் இலவசம். நேர்முகப்பரீட்சைகள் 04.10.2013 தொடக்கம் 08.10.2013 செவ்வாய்க்கிழமை வரை மு.ப 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

சகல சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.

**சுஜித் என்ரபிறைசஸ்**
டச்சு வீதி, சாவகச்சேரி.
(பழனி ஆண்டவர் ஆலயம் முன்பாக)
T.P- 021 227 0586
(C/2756) (6.3.11)

### பணியாளர் தேவை

உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனையில் முன்னணியில் திகழும் கல்ரெக்ஸ் (Caltex) நிறுவனத்தின் யாழ். கிளைக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. கீழ்க் குறிப்பிடப்படும் தகுதி உடையவர்கள் 10.10.2013 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு கீழ் உள்ள முகவரிக்கு தங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

1. க.பொ.த (உ/த) 3 பாடம் சித்தி
2. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்போர்
3. சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்
4. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

Caltex Regional Warehouse
No.158, Stanley Road, Jaffna.
Tel: 021 222 2100
(32271)(3.6.45)

### வீடு விற்பனைக்கு

அரியாலையில் A9 வீதிக்கு அருகில் 3அறைகள் கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 139 7969
(32272)(5.6.3)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972இல் பிறந்த பூரட்டாதி நட்சத்திரம் 3ஆம் பாதம் எந்தவித தீய பழக்கமுமற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
[உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.]

தொடர்பு: 077 608 7078
(32255) (7.6.3)

### வீடு வளவு விற்பனைக்கு

இணுவிலில் உள்ள 1¾ பரப்பு வீட்டுடன் காணியும், சண்டிலிப்பாயில் உள்ள 8 பரப்பு 6.41 குழி கிணற்றுடன் கூடிய காணியும், இணுவிலில் உள்ள 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 538 6262

### வடமாகாண அதிபர் சங்கம்
### அதிபர் தடைதாண்டற் பரீட்சை (EB)
### விசேட கருத்தரங்கு

காலம் : 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை
இடம் : யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபம்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள அதிபர்கள் இவ் விசேட கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடமாகாண அதிபர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(32270)(10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வேங்கடேசனுக்கு இன்று கொடி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபடும் அடியார்களின் குறைகளைப் போக்கி நிறைவாழ்வ ருளும் நோக்கில் யாழ்ப்பாணம் வண்ணை யிலே கோயில் கொண்டு எழுந்தருளி வேங்கடேசப் பெருமாளாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

மகா விஷ்ணுவானவர் வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற பெயரில் எழுந்தருளியுள்ள ஆலயத்தில் இன்று கொடியேற் றத்து டன் இந்த ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் ஆரம் பமாகின்றது.

ஈழத்துத் திருப்பதி என்று போற்றப்படும் இந்தப் பெருமாள் கோயில் யாழ்ப்பாண நகரின் மத்தியிலே கம்பீரமாக வானளாவ நிமிர்ந்து நிற்கும் அழகிய ராஜகோபுரத்துடன் காணப்படுகின்றது.

ஸ்ரீ மகாவிஷ்ணு தமது அடியார் பெருமக்கள் தம்மை வந்தித்துச் சிந்தித்துச் சேவிப்பதற்கு இன்று முதல் 10 நாள் கள் அழகிய அலங்காரத்துடன் வீதியுலாவர இருக்கின்றார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதவிதமான வடிவங்களில் சேவை சாதிக்கும் பெருமாள் அழகே உருவாக ஸ்ரீதேவி பூதேவி சமேதரராக வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆனந்த கோலாகல அதியற்புதக் காட்சி தரும் வேங்கடே சன் ஒவ்வொரு நாளும் சிறந்த கைவண் ணமுடைய கலைஞர்களால் அலங்கரிக்கப்பெற்று அழகே உருவெடுத்தற் போன்று திருவீதி வலம் வரு கின்ற கண்கொள்ளாக் காட்சி காண அடியார் கூட்டம் அலைமோதும்.

இந்தப் பெருமாள் கோயிலில் ஒரு தனிப்பெரு விழாவாக அமைந்திருப்பது தேர்த் திருவிழாவா கும். ஆபத்பாந்தவ னும் அநாதரட்சகனுமான வேங்கடேச வரதராஜப் பெருமாள் இரு சக்திகளும் இரு பக்கமும் இருந்து அருட்காட்சி தரும் அழகு வர்ணிக்க முடியாத ஒன்றாகும்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வின் பேரருட் கருணைக் குப்பாத்திரமாகி வெண்ணெய் திருடும் வேங்கடேசப்பெருமா ளின் நல் விழாப் பொலிவு கண்டுகளிக்க பூர்வ ஜென்ம புண்ணியம் செய் திருக்க வேண்டும். அந்தவகையில் இன்று தொடங்குகின்ற பெருமாளின் மஹோற் சவமானது சிறப்பாக நிறை வேறி வேங் கட வனின் அடியார்கள் அவனு டையபேர்விளங்கும்விழாக் களில் பங்கேற்று அருள் பெற்று வாழ எல் லாம் வல்ல அவனருளையே நாடி நிற்போமாக.

இராசையா ஸ்ரீதரன்

# விபத்துக் காப்புறுதி பெறுவதற்காக நடு வீதியில் கிடந்த மோ. சைக்கிள்

## நீண்ட நேரம் போக்குவரத்துப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

விபத்து இடம்பெற்று அரை மணி நேரம் கழித்தும் காப் புறுதி பெறுவதற்காக நடுவீதி யில் மோட்டார் சைக்கிள் அகற் றப்படவில்லை. இதனால் சுமார் ஒரு மணி நேரம் அந்தப் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.



இந்தச் சம்பவம் நேற்று பலாலி வீதி அம்மன் வீதிச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பலாலி வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் சந்தியில் திரும்ப முற்பட்ட போது அதே வீதியில் பின்பக்கமாக வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

விபத்து இடம்பெற்று அரை மணித்தியாலங்கள் கழிந்த நிலையில் அந்தப் பகுதிக்கு காப்புறுதி உத்தியோகத்தரோ பொலிஸாரோ வருகை தராத காரணத்தால் இன்சூரன்ஸ் பதியப்பட்ட மோட்டார் சைக்கிள் நடு வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது.

எனினும் விபத்து இடம்பெற்ற சிறிது நேரத்தில் இராணு வத் தினர் அந்த இடத்துக்கு வந்த னர். இராணுவ வாகனம் விபத் துக்குள்ளானது என்ற பிழை யான தகவல் வழங்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சம்பவம் இடம்பெற்ற நேரம் பாடசாலை முடிவடை யும் நேரம் என்பதால் அந்தப் பகுதியில் பெரும் வாகன நெரி சல் ஏற்பட்டது. இன்சூரன்ஸ் கொடுப்பனவு பெறுவதற் காகவே மோட்டார் சைக்கிள் நடுவீதியில் விடப்பட்டதாகவும் அந்த இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர். எனினும் அரை மணி நேரத்தின் பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பொலி ஸார் மோட்டார் சைக்கிளை வீதியில் இருந்து நகர்த்தினர்.

சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் சிறுகாயங்களுக்கு மட்டும் உள்ளாகினர். (ந-14-21-ரி)

# தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் இந்த ஆண்டிலும் செயற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.4

2011.9.14 ஆம் திகதி அமைச் சரவைத் தீர்மானத்துக்கு அமைய தயட்ட செவன தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டிலும் நடை முறைப்படுத்தப்படும் என சுற்றாடல் மற்றும் புதுப்பிக் கத்தக்க சக்தி அமைச்சின் செய லாளர்பி.எம்.யூ. டி.பஸ நாயக்க அறிவித்துள்ளார்.

இதற்கமைய அரச தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப் புடன் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி மேற்படி திட்டத்தை நடத்த நடவடிக்கை எடுத்துள் ளது.

இயற்கை வனங்களுக்கு வெளியே மரங்களின் அடர்த்தியை அதி கரிக்கச்செய்தல். மரநடுகை யின் முக்கியத்துவம் குறித்து பொது மக்களுக்கு விழிப் புணர்வூட் டல். அரச அரசசார்பற்றநிறுவனங் களுடன் சேர்ந்து மரநடுகைக ளை மேம்படுத்தல் போன்ற வற்றை அறிமுகப் படுத் தவும் மஹிந்த சிந்தனை தொலை நோக்கு அபிவிருத்திக் கொள் கைக்கு அமைய பசுமை நிறைந்த நாடொன்றை உரு வாக்கவும் இதனூடாகவாய்ப்புக்கிடைக்கும்.

சுற்றாடல் அபிவிருத்தி தொடர் பாக எதிர்கால சந்ததியினரின் மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் அனைத் துப் பாடசாலை மாணவர் களின் பங்களிப்பை பெறு வதற் கும் மேற்படி திட்டம் வழி வகுக்கும்.

சுற்றாடல் பாதுகாப்பு தொடர் பான விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள் மண் பாது காப்புக் கருத்திட்டங்கள் அவற் றுடன் தொடர்புடைய பல்வேறு பணிகளை மாகாண மாவட்ட பிரதேச கிராமிய மட்டங்களில் ஒழுங்கு செய்வதற்கும் நட வடிக்கை மேற்கொள்ள வுள்ள தாக செயலாளர் பஸநாயக்க அறிவித்துள்ளார். (ந-7)

# அருகி வரும் சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்

## மெய்யியல் துறை விரிவுரையாளர் சிவகரன்

யாழ்ப்பாணம், ஒக்.4

கடவுளை காண்பதற்குரிய இலகு வான ஒரே வழி அன்பு மட்டுமே. அருகி வரும் சகோத ரத்துவத்தை மீண்டும் கட்டி யெழுப்ப இந்த நாளில் முன்வர வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந.சிவ கரன் தெரிவித்தார்.

144 ஆவது காந்தி ஜெயந்தி தினம் புதன்கிழமை அகில இலங்கை காந்தி சேவா சங் கத்தில் நடைபெற்றது. அங்கு கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா தவது:-

"நாம் ஒவ்வொருவரும் ஒவ் வொரு சமயத்தினை பின்பற்று கின்றோம். அது எம்முடன் கூடப் பிறந்த ஒன்று. ஆனால் காந்தி அஹிம்சை என்ற சமயத்தினை உருவாக்கினார். ஒவ்வொரு சமூகங்களும் தமக் கான சில தனித்துவ அம்சங் களை கொண்டுள்ளன. கடவுள் உள்ளார் என ஏற்றுக் கொண்ட காந்தி அதனை அறம், தர்ம மாகவெளிப்படுத்தினார். ஆரோக் கியமான எதிர் காலத்தை அஹிம் சையால் வெளிப்படுத் தலாம் என்றார் இந்த நிகழ்வில் "காந்தீயம்" நூல் வெளியீடும் இடம்பெற்றது. (ந-10-20)

# அருணாகிரிநாதர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஒக்.4

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களமும் ஏழாலை ஸ்ரீ வசதநாகபூஷணிஅம்மன் ஆலய மும் இணைந்து நடத்தும் அருணகிரிநாதர் சுவாமி களின் குருபூசை நாளை சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய வசந்த மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்ப்பணா சுதர் சன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி முது நிலை விரிவுரையாளர் முரு கேசு கௌரிகாந்தன் கலந்து கொள்வார். (ந)

# சிறுவர்களுக்காக 'மகாபாரதம்'

யாழ்ப்பாணம், ஒக்.4

கோண்டாவில் பொது நூலகத் தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத்தை முன்னிட்டு சிறுவர் களுக்கான மகாபாரதத் தொடர் சிறப்புப் படக்காட்சி இன்று பிற்பகல் 3 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ஒ-4)

# யாழ்ப்பாணத்தில் இந்திய ஸ்டேட் வங்கிக் கிளை

யாழ்ப்பாணம், ஒக்.4

இந்திய ஸ்டேட் வங்கியின் கிளையொன்று அண்மையில் பருத்தித்துறை வீதி, யாழ்ப் பாணத்தில் திறந்து வைக்கப்பட் டுள்ளதாக அந்தக் கிளையின் முகாமையாளர் அறிவித்துள் ளார்.

வடபகுதியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதியை வழங்குவதே இந்தக் கிளை திறந்து வைக்கப்பட்ட தன் பிரதான நோக்கமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய அரசுடமையான இந்த வங்கி இந்தியாவில் 15 ஆயிரம் கிளைகளை யும் வேறு 35 நாடுகளில் 189 கிளை களையும் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (க)

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஒக்.4

தென்மராட்சி கல்வி வல யத்தில் வெற்றிடமாகவுள்ள தமிழ் உதவிக் கல்விப் பணிப் பாளர் பதவிக்கு தகைமை யுள்ளவர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையில் கடமையாற் றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது 2வகுப்பு 2:I யைச் சேர்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பில் குறித்த பாடத்துக்குத் தேவையென பிரசுரிக்கப்பட்ட கல்வித் தகைமை கொண்ட வராக இருந்தல் வேண்டும்.

வி ண் ண ப் ப டி வ ங் க ளை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

# 'தெய்வ வாசகம்' சொற்பொழிவு

வடமராட்சி, ஒக்.4

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 'தெய்வவாசகம்' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். சொற்பொழிவை சைவத் தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்துவார். (ஒ-8)

# வினாடி வினாப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.4

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவ சமய வினாடி வினாப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத் தில் காலை 8 மணிக்கு நடைபெறும் என அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலர் செ.கந்தசத்தியதாசன் தெரிவித்துள்ளார். (ந)


# அரசாங்க அறிவித்தல்

யாழ் மாவட்டச் செயலகம்

வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை

| No | Vehicle | Model & Make | Engine No | Chassis No |
|---|---|---|---|---|
| 01 | 251- 0899 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460780 | LN166 - 0003745 |
| 02 | 251-0895 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460197 | LN166 - 0003739 |
| 03 | 251-0900 | LN166R-PRMDS / Toyota Double | 3L - 4460654 | LN166 - 0003752 |
| 04 | 64 - 3093 | TOYOTA / Land Cruiser | IHZ – 0073788 | HZJ75 – 0013079 |

யாழ் மாவட்டச் செயலக மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்க வாகனங்கள் நாவற்குழியிலுள்ள அரசாங்க களஞ்சியத்தில் 22-10-2013ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன. மேற்படி வாகனங்களை அலுவலக நாள்களில், அலுவலக நேரத்தில் நாவற்குழியிலுள்ள அரசாங்க களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

மேலும் தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் அன்றைய தினமே உரிய பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், 30-10-2013ஆம் திகதிக்கு முன்பாக வாகனத்தினையும், அது தொடர்பான ஆவணங்களையும் நாவற்குழி அரசாங்க களஞ்சியத்திலிருந்து எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/12562)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கின்ற பாடசாலைகளுக்கு வளங்கள் இல்லை

கொழும்பு, ஒக்.4

250 வரையிலான பாடசாலைகளுக்கு புதிய தொழில்நுட்பக் கற்கைநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் அதுதொடர்பான அடிப்படை வசதிகள் மற்றும் மனித வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு இலங்கை ஆசிரியர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இவ்வாறு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்காததால் அந்தப் பாடசாலைகள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளன என்று ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கற்கை நெறியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், உயர்தரத்தில் அந்தக் கற்கை நெறியைத் தெரிவு செய்துள்ள மாணவர்கள் பெரும் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று ஆசிரியர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஹிமாயத் துல் இஸ்லாம் சமூக நலன்புரி அமைப்பு செவ்வாய்க்கிழமை ஊர்வலம் ஒன்றை நடத்தியபோது, ஊர்வலமாக செல்லும் சிறார்கள்.

## பட்ஜட்டில் நிவாரணம் கோரி தொழிற்சங்கப் போராட்டம்

கொழும்பு, ஒக்.4

இம்முறை வரவு- செலவுத் திட்ட வரைவில் உழைக்கும் வர்க்கத்தினர் கோரி வரும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தொழிற் சங்கப் போராட்டம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரச மற்றும் அரசின் பங்களிப்புடன் இயங்கும் அரசு சார் நிறுவனங்களின் மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களின் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இந்தப் போராட்டம் சுகாதாரம், கல்வி, ரயில் சேவை, தனியார் துறை பஸ், தபால் உள்ளடங்கலாக முன்னிலை வகிக்கும் அனைத்துத் தொழிற்சங்கங்களினதும் பங்களிப்புடன் நடத்தப்படும்.

நடைபெறவிருக்கும் மாநாடுகளைக் கவனத்தில் கொள்ளாது இந்தப் போராட்டம் நடத்தப்படும். இந்தப் போராட்டம் நடைபெறக் கூடாது என்றால் அரசு தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் அரச துறை ஊழியர்களின் சம்பளம் குறைந்த பட்சமாக 10,000 ரூபா அதிகரிப்பு, தனியார் துறைக்கு குறைந்த பட்சமாக 5,000 ரூபா அதிகரிப்பு, வரவு- செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கல், மிகச் சரியான வாழ்க்கைச் சுட்டெண் கொடுப்பனவு வழங்கல் உட்பட 15 கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

## கனிம எண்ணெயை அகழ பல நிறுவனங்கள் போட்டி

கொழும்பு, ஒக். 4

இலங்கை, மன்னார்க் கடற்படுகையில் கனிம எண்ணெயை அகழ்ந்தெடுக்க உலகின் பிரபல நிறுவனங்கள் போட்டி போட்டு வருகின்றன.

இவ்வாறு கனிம எண்ணெய் அகழ்வுகளை மேற்கொள்ள விலைக் கூறுகளை முன் வைக்கவுள்ள நிறுவனங்களிடையே பல நிறுவனங்கள் போட்டியிடுகின்றன. இந்தப் புதிய கேள்வி கோரலின் கீழ் எண்ணெய் அகழ்வுகளுக்கான 13 நிலத் துண்டங்கள் அரசினால் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே கெயான் இந்திய நிறுவனம் மன்னார்க் கடலில் கனிம எண்ணெய் ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு, மேற்படி நிறுவனத்தினால் சில இயற்கை எரிவாயு வளங்கள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# டெங்குத் தாக்கம் குறைவடைந்தது

■ சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஒக்.4

நாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு நோய்த் தாக்கத்தை அவதானிக்கும் போது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் ஒக்ரோபர் மாத ஆரம்பம் வரை அந்த நோய் வெகுவாகக் குறைந்து போயுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி வரை டெங்கு நோயாளர்களின் தொகை 34 ஆயிரத்தையும் கடந்து சென்றிருந்தது.

ஆனால் இந்த ஆண்டின் இற்றை வரையான காலப் பகுதியில் 24,242 டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளனர் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

டெங்கு நோய் உயிரிழப்புகளும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டில் அந்த எண்ணிக்கை 87 ஆகும். இந்த ஆண்டில் இதுவரை 64 உயிரிழப்புக்களே பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் 12 மாவட்டங்களின் 55 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு நோய் ஆபத்து வலயங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த ஆண்டில் அத்தகைய வலயங்கள் 27 வரை குறைவடைந்துள்ளன.

வருடாந்த டெங்கு நோயாளர்கள் தொகையில் நூற்றுக்கு 47 வீதம் மேல் மாகாணத் திலேயே பதிவாகி வருகின்றது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)



## அரச ஊழியர் சம்பளத்தை முன்கூட்டி வழங்குங்கள்

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அரச ஊழியர்களுக்கான இந்த மாத சம்பளத்தை முன் கூட்டியே வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரச ஊழியர்களின் இந்த மாதச் சம்பளம் எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. ஆனால் முஸ்லிம்களின் புனித ஹஜ்ஜுப் பெருநாள் எதிர்வரும் 16 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதால் இந்தப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம் அரச ஊழியர்களின் நன்மை கருதி சகல அரச ஊழியர்களின் சம் பளத்தையும் எதிர்வரும் 11 ஆம் திகதியளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முஸ்லிம் அரச ஊழியர்கள், ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பாக் கொண்டாடுவதற்கும் புத்தாடைகள் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் முன்கூட்டியே சம்பளம் வழங்கப்படுவது உதவியாக இருக்கும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Clerk வேலைக்கு

English Typing தெரிந்தவர்கள்
தேவை. 0772259030

வாடகைக்கு

திருநெல்வேலி MPCS அருகாமையில் வீட்டுடன் கடை வாடகைக்குண்டு. (அலுவலகங்களிற்கு உகந்தது) 0773606835

காணி விற்பனைக்கு

யாழ். மாம்பழம் சந்தியில் கண்டி வீதிக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 075 7875, Email- numoorthy@gmail.com
0041792047405
(32282) (10)

பிரத்தியேக வகுப்புகள்

தரம் 6 முதல் 11 வரையான வரலாறு, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்
கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு:- 075 2480158

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் றோட், முத்துத்தம்பி ஒழுங்கையில் மூன்று பக்க சுற்று மதிலுடன், நன்னீர் கிணற்றுடன் அமைந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777 917611

போட்டிப் பரீட்சைகள் மற்றும் வினைத்திறன் காண் பரீட்சைகள் என்பனவற்றுக்கான கருத்தரங்குகள்

★ SLEAS போட்டிப் பரீட்சைக்கானது சனி, ஞாயிறு 9.30 மணி-3.00மணி
★ முழுநேரக் கல்விடிப்ளோமா தெரிவுப் பரீட்சைக்கானது சனி, ஞாயிறு-பி.ப. 1.00 மணி
★ அதிபர்களுக்கான வினைத்திறன் பரீட்சைக்கானது. 9.00-3.00, வெள்ளி, திங், செவ், புதன் 3.30-...
... பிரிவு
T.P:- 075 4164564

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த

விநாயகதாசன் லிபர்ணன்

167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நீர்சன் அத்தான், சியா மச்சாள்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2013
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்



இடமிருந்து வலம்:
திருமதி.ப.செல்வநாயகம் (அதிபர்), செல்வன் பா. அபிசாந்- 186 (வலைய நிலை -3, மாவட்ட நிலை-22), செல்வன். ம.திருமாறன் -164 (மாவட்ட நிலை- 537), செல்வி.வ.அபிநதா- 174 (மாவட்ட நிலை- 196), திருமதி. கே.கோகிலா (வகுப்பாசிரியர்)

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விவரம்:
செல்வன். செ.யதுர்சன் (149), செல்வன்.ஜெ.நர்மதன் (141), செல்வன்.ப.தனுயன் (129), செல்வன்.ஈ.வரோ தயன் (124), செல்வன்.யோ.இந்துயன் (119), செல்வி.செ.நிருஜா (104)

இந்தப் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டிய பாடசாலை அதிபருக்கும் மாணவர்கள் இப் பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு அயராது உழைத்த ஆசிரியர் திருமதி.கோ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் ஒத்து ழைப்பு வழங்கிய ஏனைய ஆசிரியர்களிற்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி12567-23)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், கைதடி வடக்கு.

## சிறைச்சாலைக்கு தண்ணீர் விநியோகம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.4

நீர்வழங்கல் சபைக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த இரண்டு கோடி ரூபா வரையிலான தண்ணீர் விநியோகக் கட்டணத்தைச் செலுத்தாததால் சிறைச்சாலைகள் தலைமையகத்துக்கான தண்ணீர் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நீர் விநியோகக் கட்டணச் சிட்டைகளுக்கான பணத்தொகையை சபைக்குச் செலுத்தப்படாமையே இதற்குக் காரணமாகியுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கான மாதாந்த தண்ணீர் கட் டணம் 30 லட்சங்களுக்கும் மேற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் வீதியுலா வரும்போது வடக்கில் எப்படி அமைதி திரும்பும்?

## ராஜபக்ஷவின் பகல் கனவு என்கிறது 'தினமணி'

"இராணுவச் சிப்பாய்கள் வடக்கு மாகாண வீதிகளில் உலவும் போது அங்கு எப்படி அமைதியும், நிம்மதியும் திரும்பும்? எனவே, இராணுவத்தாலும் அடக்கு முறையாலும் நிரந்தர அமைதியும், தீர்வும் ஏற்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நினைத்தால் அது பகல் கனவாகத்தான் இருக்கும்" என்று தமிழக நாளேடான தினமணி கடுமை யாகச் சாடியுள்ளது.

"ராஜபக்ஷவிடம் அதிகாரத் தோரணையும், எதேச்சதிகாரப் போக்கும் தான் காணப்படுகிறதே தவிர, ஜன நாயகப் பண்பும், ஓர் ஜனாதிபதிக்கே உரித்தான பெருந்தன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை" என்றும் தின மணி சாடியுள்ளது.

அதன் ஆசியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இலங்கையில் தமிழர்கள் அமைதியாகவும், சிங்களவர்களுடன் ஒற்றுமை யாகவும் வாழ்ந்துவிடக் கூடாது என்பதிலும், அமைதி தொடரக் கூடாது என்பதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானமாக இருக்கிறார் என்று தோன்றுகிறது.

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் சமீபத்தில் நடந்த தேர்தலில், தமிழ்தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறது. விக்னேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண அரசு அமைய இருக்கிறது.

இந்தவேளையில், அந்த அரசுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதும், அதிக உரிமைகளுடன் விக்னேஸ்வரன் தலைமையிலான அரசு இலங்கையின் இறையாண்மையை ஏற்றுக் கொண்டு செயல்பட உதவுவதும்தானே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எல்லோரும் எதிர்பார்க்கும் பண்பு. ஒரு தேசத்தின் ஜனாதிபதி, தமிழர்களும் எனது நாட்டவர்களே என்று உலக அரங்கில் கிளிப்பிள்ளை போலத் திரும்பத் திரும்பச் சொல்லும் ராஜபக்ஷ, நேர் விரோதமாக நடந்து கொள்வது தான் அதிர்ச்சி அளிக்கிறது.

வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பது, இலங்கை அரசு நிரந்தர அமைதி திரும்புவதில் அக்கறை காட்டவில்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது.

"இராணுவத்தை இங்கேயிருந்து வெளியேற்றி நான் எங்கே கொண்டு போய் முகாமிடச் சொல்வது?" என்கிற ஜனாதிபதி ராஜபக்ஷவின் கேள்வியில் அதிகாரத் தோரணையும், எதேச்சதி காரப்போக்கும்தான் காணப்படுகிறதே தவிர, ஜனநாயகப் பண்பும், ஓர் ஜனாதிபதிக்கே உரித்தான பெருந்தன்மை யும் இருப்பதாகத் தெரியவில்லை.

2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது முதல், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக எண்ணிக்கையில் இராணுவம் குவிக்கப்பட்டது.

சமீபத்தில் நடந்த வடக்கு மாகாணத் தேர்தலின்போது கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து இராணுவத் தினர் தாக்குதல் நடத்தியிருப்பது பரபரப்புச் செய்தியானது. மறைமுகமான அச்சுறுத்தலிலும், மக்களை அச்ச உணர்வுடன் வைத்திருப்பதிலும் இராணுவத்தின் பங்கு கணிசமாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் விளைவாகத்தான், ஜனாதிபதி ராஜபக்ஷவின் கட்சி ஒட்டு மொத் தமாக நிராகரிக்கப்பட்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் பெருவாரியான வெற்றியை அளித்திருக்கிறார்கள். இதுகூடவா ராஜபக்ஷவுக்குப் புரியவில்லை.

இராணுவத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து அகற்றுவது அடுத்த கட்டமாக இருந்தாலும், முதல் கட்டமாக சிப்பாய்களை இராணுவ முகாம்களில் ஒதுங்கச் செய்து, மக்கள் பயமில்லாமல் சராசரி வாழ்க்கை வாழ வழிவகுக்காமல் போனால், பின்னர் தேர்தல் நடந்து வடக்கு மாகாண அரசு அமைந்தால் என்ன? அமையாமல் போனால் தான் என்ன?

இராணுவத்தைக்கூட முகாம்களுக்குத் திருப்பி அனுப்பத் தயாராக இல்லாத ராஜபக்ஷ அரசு, உறுதி அளித்தபடி அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளும் என்று எப்படி நம்புவது? அதிகாரமே இல்லாமல் பெயருக்குப் பதவி என்றால் விக்னேஸ்வரனின் அமைச்சரவையால் என்ன பயன் இருந்துவிடப் போகிறது? தேர்தல் நடந்ததற்கே அர்த்தமில்லாமல் போய்விடுமே..

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி ராஜபக்ஷ நினைத்திருந்தால் ஒருநாள் தங்கியிருந்து இந்தியப் பிரதமரை சந்தித் திருக்க முடியும். பிரதமர் மன்மோகன் சிங் நியூயோர்க் சென்றடையும் தினத் தில், கொழும்பு திரும்பும் வகையில் தனது பயண ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, தான் தங்கியிருக்கும் நாள்களில் பிரதமரைச் சந்திக்க நேரம் கேட்டிருக்கிறார்.

அதாவது, எனது வசதிக்கு நீங்கள் வந்து சந்தியுங்கள் என்று கூறாமல் கூறியிருக்கிறார் என்றால், அவர் எந்த அளவுக்கு இந்தியப் பிரதமரை மதிக்கிறார் என்பது தெரிகிறது. ஏறத்தாழ 15 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் வடக்கு மாகாண வீதிகளில் உலவும் போது எப்படி அமைதியும், நிம்மதியும் திரும்பும்? - என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தலைவர்

கீழே மூன்று மாடிகளையும் சுரங்க வழிகளையும் கொண்டதாக மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக் கப்பட்டிருந்தது. இறுதிப் போரின் போது இதனைக் கைப்பற்றிய படையினர் பின்னர் பொதுமக்கள் இந்த வீட்டைப் பார்வையிட அனுமதித்திருந்தனர். இதனால் பெரு மளவிலான தமிழ், சிங்கள சுற்றுலாபயணிகளும் வெளிநாட்டவர்களும் இந்த வீட்டைப் பார்வையிட்டதோடு புலிகளின் தொழில் நுட்பங்களைப் பார்த்து வியந்து வந்தனர்.

கடந்த ஒரு வாரமாக சுற்றுலாப் பயணிகள் இந்த வீட்டைப் பார்வையிட படையினர் அனுமதி மறுத்திருந்தனர். வீட்டை பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகள் திருப்பி அனுப்பப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை வேணாவில் பகுதிக்கு வந்த படையினர் அந்தப் பகுதியில் வெடிகுண்டு ஒன்றை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாகவும் அதனைச் செயலிழக்கச் செய்ய இருப்பதால் பொதுமக்களை பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுமாறும் உத்தரவிட்டனர். இதனால் மக்கள் பதறி அடித்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தனர்.

மாலை 6.40 மணியளவில் பிரபாகரனின் வீடு இருந்த இடத்தில் பெரும் வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. அதனைத் தொடர்ந்து புகைமூட்டம் வானை நோக்கி எழுந்தது.

"சிலநாள்களுக்குமுன்னர் தலைவரின் வீட்டை இடிக்கப் போகிறோம்" என்று படையினர் பொது மக்களுக்கு கூறி வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று இதனை திட்டமிட்டபடி வெடிகுண்டை மீட்டதாக மக்களை திசை திருப்பிவிட்டு பிரபாகரனின் வீட்டை படையினர் அதிசக்திவாய்ந்த வெடி குண்டு மூலம் தகர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சத்தத்தால் புதுக்குடியிருப்புப் பகுதியே அதிர்ந்ததாகவும், நேற்று இரவுவரை வேணாவில் பகுதி மக்கள் சொந்த இடங்களுக்குச் செல்லாமல் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தங்கியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட நிறுவனத்தினர், அங்கு எந்த விதமான வெடி பொருளும் இருக்கவில்லை. மீட்டவற்றை அங்கிருந்து எப்போதோ அப்புறப்படுத்திவிட்டோம் என்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

விசுவமடுப் பகுதி யில் இருந்த புலிகளின் பதுங்கு குழி ஒன்றும் நேற்று அழிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இது குறித்து உறுதிப் படுத்த முடியவில்லை.

இது பற்றி தனக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றார் இராணுவப் பேச்சாளர்.

(ங-400-555)

## பொன்னாலை

பெட்டகத்தை உடைத்து அதற்குள் இருந்த 150 பவுண் வரையான நகைகளைத் திருடியுள்ளனர்.

குறித்த பெட்டகத்துக்கு எட்டுப் பூட்டுக்கள் போடப்பட்டிருந்தன. அவற்றை உடைத்தே நகைகள் சூறையாடப்பட்டுள்ளன. திருவிழா காலங்களில் சுவாமிக்கு சாத்துகின்ற அனைத்து நகைகளும் ஒன்றுவிடாமல் அபகரிக்கப்பட்டுள்ளன. ஆலயத்திலிருந்த உண்டியல்களும் உடைக்கப்பட்டு அவற்றுக்குள் இருந்த பணமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அசைவ கொத்து றொட்டிப் பார்சல் ஒன்றும் அரைகுறை பீடிகளும் ஆலயத்தின் உள் வீதியில் காணப்பட்டன. இதனால் திருடர்கள் நீண்ட நேரம் ஆலயத்துக்குள் தங்கி நின்றே திருட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் உள் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த ஏணி, மணிக் கோபுரத்துக்குள் வைக்கப்பட்டிருந்தமையால் திருடர்கள் அந்த வழியால் தப்பித்துச் சென்றிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

150 பவுண் தங்க நகைகளும் சுவாமிக்குச் சாத்தியிருந்த வெள்ளி அங்கிகளும் திருடப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி பல கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டின் பின்னர் இந்தக் கோயிலில் இப்போது திருட்டு இடம்பெற்றுள்ளது. 1987 ஆம் ஆண்டும் லட்சக் கணக்கான பெறுமதி கொண்ட பொருள்களும் நகைகளும் திருடப்பட்டிருந்தன.

இதேவேளை மானிப்பாய் மருதடி ஆலயத்தின் முன் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. மருதடி ஆலயத்திலிருந்து 75 மீற்றர் தூரத்திலேயே மானிப்பாய் பொலிஸ்நிலையம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரசித்தி பெற்ற ஆலயங்களின் திருட்டுக்கள் பக்தர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (த-5-14-86)

## ரணிலுக்கு

ளது.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டுமாயின், ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து கட்சியைக் காக்க நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் அணிதிரண்டு பேரணியில் பங்கேற்க வேண்டும் என்று ஐ.தே.கவின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்ரி குணரத்ன அழைப்புவிடுத்தார்.

இந்த எதிர்ப்புப் பேரணியில் பங் கேற்குமாறு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு வலியுறுத்தி மாத்தறை தெவி நுவரவில்நாளை காலை 9 மணிக்கு எதிர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி 7 நாட்களாக வரும் இந்தப் பேர ணியானது 6ஆம் திகதி வெலிகமவி லும், 7ஆம் திகதி காலியிலும், 8ஆம் திகதி ஹிக்கடுவையிலும், 9ஆம் திகதி கொஸ்கொடவிலும், 10ஆம் திகதி கடு குறுந்தவிலும் முகாமிட்டு மொரட்டுவை வழியாக 11ஆம் திகதி மாலை கொழும்பை வந்தடையவுள்ளது.

கட்சித் தலைவரை வெளியேற்றுமாறு நடத்தப்படும் இந்தப் பேரணியில் அதற்கு ஆதரவாகவிசேட [illegible] வேட்டையும் [illegible] இதற்காக சுமார் ஒரு இலட்சம் கையெழுத்துகளைப் பெறத் திட்டமிட்டுள்ளது எனவும் மைத்ரி குணரத்ன தெரிவித்தார்.

## பொலிஸாருக்கு

தப்பிச் சென்றுள்ளனர்.

அவரது இடதுபக்க முழங்கையில் வெட்டு வீழ்ந்துள்ளது. இதில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு மானிப்பாய் பொலிஸார் உடனடியாகச் சென்று விசாரணைகளைமேற்கொண்ட போதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-5-17-86-100)

## இத்தாலி படகு

கின்றன.

இந்தப் படகில் சுமார் 500பேர் வரையில் இருந்துள்ளனர் என நம்பப்படுகின்றது. படகு விபத்துக்குள்ளான தையடுத்து, 140 இற்கும் அதிகமானோர் காப்பாற்றப்பட்டுள்ளனர். இருப்பினும், நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் சிறுபிள்ளை ஒருவரும், கர்ப்பிணித் தாய் ஒருவரும் அடங்குகின்றனர் என்றும், படகு விபத்திற்குள்ளானபோது படகிலிருந்த பயணிகள் கடலினுள் பாய்ந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மூழ்குவதற்கு முன்னராக படகு தீப்பிடித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி

இன்று வெள்ளிக்கிழமை காலை கலந்துரையாடல் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே நியூயோர்க்கில் இருந்து நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஜனாதிபதியின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, நேற்றிரவு இந்தியாவுக்கு புறப்பட்டுள்ளமையாலும், ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற விருப்பதாலும் பங்காளிக் கட்சிகளுடனான இன்றைய கலந்துரையாடல் ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-5)

## முஸ்லிம்கள்

அவற்றை இலங்கையர் என்ற ரீதியில் நாம் எதிர்க்க வேண்டும். கியூபா போன்ற நாடுகளே அமெரிக்காவை எதிர்க்கும் போது ஏன் எம்மால் அமெரிக்காவை எதிர்த்துச் செயற்பட முடியாது? நிச்சயமாக முடியும். இதற்கு ஒரே வழி அனைத்து எதிர்க்கட்சிகளும் அரசுடன் ஒன்றித்து, கலந்தாலோசித்து செயற்பட வேண்டும். இதைச் செயற்படுத்த இவர்கள் தவறுவார்களேயானால் எதிர்காலத்தில் சூடானின் நிலைமைக்கு இலங்கை தள்ளப்படும் அபாயம் உள்ளது.

அத்துடன், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுவது நாட்டின் பிரிவினைவாதத்திற்கு வழிவகுக்கக் கூடியதாகவுள்ளது. இவர்கள் வடக்கையும், கிழக்கையும் இணைத்து தனி ஈழம் ஒன்றை உருவாக்கவே இவ்வளவு பாடுபடுகின்றனர்.

இந்தச் செயற்பாட்டிற்கு முஸ்லிம் காங்கிரஸும் பூரண சம்மதம் தெரிவித்திருப்பதானது, எதிர்காலத்தில் முஸ்லிம்களின் கைகளுக்கும் ஆயுதம் வரக் கூடிய அபாய நிலைக்கு வழி வகுத்துள்ளது. அதனை அரசு உடன் கவனத்தில் எடுக்க வேண்டும். இல்லையேல் நாட்டின் எதிர்காலமே கேள்விக் குறியாகி விடும்" என்றார்.

இதே சந்திப்பில் கலந்துகொண்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர தெரிவித்த கருத்துகள் வருமாறு:

"நாம் போரால் பிரபாகரனை வென்று விட்டதால் பயங்கரவாதம் ஒழிந்துவிட்டது என நினைத்து விட்டோம். ஆனால், அரசியல் பயங்கரவாதம் என்ற ஒன்று இருப்பதைத் தற்போது தான் உணரக்கூடியவாறு இருக்கிறது. தேர்தல் நடைபெறுகின்றபோது ஒவ்வொரு கட்சிகளும் தங்களது விஞ்ஞாபனத்தை ஓரிரு மாதங்களுக்கு முன்பே வெளியிடுவது தான் வழமையான விடயமாகும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் நடைபெற இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இந்தச் சர்ச்சைக்குரிய விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. இதன் மூலமே கூட்டமைப்பின் திருகுதாளச் செயல்கள் அம்பலமாகியுள் ளன.

தேர்தல் விதிமுறைகளை மீறும் இதுபோன்ற செயல்களினால் தான் நாடு பிளவுபடுகிறது என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படுவது சிறந்ததாகும்" என்றார்.

## கூட்டமைப்பை

தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துச் செயற்பட்டதால் சில சிங்களக் கட்சிகள் தன்னை அச்சுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பெயின்ரிங் தொழில் செய்யும் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டதால் தமிழ் நாட்டுக்குத் தப்பி வந்ததாக அவர் விசாரணையில் தெரிவித்துள்ளார். 1984 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு அகதியாகச் சென்ற இவர் திருச்சி முகாமில் வசித்து வந்துள்ளார். 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். இந்த நிலையில் செல்வராஜா கடவுச்சீட்டுச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (த-5)

## கூட்டமைப்பில்

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான உறவினை வலுப்படுத்தும் என்று தி ரைம்ஸ் ஒவ் இந்தியா குறிப்பிட்டுள்ளது. (த)

## 24,000 பேரால்

வாக்காளர் பெயர்ப் பட்டிய லில் இருந்து நீக்கப்பட்டவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 50 ஆயிரத்து 500பேர் புதிதாக தம்மை வாக்காளரர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக் கொள்ள விண்ணப்பித்துள்ளனர். அதேவேளை கடந்த 2012ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இருந்து 26 ஆயிரம் பேர் நீக்கப்படவுள்ளனர். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் இணைந்த யாழ். தேர்தல் மாவட்டத்தில் புதிய வாக்காளர் பெயர் பட்டியல் 24ஆயிரம் பேரால் அதிகரிக்கும் என்று எதிர்பார்கப்படுகின்றது. இதன் பிரகாரம் புதிய பட்டியல் 5 லட்சத்து 19 ஆயிரத்து 292 ஆக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொற்றாவத்தை பூமகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.4
சுன்னாகம் சூராவத்தை நியூ வாரியஸ் விளையாட்டுக் கழகம் அமரர் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## அசத்தியது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், ஒக்.4
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில்




நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## திருமலையில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் கிண்ணத்துக்காக திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:-
ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஜமாலியா விளையாட்டுக் கழகம்.
பற்றிமா விளையாட்டுக்கழகம் எதிர் ஈஸ்ரேர்ன் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம். (த-23)

# 6 இலக்குகளால் வென்றது சென்றல்

யாழ்ப்பாணம், ஒக்.4
நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெற் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 20/20 கிரிக்கெற் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 6 இலக்குகளால் வெற்றி



பெற்றுள்ளது.
கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக் கழக அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றனர்.
ஜான்சன் 23 ஓட்டங்களையும், தயாளன் 30 ஓட்டங்களையும், ரகுபதி 26 ஓட்டங்களையும், மகிழ்ராஜ் 29 ஓட்டங்களையும்,பிரசாந் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுவாதீஸ், திருக்குமரன்,றஜீவ்குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், விஷ்ணு,அன்றூ ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்
182 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி 16.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.
கலிஸ்ரன் 69 ஓட்டங்களையும்,பாலேந்திரா 42 ஓட்டங்களையும்,அன்றூ 32 ஓட்டங்களையும்,றஜீவ்குமார் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசாந் 2 இலக்கினையும், தயாளன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (த-23)

# தேசிய தடகளப் போட்டியில் வடக்குக்கு மேலும் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.4
கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் வடக்கு மாகாணத்துக்கு மேலும் பல பதக்கங்கள் கிடைத்துள்ளன.
நேற்று நடைபெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அனித்தா 3 மீற்றர் உயரத்தை பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார்.

> 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி பி.டனுசிகா 2.60 மீற்றர் உயரத்தைத் தாண்டி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி பி.டனுசிகா 2.60 மீற்றர் உயரத்தைத் தாண்டி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றார்.
19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி கே.டிலக்ஷனா 2.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார்.
நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி சர்மிளா 29.60 மீற்றர் தூரத்தை எறிந்து 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார்.
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வீரர் எஸ்.விமலேந்திரா 21 வயதுப் பிரிவினருக்கான குண்டு போடுதல் நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (த-23-86)

# அரையிறுதி ஆட்டம் இன்று மின்னொளியில்

### பருத்தித்துறையில் நடக்கிறது

யாழ்ப்பாணம், ஒக்.4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்.கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.
இதில் இளவாலை யங்.ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# இன்றைய ஆட்டம்


யாழ்ப்பாணம், ஒக்.4
சுன்னாகம் சூறாவத்தை நியூ வாரியஸ் விளையாட்டுக் கழகம் அமரர் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இளவாலை யங்.ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும் (த-23)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மாணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

# பார்த்தீபனின் ஆட்டத்தில் அடங்கியது பொற்பதி அணி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக்கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபனின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறியது பொற்பதி அணி.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் யாழ்ப்பாணம் பொற்பதி அணி மோதின. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபனின் ஆட்டத்தில் வேகமும் நுட்பமும் தென்பட்டது. இதனால் ஞானமுருகன் அணி வீரர்களான பார்த்தீபன் 4 ஆவது, 7ஆவது நிமிடங்களில் இரு கோலையும், 15 ஆவது நிமிடத்தில் லஸ்ரின் ஒரு கோலையும் போட்டு பொற்பதி அணிக்கு அதிர்ச்சி அளித்தனர். இருந்த போதும் தமது ஆட்டத்தை மாற்றிய பொற்பதி அணி வீரர் ஜயரூபன் 17 ஆவது நிமிடத்தில் தமது அணிக்காக ஒரு கோலைப் போட்டார். இதன் பின்னர் ஆட்டத்தல் மாற்றம் ஏற்படும் என்ற ரசிகர்களுக்கு ஏமாற்றமே அளித்தது. 23 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் மேலும் ஒரு கோல் போட இடைவேளைக்கு முன்னர் 4:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபன் 31 ஆவது,34 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோலைப் போட்டு தனது அணிக்கான கோலின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு ஹற்றிக் கோல் வீரர் என்ற பெருமையையும் பெற்றார். அவ்வணி வீரர் அத்தோடு நின்று விடாது 39 ஆவது நிமி டத்தில் சயந்தன் ஒரு கோலும், 48ஆவது, 49 ஆவது நிமிடங்களில் பார்த்தீபன் மேலும் இரு கோல்களையும் போட செயவிழந்தது பொற்பதி அணி.
இதனால் ஆட்ட நேர முடிவில் 9:1 என்ற கோல்கணக்கில் பொற்பதி அணியை தோற்கடித்து ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது.
இதில் 7 கோலை ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபன் போட்டது குறிப்பிடத்தக்கது. (த-422)




91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்ட 45 வயதுக்க மேற்பட்டோருக்கான சைக்கள் ஓட்டப் போட்டியில் ஐ. சோமசுந்தரம் முதலாம் இடத்தையும்,தி. இந்திரசித்து இரண்டாம் இடத்தையும்,வை.கைலைநாதன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.
[illegible] யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி. கே. [illegible] கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆர். இராஜாராம்,சபை செயலாளர் வேதவல்லி செல்வரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர். (த-17)

# கோணேஸ்வரா இந்துவின் இரு வீரர்கள் வெற்றியீட்டினர்



கல்வி அமைச்சின் சுகாதார உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பிரிவு நடத்தும் அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டியில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அமிர்தகுலசிங்கம் கோகுலன் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான குண்டு போடுதல் நிகழ்வில் மூன்றாம் இடத்தினையும், விஜயநாதன் ஆனந்தபிரகாஷ் 15 வயதுக் குட்பட்டவர்களுக்கான நீளம் பாய்தல் போட்யில் நான்காம் இடத்தினையும் பெற்றுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னையைத் தோற்கடித்து அரையிறுதியில் ட்ரினிடாட்

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் நேற்று முன் தினம் நடந்த இரண்டாவது போட்டியில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி வெற்றி பெற்றது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்றது.
டில்லிபெரோஷ்ஷாகோட்லா மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
7 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்து தடுமாறியிருந்தது. அவ்வணியின் இறுதி 5 விக்கெட்டுக்களும் 16 ஓட்டங்களுக்கே இழக்கப்பட்டிருந்தன.
துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக சுரேஷ் ரெய்னா 29 பந்துகளில் 38 ஓட்டங்களையும், முரளி விஜய் 24 பந்துகளில் 27 ஓட்டங்களையும், மகேந்திரசிங் டோணி 25 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக றயாட் எம்றிட் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ரவி ராம் போல், லெண்டில் சிமன்ஸ் இருவரும் தலா 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.
119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 15.1 ஓவர்களில் 2 விக் கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
முதலாவது விக்கெட் டுக்காக 10 ஓவர்களில் 79 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னரும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.
துடுப்பாட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக லெண்டில் சிமன்ஸ் 41 பந்துகளில் 63 ஓட்டங்களையும், எவின் லூயிஸ் 35 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக ரவிச்சந்திரன் அஷ்வின், சுரேஷ் ரெய்னா இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.
இப்போட்டியின் நாயகனாக லெண்டில் சிமன்ஸ் தெரிவானார்.
இப்போட்டியின் முடிவையடுத்து, இக்குழுவிலிருந்து முதல்நிலை அணியாக ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி அரையிறுதிப் போட்டிகளுக்குத் தெரிவானதோடு, இரண்டாவது இடத்தைப் பெற்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அரையிறுதிக்குத் தெரிவானது.
அரையிறுதிப் போட்டிகள் இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளன. (கு)

# பேர்த் அணியை வீழ்த்திய மும்பை இந்தியன்ஸ்

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் நேற்று முன் தினம் நடந்த முதலாவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது, பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்றது.
டில்லி பெரோஷ் ஷா கோட்லா மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அவ்வணி அதற்கு 9.2 ஓவர்களை எடுத்துக்கொண்டிருந்தது. 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம் ஓவர்களில் அதிரடி ஆட்டம் வெளிப்படுத்தப்பட்டு, அவ்வணி அந்த 4 ஓவர்களிலும் 52 ஓட்டங்களைக் குவித்த போதிலும், அதன் பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.
துடுப்பாட்டத்தில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக சாம் வைட்மான் 32 பந்துகளில் 51 ஓட்டங்களையும், அஸ்ரன் ஏகர் 40 பந்துகளில் 35 ஓட்டங்களையும், ஹில்ற்றன் கார்ட்றைட் 20 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக நேதன் கோர்ட்டர் நீல் 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பிரக்ஜான் ஓஜா 2 விக்கெட்டுக்களையும், றிஷி தவான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.
150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 13.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
சச்சின் டெண்டுல்கர் ஓட்டமேதும் பெறாது ஆட்டமிழக்க, அதன் பின்னர் கிளென் மக்ஸ்வெல்லும் ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் டுவைன் ஸ்மித், றோகித் சர்மாவின் சிறப்பான ஆட்டம் அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.
துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக றோகித் சர்மா 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், டுவைன் ஸ்மித் 25 பந்துகளில் 48 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 18 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக பிரட் ஹொக், ஜேஸன் பஹ்றெகன்டோர்ப் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.
இந்தப் போட்டியின் நாயகனாக றோகித் சர்மா தெரிவானார்.
இந்த வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றது.
இக்குழுவிலிருந்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏற்கனவே அரையிறுதிக்குத் தெரிவாகியிருந்தது. (கு)




# ஏமாற்றிய சகீர்கான்

மேற்கிந்திய தீவுகள் 'ஏ' அணிக்கு எதிரான அதிகாரப்பூர்வமற்ற இரண்டாவது டெஸ்டில், இந்தியா 'ஏ' அணியின் சகீர்கான் ஒரே ஒரு விக்கெட் மட்டும் கைப்பற்றி ஏமாற்றம் அளித்துள்ளார். இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் 'ஏ' அணி நான்கு நாள்கள் மட்டும் நடக்கும் மூன்று போட்டிகள் கொண்ட அதிகாரப்பூர்வமற்ற டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. மைசூரில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட் கர்நாடகாவில் உள்ள ஷிமோகாவில் நேற்று முன் தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணியின் அணித்தலைவர் கிர்க் எட்வர்ட்ஸ் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.
மேற்கிந்திய தீவுகள் அணிக்கு போவெல்(33 ஓட்டங்கள்) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அணித்தலைவர் கிர்க் எட்வர்ட்ஸ்(18 ஓட்டங்கள்), நர்சிங் டியோனரின்(2 ஓட்டங்கள்) ஏமாற்றினர். பின் இணைந்த பிராத்வைட், ஆசாத் புடாதின் ஜோடி பொறுப்பாக ஆடியது. இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் இருவரும் அரைச்சதம் கடந்தனர்.
நான்காவது விக்கெட்டுக்கு 117 ஓட்டங்கள் சேர்த்த போது புடாதின்(63 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார், பிராத் வைட்(82ஓட்டங்கள்) நம்பிக்கை அளிக்க, வால்டன்(30ஓட்டங்கள்) ஓரளவு கைகொடுத்தார். முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 6 விக்கெட்டுக்கு 283 ஓட்டங்கள் எடுத்தது. லியோன் ஜான்சன்(36 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் பார்கவ் பாட் 3 விக்கெட் கைப்பற்றினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அனுபவ வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான், ஒரே ஒரு விக்கெட் மட்டும் வீழ்த்தி ஏமாற்றம் தந்தார். (கு)

# சச்சின் ஓய்வு பெற அறிவுரை

கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றார். தற்போது சச்சின் டெஸ்ட் போட்டியில் மட்டுமே விளையாடி வருகிறார். 198 டெஸ்டில் ஆடியுள்ள இவர், மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான தொடரில் 200ஆவது டெஸ்டில் விளையாடி புதிய வரலாற்றைப் படைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
200ஆவது டெஸ்டோடு சச்சின் ஓய்வு பெறுவார் என்று கூறப்படுகிறது. ஆனால் இதுவரை சச்சின் ஓய்வு பற்றி வாய் திறக்கவில்லை. 200ஆவது டெஸ்டுக்கு பின்பு அவர் தொடர்ந்து விளையாடும் எண்ணம் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.
இந்நிலையில் 200ஆவது டெஸ்ட் போட்டியோடு சச்சினை ஓய்வு பெறுமாறு கிரிக்கெட் சபை வலியுறுத்தும் என்று ஆங்கில முன்னணி நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.
கிரிக்கெட் சபையின் மூத்த நிர்வாகி ஒருவர் சச்சினை [illegible] ஓய்வுபெறுமாறு வலியுறுத்துவார் என்றும் அவரிடம் இந்தத் தகவலை சொல்பவர் பெயர் விவரம் பகிரங்கமாக வெளியிடப்பட வில்லை என்றும் இது உறுதியான தகவல் எனவும் அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.
சச்சினின் ஆட்டம் தற்போது மிகவும் சிறப்பாக இல்லை என்று கிரிக்கெட் சபை கருதுகிறது. இதனால் தான் 200ஆவது டெஸ்டோடு அவரை ஓய்வு பெற வைப்பதில் தீவிர மாக உள்ளது.
சச்சின் கடைசியாக 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கெதிராக கேப்டவுன் டெஸ்டில் சதம் (146 ஓட்டங்கள்) அடித்தார். அதன்பிறகு அவர் 22 டெஸ்ட் விளையாடியும் சதம் அடிக்கவில்லை. கடந்த 12 டெஸ்டில் இரண்டு அரை சதமே அடித்துள்ளார்.
சச்சின் 198 டெஸ்டில் 15,837 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அதிகபட்சம் 248 ஓட்டங்கள் ஆகும். 51 சதமும், 67 அரை சதமும் அடித்துள்ளார். (கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் லீக் உதைபந்து ஆர்சனல், பார்சிலோனா வெற்றி

சம்பியன்ஸ் லீக் உதைபந்து போட்டியின் லீக் சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் ஆர்சனல், ஸ்பெயினின் பார்சிலோனா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள புகழ்பெற்ற உதைபந்து அணிகள் சம்பியன்ஸ் லீக் போட்டியில் விளையாடி வருகின்றன.

தகுதிச் சுற்றைத் தொடர்ந்து கடந்த செப்டம்பர் 17 ஆம் திகதி பிரதான சுற்று ஆட்டங்கள் தொடங்கின. இந்தப் போட்டியின் இறுதிச் சுற்று அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெற உள்ளது. தகுதிச் சுற்றைத் தொடர்ந்து, 8 பிரிவுகளில் 32 அணிகள் பிரதான சுற்றில் விளையாடி வருகின்றன.

லீக் சுற்றின் 2ஆவது கட்ட ஆட்டம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

**ஒஸில் அபராம்:**

எப்' பிரிவில் இடம் பெற்றுள்ள ஆர்சனல் மற்றும் இத்தாலியைச் சேர்ந்த நபோலி அணிகளுக்கு இடையேயான ஆட்டம் லண்டனில் நடைபெற்றது. ஆட்டம் தொடங்கி 8ஆவது நிமிடத்திலேயே ஆர்சனல் வீரர் ஒஸில் ஒரு கோலடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

தொடர்ந்து உற்சாகமாக விளையாடிய அந்த அணிக்கு அடுத்த 7 நிமிடங்களுக்குள் ஜிரெட் மூலம் மற்றொரு கோல் கிடைத்தது. முடிவில் ஆர்சனல் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் எப்' பிரிவில் ஆர்சனல் அணி 6 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது.

ரியல் மட்ரிட் அணியிலிருந்து ஆர்சனல் அணிக்கு சமீபத்தில் தான் ஒஸில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஜேர்மனைச் சேர்ந்த ஒஸில், தொடர்ந்து சிறப்பாக விளையாடுவேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



**அணியை மீட்ட பப்ரிகாஸ்:**

எச்' பிரிவில் இடம் பெற்றுள்ள ஸ்காட்லாந்தைச் சேர்ந்த செல்டிக், ஸ்பெயினைச் சேர்ந்த பார்சிலோனா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ஸ்காட்லாந்தில் நடைபெற்றது.

நெய்மர், பப்ரிக்காஸ் உள்ளிட்ட திறமை வாய்ந்த வீரர் களைக் கொண்ட பார்சிலோனா அணி இந்த ஆட்டத்தில் ஆக்ரோஷமாக விளையா டியது.

அதேபோல் செல்டிக் வீரர்களும் சிறப்பாக விளையாடினர்.

எனினும் முதல் பாதி யில் இரு அணிகளுக்கும் கோல் கிடைக்கவில்லை.

ஆட்டத்தின் 76ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் பப்ரிக்காஸ் அசத்தலாக ஒரு கோல் அடித்தார். இறுதியில்அந்தகோலே வெற்றி கோலாக அமைந்தது. முடிவில் 1-0 என்ற கோல் கணக்கில் பாரிசிலோனா வெற்றி பெற்றது.புள்ளிகள் பட்டியலில 6 புள்ளிகளுடன் பார்சிலோனா அணி முன்னிலையில்உள்ளது.

**செல்சியா கோல் மழை:**

ஈ' பிரிவில் இடம் பெற்றுள்ள இங்கிலாந்தின் செல்சியா அணிக்கும், ருமேனியாவின் ஸ்டியுவா அணிக்கும் இடையிலான ஆட்டம் ருமேனியாவில் நடைபெற்றது.

இந்த ஆட்டம் முழுவதும் பலம் வாய்ந்த செல்சியா அணியே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 20 மற்றும் 55ஆவது நிமிடங்களில் செல்சியா வீரர் ரமிரெஸ் 2 கோல்களை அடித்து அசத்தினார். இதைத் தொடர்ந்து செல்சியாவுக்கு மேலும் 2 கோல்கள் கிடைத்தன. முடிவில் 4-0 என்ற கோல் கணக்கில் செல்சியா வென்றது.

உள்ளூரில் நடைபெற்ற போட்டியில் ஸ்டியுவா வீரர்கள் ஒரு கோல் கூட அடிக்காதது. ருமேனியா ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

நெதர்லாந்தின் அஜக்ஸ், இத்தாலியின் மிலன் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிந்தது.

ஸ்பெயினின் பலம் வாய்ந்த அட்லெடிகோ, போர்ச்சுகலின் பொர்டோ அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில், 2-1 என்ற கோல் கணக்கில் அட் லெடிகோ வெற்றி பெற்றது.

(த)

# 2015 உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெல்லும்

2015ஆம் ஆண்டு நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி மீண்டும் சம்பியன் பட்டம் வெல்லும் என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் இணைந்து உலகை கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன.

மொத்தம் 44 நாள்கள் நடக்கும் இந்தத் தொடரில், அரையிறுதி, இறுதிச்சுற்று உட்பட மொத்தம் 49 போட்டிகள், 14 மைதானங்களில் நடக்க உள்ளது.

இதில் இந்திய அணி, 'பி' பிரிவில் பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, அயர்லாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் தகுதிச் சுற்றில் தெரிவாகும் ஒரு அணியுடன் இடம் பிடித்துள்ளது.

கடந்த 2011இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி சம்பியன் பட்டம் வென்று சாதித்தது.

இதேபோன்று 2015இல் நடக்கும் போட்டியிலும் இந்திய அணி பட்டத்தை வெல்லும் என நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 2015ல் இந்திய அணி கிண்ணத்தை வெல்லும். **இது எனது விருப்பம் மட்டுமல்ல,** கோடான கோடி ரசிகர்களின் விருப்பம்.

இந்திய அணியில் இடம் பெற்றுள்ள நிறைய வீரர்கள், ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள்.எனவே அங்குள்ள ஆடுகளத்தின் தன்மை, தட்ப வெப்ப நிலைக்கேற்ப விளையாடுவார்கள்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய அணி நியூசிலாந்து பயணம் செய்ய இருப்பது, உலகை கிண்ணத் தொடருக்கான சிறந்த பயிற்சியாக அமையும்.இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட அணிகளிலும் திறமையான வீரர்கள் இருப்பதால், ஆசிய அணிகளுக்குப் பட்டத்தை வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(த)



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.10.2013 சனிக்கிழமை
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 1.00-03.00
4. மாலை 3.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

வெறும் எட்டரை இலட்சம் ரூபா மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாடொன்றில் படிக்க மாதம் இரண்டு இலட்சம் வரை உழைக்க அரிய வாய்ப்பு

உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம் இதைவிட வேறு என்ன வேண்டும்? 7 நாள்களும் காலை 8.30- பி.ப. 6 மணிவரை



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090



புதிய பி...வுகள் ஆரம்பம்
Chartered Accountancy
Foundation Level & Intermediate Level
(CAB - I & CAB - II)
Medium: English & தமிழ்
Minimum Requirement: GCE A/L 3 Passes
இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பதிவை மேற்கொள்ளலாம்.
வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்
CBF, DBF
அடிப்படைத் தகைமைகள்
G.C.E (O/L) 06 PASSES WITH 05 Credits including Maths/ Commerce & Accounts and Language (Tamil/ English)
Further Detail,
Director
Jaffna College Undergraduate Dept.
#464, Hospital Road, Jaffna. 021 222 3382
(c12556)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.